REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 டிசம்பர் 13 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 295 | Monday 13,December, 2021 | 20பக்கங்கள் | 30/-

ஜனாதிபதி தலைமையில் இன்று இடம்பெறும்

அமைச்சரவைக் கூட்டத்தில் இரண்டு முக்கிய புள்ளிகள்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்திற்கு நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுனரும் அழைக்கப்பட்டுள்ளனர். 06

நிலையான வளர்ச்சி திட்டத்திற்கு துல்லியமான தரவுகள் அவசியம்

சனத்தொகை, குடும்பக்கணக்கெடுப்பு அடுத்த வருடம் – பிரதமர்

2021 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவிருந்த சனத்தொகை மற்றும் குடும்பக் கணக்கெடுப்பு 2022/2023 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். "நிலையான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு துல்லியமான தரவுகள் தேவை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அதில் முக்கிய பங்காற்றுகிறது. எனவே, 2021 இல் முன்னெடுக்கப்படவிருந்த சனத்தொகை மற்றும் 06

பூஸ்டர் தடுப்பூசி பெறாவிடின் கொரோனா சுனாமியே வரலாம்

இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன எச்சரிக்கிறார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பண்டிகைக் காலங்களை கழிப்பதற்கு எண்ணியுள்ளோர் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தாமல் செயற்பட்டால் வருட இறுதியில் நாட்டில் கொரோனா சுனாமியொன்றே ஏற்படலாம் என மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றின் பின்னர் அமைச்சர் அதுதொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில், 06

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு

அரிசி, சீனி உள்ளிட்ட 50 வகை பொருட்கள் குறைந்த விலையில்

சதொசக்களில் பெறலாம் என்கிறார் வர்த்தக அமைச்சர் பந்துல

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அதற்கிணங்க எதிர்வரும் டிசம்பர் 31ம் திகதி வரை அரிசி உள்ளிட்ட 50 அத்தியாவ 06

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய

கொழும்பில் திடீரென கூடிய தமிழ், முஸ்லிம் தலைவர்கள்

படம்: எம்.ஜாவித்

எதிர்வரும் 21 ஆம் திகதியன்று பொது யோசனைகளை முன்வைக்க தீர்மானம்

தமது யோசனைகளை அரசாங்கம், இந்திய அரசாங்கம் மற்றும் சர்வதேசத்துக்கும் வழங்க முடிவு

(லோரன்ஸ் செல்வநாயகம், ஏ.எஸ்.எம். ஜாவித்)

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பொது யோசனைகளை எதிர்வரும் 21ம் திகதி வெளியிடுவதற்கு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் 06

43rd OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021
SLTMOBITEL

43 ஆவது ஒப்சர்வர் – SLT Mobitel

பாடசாலை கிரிக்கட் விருது வழங்கும் விழா நாளை

ராஜபக்ஷ – நிமேஷா பிரபலமான வீரர்களாக தெரிவு

றோயல் கல்லூரியைச் சேர்ந்த சதிஷா ராஜபக்ஷ, 2021 ஆம் ஆண்டின் சண்டே ஒப்சர்வர் எஸ்எல்ரி மொபிடெல் மிகவும் பிரபலமான பாடசாலை வீரர், துடுப்பாட்ட வீரராகவும், மாரப்பொல மத்திய கல்லூரியைச் சேர்ந்த நிமேஷா தருணி, 06

புலமைப் பரிசில் மாணவருக்கு இலவச Data வழங்க திட்டம்

தேசிய நூலகம் கனடா நிறுவனத்துடன் ஒப்பந்தம்

இலங்கை தேசிய நூலகம் மற்றும் கொமன் வெல்த் ஒப் லேர்னிங் கனடா நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் புலமைப்பரிசில் வேலைத்திட்டம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாதாந்தம் இலவசமாக Data பெற்றுக் கொடுப்பதற்கு ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. அது தொடர்பான 06

இந்தியாவிடம் உதவியை கோருவதில் தவறில்லை

அரசாங்கத்தை அறிவுறுத்தும் எதிர்க் கட்சி

இலங்கை மக்களை இந்தியா கைவிடாது. எனவே இலங்கை மக்களுக்கு உணவு மற்றும் மருந்துகளை பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியாவிடம் நிதியை பெறுமாறு எதிர்க்கட்சி, அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதா இல்லையா என்பது குறித்து தம்மிடம் வாதிடாமல், இன்றைய தினம் அமைச்சரவைக்கு சென்று அங்கு வாதிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் 06

சீமெந்தை அதிக விலைக்கு விற்றால் சட்ட நடவடிக்கை

நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

சீமெந்து நிறுவனங்கள் நிர்ணயித்த அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் சீமெந்து விற்பனையாளர்களைக் கண்டுபிடிக்க சோதனைகளை ஆரம்பித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதன்படி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். தற்போது ஒரு மூடை சீமெந்துக்கு நிறுவனங்கள் 06

நுரைச்சோலையில் கோளாறு;

சில பிரதேசங்களில் அரை மணிநேர மின்வெட்டு

மின்சக்தி அமைச்சு நேற்று அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நுரைச்சோலை லக்விஜய அனல்மின் உற்பத்தி நிலையத்தின் 2வது மின் உற்பத்தி இயந்திரம் மீண்டும் தொழில் நுட்பக் கோளாறுக்கு உட்பட்டுள்ள காரணத்தால் நாட்டின் சில பிரதேசங்களில் மின் துண்டிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. 06

நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு வராது

விவசாய அமைச்சர் உறுதி

நாட்டில் அரிசிக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இரசாயன உரத்துக்கான தடையை யடுத்து நாட்டில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வயல் நிலங்கள் அழியும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் எனப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டினர். 06

13க்கு அப்பால் முயற்சிக்கையில் ஐ அமுல்படுத்த கோரும் சிலர்

ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

(சுமித்தி தங்கராசா)

13க்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது, 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். சுன்னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் "தமிழர்தம் அபிலாசைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர் 06

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம்;

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்

தமது நிலைப்பாடு அது என்கிறார் பிரசன்ன ரணதுங்க

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இன்றும் தாம் உள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் 06

இரத்தினபுரியில் 310 Kg எடையுள்ள

உலகின் பெரிய நீலநிற மாணிக்கக்கல் கண்டுபிடிப்பு

"ஆசியாவின் ராணி" என பெயர் சூட்டப்பட்டது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உலகின் மிகப்பெரிய தனி 'ப்ளூ ஸபயர்' மாணிக்கக்கல் இலங்கையில் இரத்தினபுரியில் கிடைத்துள்ளதாக தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார 06

அத்தியாவசிய உணவுப்பொருள் அடங்கிய

கொள்கலன்கள் தொடர்ந்தும் துறைமுகத்தில் தேக்கம்

விடுவிக்க டொலர் இல்லாமையே காரணமாம் 03

பட்டப்பின் படிப்புக்காக அரசு 25 மில். நிதி ஒதுக்கீடு;

கற்கையை இடை நடுவிலேயே கைவிட்ட விரிவுரையாளர்கள்

கோப் குழு முன்பாக குற்றச்சாட்டு முன்வைப்பு 03

சமாதானத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தும் தேச விரோதிகள்

பிரிவினைவாத சக்திகளால் நாட்டுக்கு பேராபத்து 03

திருப்பதியானுக்கு 5.3 Kg எடையில் தங்கக்கைகள்

பக்தர் ஒருவர் காணிக்கையாக வழங்கினார்

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு 5.3 கிலோ எடையில் வைரம் மற்றும் மாணிக்க கற்கள் பதிக்கப்பட்டு ரூ. 3 கோடியில் தங்கத்தால் தயாரிக்கப்பட்ட கைகளை பக்தர் ஒருவர் காணிக்கையாக வழங்கியுள்ளார்.

அதை, கோவிலில் உள்ள ரெங்கநாயக்கர் மண்டபத்தில் பக்தரிடம் இருந்து திருமலை திருப்பதி தேவஸ்தான கூடுதல் முதன்மைச் செயல் அலுவலர் 06

அற்புதமான நடிப்பால் மக்களை ஊக்கப்படுத்துங்கள்

– ரஜனிகாந்துக்கு பிரதமர் மோடி வாழ்த்து

அற்புதமான நடிப்பால் மக்களை தொடர்ந்து ஊக்கப்படுத்த வேண்டும் என நடிகர் ரஜனி காந்துக்கு பிரதமர் நரேந்திர மோடி பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டும் வழக்கம் போல ரஜனி தனது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுடன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை பிறந்தநாளை கொண்டாடினார். அவருக்கு பல்வேறு கட்சி தலைவர்கள் 06

பிச்சை எடுக்கும் ஒருவருக்கு இரண்டு சொந்த வீடுகள்!

கைதான பெண்ணை விசாரித்த பொலிஸார் அதிர்ச்சியில்

தொழிலதிபர் ஒருவரின் ஏ.டி.எம். அட்டையைப் பயன்படுத்தி சுமார் 200,000 ரூபாவை மோசடி செய்த பிச்சைக்காரப் பெண் ஒருவரை மொரட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எகொட உயன பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவர் தனது ஏ.டி.எம். அட்டை தவறிவிட்டதாகவும், அதில் இருந்து சுமார் 130,000 ரூபாவை ஒருவர் மோசடி செய்துள்ளதாகவும் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் வடக்கு களுத்துறை, விலேகொட பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடைய 06

விக்கல் வீராச்சாமி

ஜீவன் தொண்டாவின் பேச்ச கேட்டா ஊடகங்களுக்கு அறிக்கைகள விட்டு ஃபேஸ்புக்கில் அரசியல் நடத்துறவை நாக்க புடுங்கிட்டு.....

நல்லா புரியுது, அவர் சேவை செய்ய பிறந்த குடும்பத்தவர், இவங்க தேவையில்லாத அறிக்கைகள விட்டா யாருக்குத்தான் கோபம் வராது...!!!

போரா சமூகத்தின் ஆன்மிகத் தலைவர் கலாநிதி செய்யதினா முஃபத்தல் செய்ஃபுத்தீன் சஹெப், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் (11) மிரிஹானையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் சந்தித்தார். ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் போரா சமூகத்தின் உறுப்பினர்கள் சிலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

போரா சமூகத்தின் ஆன்மிகத் தலைவர் கலாநிதி செய்யதினா முஃபத்தல் செய்ஃபுத்தீன் சஹெப், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் (11) கொழும்பில் சந்தித்தார்.

லேக் ஹவுஸ் நிறுவன 'முத்து அஹுர' சஞ்சிகை சிறுவர் சித்திர கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. பிரதம அதிதி ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொண்ட நிகழ்வில், நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ தயாரத்ன அருகில் நிற்பதனையும் காணலாம்.
(படங்கள்: அஷ்ரப் ஏ சமத், ரஞ்சித் அசங்க)

டொக்டர் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அரு ஸ்ரீகலையகம் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து வழங்கிய'அபூர்வம்' என்ற நாட்டிய நிகழ்ச்சி நேற்று முன்தினம் கொழும்பு பிஷப் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. அமைச்சர் சமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகவும் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்ளே சிறப்பு விருந்தினராகவும் இந்நிகழ்சியில் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 டிசம்பர் 13 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
12 முதல் 14 வரை
சுபஹ் - 04.51
லுஹர் - 12.06
அஸர் - 03.28
மஃரிப் - 05.57
இஷா - 07.12

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் கார்த்திகை 27
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

நாட்டுக்கு வரும் விமானப் பயணிகள்;

சுகாதாரம் தொடர்பான தகவல்களை ஒன்லைன் மூலம் சமர்பிப்பது கட்டாயம்

ஜனவரி முதலாம் திகதி முதல் புதிய நடைமுறை
-சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டுக்கு வரும் அனைத்து விமானப் பயணிகளும் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் அனைத்துத் தகவல்களையும் ஒன்லைன் மூலம் பெற்றுக்கொடுப்பதை உறுதி செய்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவரால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க குறித்த விமானப்பயணி பெற்றுக்கொண்டுள்ள தடுப்பூசி தொடர்பான அறிக்கை, தாம் புறப்பட்ட நாட்டிலிருந்து விமானப் பயணத்துககு முன்பதாக கொரோனா தொற்று தமக்குக்கிடையாது என உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை, கடவுச் சீட்டின் பிரதி ஆகியவற்றை ஒன்லைன் மூலம் அவர் அனுப்புவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

சமையல் எரிவாயு பாவனையாளர்கள் :

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் சமயல் எரிவாயு ஒழுங்குபடுத்தல் தொடர்பில் அதிக குறைபாடுகள் காணப்படுவதாகவும் எனினும் தற்போது சமையல் எரிவாயு பாவனையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு ஒழுங்குபடுத்தலில் குறைப்பாடுகள் உள்ளதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் இது எமது அரசாங்க காலத்தில் மட்டுமன்றி கடந்த 30 40 வருடங்களுக்கு மேல் தொடர்ந்துள்ளதாகவும் கடந்த 40 வருடங்களாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் காலத்திலும் சமையல் எரிவாயு ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பில் சிக்கல்கள் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று சீனிகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரமேஷ் பத்திரன இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் சமையல் எரிவாயு ஒழுங்குபடுத்தல் தொடர்பில் பெரும் குறைபாடுகள் இருந்துள்ளன. அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நாம் எந்த தவறையும் ஏற்றுக்கொள்கின்றோம். தவறுகள் இடம்பெற்றால் அதனை ஏற்றுக்கொள்வது முக்கியமாகும் என்ற வகையில்

06

20 வயதுக்கு மேற்பட்டோருக்கும் விரைவில் 3 ஆவது டோஸ்

கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

எதிர்காலத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் திலீப் லியனகே தெரிவித்தார்.

இதேவேளை, 30 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களுக்கு தற்போது பூஸ்டர் டோஸ் வழங்கப்படுகின்றது.

30 வயதுக்குட்பட்டவர்களுக்கான அதிகரிக்கப்பட்ட மருந்தளவை இரண்டு வாரங்களுக்குள் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி

06

மத்திய வங்கியின் நிபந்தனைகள் மீறல்;

நாணய மாற்று நிறுவனங்கள் 4க்கு எதிராக சட்டநடவடிக்கை

நான்கு நாணயமாற்று முகவர் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நிபந்தனைகளுக்கு மாறாக செயல்பட்டதற்காக 4 நாணய மாற்று முகவர் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் வங்கிகளால் வழங்கப்படும் வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களை அதிகரிக்கும் அதிகாரம் நாணய மாற்று நிறுவனங்களுக்கு இல்லை என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சமாதானத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தும் தேச விரோதிகள்

பிரிவினைவாத சக்திகளால் நாட்டுக்கு பேராபத்து

(ஸாதிக் ஷிஹான்)

போராடிப் பெற்ற சமாதானத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சில விரோத சக்திகள் மற்றும் சமூக விரோதிகள் செயற்படுபடுவதாக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார். அவ்வாறான சக்திகள் இனங்களுக்கு மத்தியில் அவநம்பிக்கை மற்றும் பிளவு மனப்பாங்கை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பிலுள்ள தாமரைத்தடாக மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலை அதிகாரிகள் கல்லூரியின் 15ஆவது கற்கை நெறிக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கமல் குணரட்ண, இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு எதிராக எழும் பேரபாயங்களை தடுப்பதே தமது பாரிய பொறுப்பு என குறிப்பிட்டார். அத்துடன் நட்பு நாடுகளின் புலனாய்வு அமைப்புகளுக்கு இடையே புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொள்வதானது பேரபாயங்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு முக்கிய காரணியாக உள்ளதாக தெரிவித்தார். வெளி நாட்டில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் மற்றும் அதன் மறைமுக ஆதரவான உள்ளூர் சக்திகள் பிரிவினைவாத சித்தாந்தத்தை கொண்டிருப்பதனால் அச்சுறுத்தல் ஏற்படுவதாகக் கூறிய அவர், அதனை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மூலம் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

பட்டப்பின் படிப்புக்காக அரசு 25 மில். நிதி ஒதுக்கீடு;

கற்கையை இடை நடுவிலேயே கைவிட்ட விரிவுரையாளர்கள்

கோப் குழு முன்பாக குற்றச்சாட்டு முன்வைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

2001 _ 2017 கால கட்டத்தில் பட்டப்பின் படிப்பு கற்கைக்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 13 பேருக்கு 25 மில்லியன் ரூபா நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அந்த தரப்பினர் தற்போது குறித்த பட்டப்படிப்பை கைவிட்டுச் சென்றுள்ளதாக கோப் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2017ம் ஆண்டு 8 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 12 விரிவுரையாளர்களுக்கு ஆய்வுகளுக்காக 34.3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அது உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லையென்றும் அக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள 15 பேர் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் இத்தகைய சூழ்நிலையில் அவர்கள் அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் தொடர்பில் கோப் குழுவில் ஆராயப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார். 2019 வருடத்திற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் நடைமுறை செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பேராசிரியர் சரித்த ஹேரத் தலைமையிலான கோப்குழு கடந்த 8ம் திகதி கூடியுள்ளது. அதன்போதே இந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. (ஸ)

அத்தியாவசிய உணவுப்பொருள் அடங்கிய

கொள்கலன்கள் தொடர்ந்தும் துறைமுகத்தில் தேக்கம்

விடுவிக்க டொலர் இல்லாமையே காரணமாம்

சுமார் 1500 க்கும் மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் விடுவிக்க முடியாமல் கொழும்பு துறைமுகத்தில் தொடர்ந்தும் தேங்கியுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக பணம் செலுத்தி அவற்றை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாமென இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கொள்கலன்களில் உருளைக்கிழங்கு, கடலை, செத்தல் மிளகாய், பருப்பு மற்றும் மசாலா உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்கள் இருப்பதாகவும், அவற்றின் மதிப்பு 150 மில்லியன் டொலர் முதல் 200 மில்லியன் டொலர் வரை இருக்கும் என்றும் கூறப் படுகிறது.

இ.போ.ச பஸ் வண்டிக்கு கல்வீச்சு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டியவில் இருந்து மகரகம வரையில் பயணிக்கும் எம்பிலிப்பிட்டிய பஸ் டிப்போ வுக்குச் சொந்தமான இ.போ.ச பஸ் வண்டிக்கு இனம் தெரியாதோர் கல்வீச்சு நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று (12) பிற்பகல் இடம்பெற்றுள்ளது. எம்பிலிப்பிட்டிய துங்கம பிரதேசத்தில் இந்த கல்வீச்சு இடம்பெற்றுள் ளது. இச்சம்பவத்தால் பஸ் வண்டிக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக துங்கம பொலிஸார் தெரிவித்தனர். எம்பிலிப்பிட்டிய முதல் அதிவேக வீதியில் பயணிக்கும் இந்த பஸ் வண்டி மீதான தாக்குதல் முயற்சி குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ 0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk

தினகரன்
THINAKARAN
திகைரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் கார்த்திகை மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 08

குறள் தரும் சிந்தனை

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்

நல்ல இனத்தைக் காட்டிலும் துணையாக இருப்பதும், தீய இனத்தைக் காட்டிலும் துன்பம் தரக் கூடியதும் எதுவுமே இல்லை.

யாழ். தீவுப் பகுதி நிலைமைகளை ஆராய ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேரில் விஜயம்

வடக்கு கடற்படை கட்டளைத் தளபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வடக்கு தீவுகளுக்கான விஜயமானது பல பொருளாதார, சமூக மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கும், வாழ்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், தீவுப் பகுதிகளில் வாழும் சமூகங்களின் வறுமையை அகற்றுவதற்கும், நிர்வாக உதவிகளை அதிகரிப்பதற்குமான வழிவகைகளை அறிந்து கொள்வதற்கு உதவியது.

ஆளுநர் காரைநகரிலிருந்து கடல் வழியாகச் சென்று எழுவைதீவு, அனலைதீவு, பாலைதீவு, கக்கரைதீவு மற்றும் கச்சதீவுகளை நெடுந்தீவு வழியாக பார்வையிட்டார். அன்றைய தினம் முழுவதும் கடல் பயணத்தில் கழித்த பின்னர் மாலையில் காங்கேசன்துறை துறைமுகத்தின் பிரதான நிலப்பகுதிக்குத் திரும்பினார்.

வடக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பிரியந்த பெரேரா மற்றும் இலங்கை கடலோரக் காவற்படையின் தலைவர் புத்திக ஆகியோர் ஆளுநருடன் சென்றிருந்தனர்.

இலங்கை கடற்படை கப்பல் 'இலர' மற்றும் இலங்கை கடற்படை கப்பல் 'வசப' ஆகியவற்றின் கட்டளை அதிகாரிகள் தத்தமது பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆளுநருக்கு நிலைமைகளை எடுத்து விளக்கினர். ஆளுநர் நெடுந்தீவு மற்றும் கச்சதீவுக்கு அருகில் உள்ள கடற் பகுதிகளில் இந்திய மீன்பிடி இழுவை படகுகள் கடற் சட்டத்தை மீறி அத்துமீறி மீன்பிடிப்பதை அவதானித்தார்.

மேலும் இழுவை படகுகள் மூலம் மீன்பிடித்தல், வடக்கு கடலில் உள்ள கடல் வளங்களை அழித்தல் மற்றும் சட்டவிரோதமாக மீன் பிடித்தல் போன்ற பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. அத்து மீறலை தடுக்க இலங்கை கடற்படையும், கடலோர காவற்படையும் தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டாலும், எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய்து வழக்குத் தொடுத்த போதிலும், அடிக்கடி இவ்வாறான அத்துமீறல் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது என்பதையும் அதிகாரிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

இதன் போது ஆளுநர் வடக்கு கடற்படைத் தளபதியுடன் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்து விவாதித்தார். இந்தப் பயணத்தின் போது ஆளுநர் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொரு தீவு தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறு ஆளுநர் அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தினார்.

அவ்வாறு ஆளுநரால் முன்வைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் பின்வருமாறு:

படகுகள் மூன்றும் கடற்படையின் உதவியுடன் இயக்கப்பட வேண்டும். தீவில் வசிப்பவர்கள் அல்லாதவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படும் போது, ஊழியர்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு உதவி வழங்கப்படும்.

தீவுகளின் மருத்துவ வசதிகளுக்கு யாழ் போதனா வைத்தியசாலை வழிகாட்டி மருத்துவமனையாக செயற்படுவதுடன் இயன்றளவு அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் நடமாடும் மருத்துவ சேவைக்கு பெறப்படும். பல இடங்களில் படகு சேவை மேம்படுத்தப்பட வேண்டும். கட்டுமான பொருட்களுக்கான மொத்த போக்குவரத்து சேவை மற்றும் அத்தியாவசிய உணவு வழங்கும் கூட்டுறவு சேவையை ஆரம்பித்தல்.

ஊர்காவற்றுறையில் குடும்ப வறுமையை சாதகமாகப் பயன்படுத்தி சில பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சிலர் தவறான செயற்படுகளில் ஈடுபடுத்த முற்படுகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மீட்டெடுக்க உதவ வேண்டும்.

ஒவ்வொரு தீவு வாழ் குடிமக்களுக்கும் நீர் கிடைப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு வறிய குடும்பங்களின் முன்னேற்றத்துக்கும் அலுவலர்கள் மற்றும் திட்டமிடல் அலுவலர்கள் குழுக்களாக இணைந்து ஆதரவு அளிக்க வேண்டும். யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் வடக்கு மாகாண சபையினால் ஒவ்வொரு தீவுக்கும் வழிகாட்டி அதிகாரிகளை நியமித்தல் அவசியம்.

பண்டிகைக் காலம் நெருங்குவதால் மிகுந்த விழிப்புணர்வு அவசியம்

இலங்கை நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டை எதிர்நோக்கியுள்ளது. இப்பண்டிகைக் கொண்டாட்டங்களுக்குத் தயாராக மக்கள் ஆரம்பித்துள்ளனர். ஆனால் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பு போன்று இம்முறையும் இப்பண்டிகைகளுக்கு தயாராக முடியாத சூழல்தான் காணப்படுகின்றது. கொவிட் 19 தொற்று பரவுதலின் அச்சுறுத்தலும் அதன் சவாலும் இன்னும் கட்டுப்பாட்டு நிலைக்கு வராதிருப்பது இதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

அதனால் இப்பண்டிகைகளுக்காகத் தயாராகும் இக்காலப் பகுதியிலும் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை ஒவ்வொருவரும் உச்சளவில் கடைப்பிடித்தாக வேண்டும். தவறும் பட்சத்தில் 2020 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டுக்காகத் தயாராகும் போதும், கடந்த சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியிலும் கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் அசிரத்தையோடும் கவனயீனமாகவும் நடந்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட தாக்கங்களுக்கு முகம் கொடுப்பதை தவிர்க்க முடியாததாகி விடும்.

கடந்த காலப் பகுதியில் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொண்டதன் விளைவாக இத்தொற்று தீவிரமாகப் பரவியதோடு, நாட்டை முடக்கியே இத்தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இதன் விளைவாக மக்களின் வாழ்வாதார வருமான மார்க்கங்களும் நாட்டின் பொருளாதாரமும் கூட பெரும் தாக்கங்களுக்கு உள்ளாகின. இந்த அனுபவங்களை இந்நாட்டு மக்கள் அவ்வளவு இலகுவில் மறந்திருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. அதனால் அவ்வாறான நிலைமை இம்முறையும் ஏற்படாதிருக்கும் வகையில் செயற்படுவது இன்றியமையாததாகும்.

தற்போது உலகம் கொவிட்19 தொற்றின் மற்றொரு திரிபான ஒமிக்ரோன் திரிபின் பரவுதல் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளது. இற்றை வரையும் 30 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இத்திரிபு பரவியுள்ளது. தற்போது இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களில் பெரும் பகுதியினர் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியைப் பெற்றிராதவர்களாவர். அவர்களில் பெரும் பகுதியினர் இளம் வயதினர் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமும், பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கமும், இந்நாட்டு மக்கள் மத்தியில் கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பிலான தற்போதைய கவனயீனமும் அசிரத்தையும் நீடிக்குமாயின் 2022 ஜனவரியாகும் போது இத்தொற்று தீவிரமடைய முடியும் என்று குறிப்பிட்டுள்ளன.

அதன் காரணத்தினால் கடந்த காலத்தைப் போன்றல்லாது மிகுந்த பொறுப்போடும் முன்னவதானத்துடனும் செயற்பட வேண்டிய காலப்பகுதி இது. அதன் ஊடாக இத்தொற்றின் பரவுதலுக்கு துணை போவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டு அண்மித்து வரும் தற்போதைய சூழலில், 'கொவிட் 19 தொற்று தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பூஸ்டர் தடுப்பூசியை அடுத்து வரும் இரு வாரங்களுக்குள் நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கி இருக்கின்றார்.

இந்த அறிவுறுத்தலுக்கு அமைய இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள சகலருக்கும் இந்த பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டு உள்ளது. ஜனாதிபதியின் இந்த அறிவுறுத்தலுக்கு அமைய 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படும்.

ஆகவே இத்தொற்று தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான பூஸ்டர் உள்ளிட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் ஒவ்வொருவரும் விஷேட செலுத்த வேண்டும். அதன் ஊடாக இத்தொற்றின் தாக்கத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அத்தோடு பண்டிகைக்காக தயாராகும் இக்காலப் பகுதியில் இத்தொற்றின் பரவுதலுக்கும் அதன் தீவிரமடைதலுக்கும் துணை போகாதபடி ஒவ்வொருவரும் தம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவும் தவறக் கூடாது. அதன் ஊடாக இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தல் அற்ற நத்தார் பண்டிகையையும் புத்தாண்டையும் அடைந்து கொள்ளலாம். அவையே நாடும் மக்களும் எதிர்பார்த்திருக்கும் இன்றைய பிரதான தேவைகளாகும்.

editor.tkn@lakehouse.lk

பாடசாலை கலைத்திட்டத்தில் மிருதுதிறன்களின் பங்களிப்பு

மிருதுதிறன்கள் என்பவை ஒரு தனி மனிதன் தன் வேலைத்தலத்தின் உள்ளேயும், வெளியேயும் பரந்தளவில் தனது வாடிக்கையாளர்களுடனும், சக தொழிலாளர்களுடனும் வினைத்திறனான முறையில் இடைவினை உறவு (Interacts) கொள்ள உதவும் ஆற்றலாகும். அதாவது ஆளுமைப் பண்புகள், மனப்பாங்குகள், நடத்தைகளை உருவாக்குகின்ற திறன்கள்(Skills), ஆற்றல்கள் (Abilities), பண்புகள்(Traits) போன்ற சிறப்பான தன்மைகளே மிருதுதிறன்கள் எனக் குறிப்பிடலாம்.

மிருதுதிறன்கள் அவை பயன்படுத்தப்படும் இடம், நிலை என்பவற்றிற்கேற்ப பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மக்கள் தொடர்புத் திறன்கள் (People's Skills) அல்லதுஆளுமைத் திறன்கள் (Personality skills), அறிகை சார் திறன்கள், கூட்டுத்திறன்கள், அவசியத் திறன்கள், பிரதான திறன்கள், முக்கிய திறன்கள்,

தொழிற்றிறன்கள், பரிமாறப்படக் கூடிய திறன்கள்,அளவுகோடிடப்பட்ட திறன்கள், தொழிலுக்கானதும், வாழ்நாள் கற்றலுக்குமான திறன்கள், தேர்ச்சிகள், இயலுமைகள், இயல்புகள், பண்புகள், பண்புக்கூறுகள் என அவற்றைக் குறிப்பிடலாம்.

மிருதுதிறன்கள் என்பவை பாட அல்லது கல்வியறிவு என்பதற்கும் அப்பால் ஒரு வேலைத்தலத்தில் செயற்படுவதற்கு தேவையான விடயங்கள் ஆகும். அதாவது குழுவாக வேலை செய்யும் ஆற்றல்களிடம் இடைவினை கொள்ளும் திறன்கள், தொடர்பாடற்றிறன்கள், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், தேடிக் கற்கும் ஆற்றல், தலைமை தாங்கும் ஆற்றல், நேரமுகாமைத்துவத் திறன்கள், பொறுமை, நேர்மை, தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், தர்க்க சிந்தனை போன்றவையாகும். அந்த வகையில்

மிருதுதிறன்கள் என்பவை ஒவ்வொருவரிடமும் உள்ளார்ந்தமாகக் காணப்படும் ஆற்றல்களாகும்.

பாடசாலைக் கலைத்திட்டத்தின் ஊடாக மிருதுதிறன்களை வளர்த்துக் கொள்ள முடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக அமைகின்றது. ஒரு பிள்ளையின் எல்லா விதமான விருத்திகளும் கல்வியினூடாகவே சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை. இவற்றை கல்வியினூடாக அடைவதற்கு உதவும் ஊடகமே கலைத்திட்டமாகும்.

'பிள்ளையினுடைய அறிவையும், ஆற்றலையும் வளர்த்து அவர்களைச் சூழலுக்கேற்ப தமக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன் தரும் வகையில் பொருத்தப்பாடுடையவர்களாக மாற்ற உதவும் பாடசாலைச் செயற்பாடுகள் யாவும் கலைத் திட்டம் என்பதனுள் அடங்கும். இன்றைய சூழலிலே மாணவனை வழிநடத்துவதில் பாடசாலை பெரும்பங்கு வகிக்கின்றது. பாடசாலைப் பருவத்தில் பெற்றோரை விட சகபாடிகள்,ஆசிரியர் தொடர்பாடலின் ஊடாகவேமாணவர்கள் வழிநடத்தப்படுகின்றனர். எனவே பாடசாலைச் செயற்பாடுகள் யாவும் பயன் விளைவுள்ளதாக அமைதல் அவசியம். அப்போதுதான் கல்வியின் நோக்கங்கள் எய்தப்பட முடியும். இந்நோக்கங்கள் எய்தப்படுவதற்கு பாடசாலைச் செயற்பாடுகள் யாவும் உள்ளடக்கப் பெறும் கலைத்திட்டம் பெரும் பங்காற்றுகின்றது. ஒரு பாடத்தினைத் தெரிவு செய்து மிருதுதிறன்களை விருத்தியடையச் செய்ய உதவும் செயற்பாடுகளை பெருமளவில் இணைத்து கற்றல் கற்பித்தலைமுன்னெடுத்தல் சிறந்தது. (Standalone Subject Model) பாடக்கலைத்திட்டத்திலுள்ள எல்லாப் பாடங்களின் ஊடாகவும் முன்னெடுத்தல், பாடமேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முன்னெடுத்தல் (Subject Improvement Programs).

ஒவ்வொரு பாடத்திற்கும் பாடமேம்பாட்டு நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. உதாரணமாக சுற்றாடல் பாடத்திற்கு சூழல் தினம், சுற்றாடல்சார் கண்காட்சி, மன்றச் செயற்பாடுகள், வினாடிவினாப் போட்டிகள், ஆய்வு, சுற்றுலா, பாடம்சார் மென்பொருள் தயாரிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பாடசாலைநிகழ்வுகளின் ஊடாக வளர்த்தல்:

உதாரணமாக தமிழ்மொழித்தினம், விளையாட்டுப்போட்டி, ஆங்கிலதினம், பரிசில் தினம்,பாடசாலைத் தினம், மன்றச் செயற்பாடுகள் போன்றன.

பல்வேறுவிழாக்கள்:

பெரும்பாலான மாணவர்கள் பங்கேற்கும் இத்தகைய நிகழ்வுகளின் ஊடாக மிருதுதிறன்களை மாணவர்களிடையே வளர்த்தெடுக்க முடியும் என்பது தெளிவு. இந்த வகையிலே ஒன்றிணைந்த ஆளுமையுடைய பிரஜைகளை நாட்டிற்கு வழங்குவதற்கு தனித்து அறிவுசார் விடயம் மட்டுமல்லாது மிருதுதிறன்களையும் விருத்தியடையச் செய்தல் மிகஅவசியம்.

சு.இரகுராகவன்
B.F.A, PGDE
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

ஆப்கானிஸ்தானில் கொடிய பஞ்சத்தினால் 10 இலட்சம் குழந்தைகள் பலியாகும் ஆபத்து

ஆப்கானிஸ்தானில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக அங்கு சுமார் 10 இலட்சம் குழந்தைகள் இந்த குளிர்காலம் முடியும் முன்னர் பலியாகும் ஆபத்து உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் வெளியேறின. இதையடுத்து ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை பிடித்தனர்.

அங்கு தலிபான்களின் தலைமையிலான ஆட்சியில் பல்வேறு சர்ச்சைகள், கொடிய சம்பவங்கள், கொலைகள் தொடர்கின்றன. மக்கள் அச்சத்தினால் இடம்பெயர்ந்துள்ளனர். அங்கு உணவு பஞ்சமும் தொடங்கி விட்டது. பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாக மக்களின் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதேபோல் மேற்கு உலக நாடுகளின் இறக்குமதி குறைந்த காரணத்தால் கொஞ்சம் கொஞ்சமாக களஞ்சியங்களில் இருந்த உணவுகள் காலியாகத் தொடங்கின.

இப்போது ஆப்கானிஸ்தானில் உணவு தானியங்கள் இல்லாமல், அரசு மக்களுக்கு உணவு வழங்க முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறது. தலிபான்களும் பெரிய அளவில் சர்வதேச உறவுகளை கொண்டு இருக்கவில்லை என்பதால் அவர்களால் சர்வதேச உதவிகளை எளிதாக பெற முடியவில்லை.

இதன் காரணமாக தலிபான்களின் ஆட்சியின் கீழ் உணவுப் பஞ்சம் அதிகரிக்க தொடங்கி உள்ளது. போரால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு, வறுமை, இப்போது பஞ்சம் காரணமாக அந்நாட்டு மக்கள் கடுமையாக கஷ்டப்படுகின்றனர். ஆப்கானிஸ்தானில் 2.28 கோடி மக்கள் பசியால் பாதிக்கப்பட்டுள்ளனர். பஞ்சத்தால் இவர் மரணத்தின் விளிம்பில் இருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் பாதி பேர் உணவு இன்றி கஷ்டத்தில் இருக்கிறார்கள். அத்தோடு அங்கு பஞ்சம் காரணமாக 10 இலட்சம் குழந்தைகள் இந்த குளிர்காலம் முடியும் முன் பலியாகும் ஆபத்து உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. சர்வதேச அமைப்புகளின் உதவிகள் இன்னும் ஆப்கானிஸ்தானுக்கு சென்று சேராத காரணத்தால் மக்கள் கடும் பஞ்சத்தை நோக்கி சென்று கொண்டு இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மிகப் பெரிய வரட்சியை எதிர்நோக்கி உள்ளது. அந்நாட்டு வரலாற்றில் இதுவரை ஏற்படாத பஞ்சம் ஏற்பட போகிறது. மிகப் பெரிய மனித அவலம் ஏற்பட போகிறது என்று ஐ.நா தெரிவித்து இருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின் அங்கு பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரத்தை மீட்டு கொண்டு வர தலிபான் அரசிடம் போதிய திட்டங்கள் இல்லை. இந்த நிலையில்தான் ஆப்கான் மிகப்பெரிய பஞ்சத்தை நோக்கி செல்கிறது.

குடிபெயரும் பறவைகளின் விசித்திரமிகு நடத்தைகள்!

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் பறவைகள் தொடர்பிலும் ஆராய்ச்சிகளும் அவதானிப்புகளும் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆராய்ச்சிகளும் அவதானிப்புகளும் நாடுகள், பிராந்தியங்களில் மாத்திரமல்லாமல் உலகளாவிய ரீதியில் இடம்பெறக் கூடியனவாக உள்ளன. பறவையியலாளர்கள், இயற்கை ஆர்வலர்கள், பறவைகள் தொடர்பான ஆராயச்சியாளர்கள் போன்ற மட்டத்திலானோர் மேற்கொள்ளும் இந்த ஆய்வுகளில் ஆராய்ச்சிகளிலும் பறவைகளின் நடத்தை, அவற்றின் செயற்பாடு, உணவு, இரைதேடும் ஒழுங்கு, இனவிருத்தி ஏற்பாடுகள், குடிபெயர்தல், அதற்கான காரணங்கள், குடிபெயரும் ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டுகின்றது. அவற்றின் ஊடாக பறவைகள் தொடர்பில் பல்வேறு விதமான விடயங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கொழும்பு பல்கலைக்கழகமும் இலங்கை பறவையியல் கள குழுவும்(எப்.ஒ.ஜி.எஸ். எல்) இணைந்து நடத்திய ஆராய்ச்சியொன்றில், இந்நாட்டின் வலசைப் பறவைகள்(குடிபெயரும் பறவைகள்) தொடர்பான ஆராய்ச்சி முக்கிய கட்டத்தை அடைந்திருக்கின்றது.

அதாவது பறவைகளின் வலசை செல்லுதல் மற்றும் நடமாட்டம் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம் மற்றும் சுற்றுச்சூழல் பீட பேராசிரியர் சம்பத் செனவிரட்ன தலைமையில், கலாநிதி கற்கை மாணவியான இணை ஆராய்ச்சியாளர் கயோமி பனாகொட ஆகியோர் அடங்கிய குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சியிலேயே இந்த விடயம் தெரிய வந்திருக்கின்றது.



இரு சிறகுகளின் உதவியுடன், பூமியின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை, ஒரே பாதையில் வழிதவறாமல் சென்று திரும்புவது மனித நவீன அறிவியலுக்கே இன்னும் புரியாத மர்மம்!

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் பீடம், இலங்கை களபறவையியல் குழு, சீனாவின் விஞ்ஞான அகடமியின் சுற்றுச்சூழல் ஆய்வு மையம், வன ஜீவராசிகள் திணைக்களம், இலங்கை கடற்படை, பல்மைரா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இவ்வாராய்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆராய்ச்சிக்காக இந்நாட்டின் மன்னார், தலைமன்னார் உள்ளிட்ட வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களில் காணப்படும் கடற்காக்கை இனங்களில் ஒன்றாக விளங்கும் Heuglin's Gulls என்ற வகையைச் சேர்ந்த இரு பறவைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்விரு பறவைகளுக்கு முதலாவது பறவைகள் என்ற பெருமையை heuglin's gulls இன் மெனிகேயும் 'மேக' வும் பெற்றுள்ளன.

குடிபெயரும் பறவைகளின் பயண பாதையைக் கண்டறிவதில் இலங்கையில் முதன் முதலாக பயன்படுத்தப்பட்ட செய்மதி தொழில்நுட்பம்

இத்திட்டத்தின் கீழ் செய்மதி அவதானிப்பு கருவி (sattelitetagging) பொறுத்தப்பட்டதும் 'மேக' எனப் பெயரிடப்பட்ட heuglin's gulls பறவை வடக்கு நோக்கி பயணத்தை ஆரம்பித்தது. ஆனால் மெனிகே எனப் பெயரிடப்பட்ட heuglin's gull's பறவை சுமார் 20 நாட்கள் மன்னார், ராமர் பாலப் பிரதேசங்களில் தங்கி இருந்துவிட்டு 2021 ஏப்ரல் நடுப்பகுதியில் மன்னாரிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கத் தொடங்கியது.

அந்த வகையில் 'மேக' என்ற பறவை 2021 மே மாதமாகும் போது ஆர்டிக் பிராந்தியத்தின் வடக்கு ரஷ்யாவிலுள்ள யமல் குடாநாட்டின் கும் 'மெனிக்கே' என்றும் 'மேக' என்றும் ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டனர்.

இப்பறவைகளின் வலசை செல்லுதல், நடமாட்டம், பூர்வீக இனவிருத்தி பிரதேசம் என்பவற்றைக் கண்டறியும் நோக்கில் நடாத்தப்பட்ட இந்த ஆராய்ச்சிக்காக செய்மதி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. அதாவது இவ்விரு பறவைகளதும் நடமாட்டத்தை அவதானிக்கவென செய்மதி தொழில்நுட்பக்கருவி (sattelitetagging) மன்னார் மாவட்டத்திலுள்ள தலைமன்னாரில் வைத்து 2021 ஏப்ரல் மாதம் பொருத்தப்பட்டது. இதன் ஊடாக தெற்காசியாவில் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பறவையொன்றின் நடமாட்டம் மற்றும் பயணப்பாதையைக் கண்டறியப் பயன்படுத்தப்பட்ட முதலாவது பறவைகள் என்ற பெருமையை heuglin's gulls இன் மெனிகேயும் 'மேக' வும் பெற்றுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் செய்மதி அவதானிப்பு கருவி (sattelitetagging) பொறுத்தப்பட்டதும் 'மேக' எனப் பெயரிடப்பட்ட heuglin's gulls பறவை வடக்கு நோக்கி பயணத்தை ஆரம்பித்தது. ஆனால் மெனிகே எனப் பெயரிடப்பட்ட heuglin's gull's பறவை சுமார் 20 நாட்கள் மன்னார், ராமர் பாலப் பிரதேசங்களில் தங்கி இருந்துவிட்டு 2021 ஏப்ரல் நடுப்பகுதியில் மன்னாரிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கத் தொடங்கியது.

அந்த வகையில் 'மேக' என்ற பறவை 2021 மே மாதமாகும் போது ஆர்டிக் பிராந்தியத்தின் வடக்கு ரஷ்யாவிலுள்ள யமல் குடாநாட்டின் இனவிருத்தி பிரதேசத்தை சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்த குறுகிய காலத்திற்குள் 'மெனிகே' என்ற பறவையும் ஓரளவுக்கு மாற்று பாதையைப் பாவித்து யமல் குடாநாட்டைச் சென்றடைந்துள்ளது.

யமல் குடாநாட்டில் கூடு அமைப்பதற்கு முன்னர் யூரல் மலையைக் கடந்து ஐரோப்பியாவின் ரஷ்ய பிராந்தியத்திற்குள் 'மேக' சென்று வந்துள்ளது. ஜுன் முதல் ஓகஸ்ட் மாதம் வரை ஆர்டிக் பிராந்தியத்தில் தங்கியிருந்து இனவிருத்தியில் ஈடுபட்ட 'மெனிக்கே' ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் தெற்கு நோக்கிய குடிபெயர்தலை முதலில் ஆரம்பித்தது. ஆனால் 'மேக' ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் தான் தெற்கு நோக்கிய பயணத்தைத் தொடங்கியுள்ளது.

அந்த வகையில் இலங்கையிலிருந்து வலசை சென்று 06 மாதங்களும் 09 நாட்களும் கடந்த பின்னர் மெனிக்கே என்ற பறவை கடந்த நவம்பர் 04 ஆம் திகதி மன்னார் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. 'மேக' என்ற பறவை இலங்கையை அண்மித்துக் கொண்டிருக்கின்றது என்பதை ஆராய்ச்சியாளர்கள் செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக அவதானித்துள்ளனர்.

அதேநேரம் இவ்வாராய்ச்சியின் ஊடாக இலங்கைக்கு தற்போது வந்து சேர்ந்துள்ள 'மெனிக்கே' என்ற பறவை வடக்கு நோக்கி வலசை செல்லவென 35 நாட்களை (ஐந்து வாரங்கள்) செலவிட்டு 7,880 கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளதும், தெற்கு நோக்கி வலசை செல்லவென 91 நாட்களை (13 வாரங்கள்) செலவிட்டு 11,480 கிலோ மீற்றர் தூரம் பயணித்திருப்பதும் தெரியவந்துள்ளது. இதன் ஊடாக இப்பறவை வருடாந்தம் 19,360 கிலோ மீற்றர் பறந்து பயணித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை உலகில் அதிக வேகமாகப் பறக்கக் கூடிய பல்கன் பருந்து (falcon eagle) என்ற பறவையின் வலசை செல்லுதலும் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவதானித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இப்பறவையானது, இரை பிடிப்பதற்காக மணித்தியாலயத்திற்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடிய இயல்பைக் கொண்டுள்ளது. இப்பறவை தென்னாபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு குடிபெயர்ந்து சென்று வரக் கூடிய பறவைகளில் ஒன்றாகும்.

ஐரோப்பாவிலுள்ள பின்லாந்து நாட்டுக்கு வலசை செல்லக் கூடிய இப்பறவையின் பயணப் பாதை தொடர்பில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இப்பறவையானது தென்னாபிரிக்காவிலிருந்து பின்லாந்து நாட்டுக்கு வலசை செல்லும் போது, ஒரே நேர்கோட்டில் பயணிக்கக் கூடிய இயல்பைக் கொண்டிருப்பது இந்த அவதானிப்பின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதாவது நிலப்பகுதியின் மேலாகப் பறந்து செல்லும் இயல்பைக் கொண்டுள்ள இப்பறவை, கடல் பிராந்தியத்தைக் கடக்க வேண்டிய இடங்களில் பயணப்பாதையை நிலப்பகுதிக்கு மாற்றி பயணித்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இப்பறவை தென்னாபிரிக்காவிருந்து பயணத்தை ஆரம்பித்ததும் ஆபிரிக்கா கண்டத்தைக் கடக்கும் வரைக்கும் சிறிய தூரம் பறந்தும் நிலப்பகுதிக்கு வந்து ஓய்வு எடுத்துக் கொண்டுதான் மீண்டும் பயணத்தைத் தொடரக் கூடியதாக இருந்திருக்கின்றது. ஆனால் ஐரோப்பிய பிராந்தியத்தைச் சென்றடைந்ததும் அதன் ஓய்வு எடுக்கும் நடத்தையில் மாற்றம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது ஓய்வு எடுக்காதபடி ஆகாயத்தில் தொடராகப் பறந்துள்ளது. இது ஒரு பறவையின் செயற்றிறனில் வானிலையும் வெப்பநிலையும் ஏற்படுத்தும் தாக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும் மணித்தியாலயத்திற்கு சுமார் 10 கிலோ மீற்றர் வேகத்தில் குடிபெயரக் கூடிய இப்பறவை நாளொன்றுக்கு 230 கிலோ மீற்றர் என்றபடி 42 நாட்களில் பின்லாந்தின் உரிய பிராந்தியத்தை இப்பறவை சென்றடைந்துள்ளது.

இதன்படி செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கடற்காக்கை இனங்களில் ஒன்றாக விளங்கும் Heuglin's Gulls என்ற பறவையினதும் பல்கன் பருந்து (falcon eagle) என்ற பறவையினதும் நடமாட்டமும் வலசை செல்லுதலும் அவதானிக்கப்பட்டதன் ஊடாக ஆச்சரியம் மிகுந்த பல விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறு பிரமிக்கத்தக்க அதிசயமான நடத்தைகளைத் தன்னகத்தே இவ்விரு வகையான பறவைகளும் கொண்டிருக்கின்றன என்றால் வருடா வருடம் வலசை செல்லும் ஆயிரக்கணக்கான பறவைகளையும் அவதானிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் உட்படுத்தும் போது இன்னும் பல மடங்கு ஆச்சரியமும் பிரமிக்கத்தக்க முடிவுகளையும் தரவுக்களையும் உலகம் பெற்றுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. ஆகவே பறவைகளின் வலசை செல்லுதலை சாதாரணமாக நோக்காது ஆய்வு கண்கொண்டு நோக்கி அவற்றின் அதிசயங்களை அறிந்து கொள்வதே பயன்மிக்கதாக இருக்கும்.

மர்லின் மரிக்கார் ...✍

மேல் மாகாண ஆளுநர் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தில் திறம்பட செயலாற்றும் மொரட்டுவை மாநகரசபை

- மேல்மாகாண ஆளுநர் நேரில் சென்று பாராட்டு

மேல் மாகாண ஆளுநர் முன்னாள் விமானப் படைத் தளபதி ஓய்வுநிலை ஏயார் மார்ஷால் ரொஷான் குணதிலக மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ்வரும் கொழும்பு மாவட்டத்தின் பிரதான மாநகர சபையொன்றாக விளங்கும் மொரட்டுவ மாநகர சபைக்கு களஆய்வு விஜயம் மேற்கொண்டார். மாநகர சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைப் பிரிவின் செயல்பாட்டையும் ஆளுநர் பார்வையிட்டார்.

மொரட்டுவ மாநகர சபைக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநருக்கு மாநர மேயர் சமன்லால் பெர்னாண்டோ தலைமையில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை தலைவர், பிரதி மேயர், மாநகர சபை மக்கள் பிரதிநிதிகள், நகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நாட்டின் பழைமையான வீடமைப்புத் திட்டங்களில் ஒன்றாக விளங்கும் பாரிய சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட இருபத்தொன்பது உள்ளூராட்சி வட்டாரங்களின் மக்களது கழிவுப் பொருள் அகற்றல் தொடர்பான வேலைத் திட்டத்தை முறையாக முன்னெடுப்பதில் மிகுந்த உணர்வுடன் மொரட்டுவ மாநகர சபை செயல்பட்டு வருகின்றது.

கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பில் கரிசனையுடன் செயல்படும் உள்ளூராட்சி நிறுவனமொன்றாக விளங்கும் மொரட்டுவ மாநகர சபை கரதியான கழிவுப் பொருள் முகாமை திட்டத்துக்கு அனுப்பி வந்த மாதாந்த 2300 தொன் அளவிலான உக்கலடையாத கழிவுப் பொருள்கள் அனுப்புதலை நிறுத்தி விட்டு, சபையின் புதிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மாநகர சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைப் பிரிவின் செயல்பாடுகளைச் சுற்றிப் பார்வையிட்ட ஆளுநர் இந்த வேலைத் திட்டத்தைப் பாராட்டியுள்ளார். மேல் மாகாணத்தில் பெரியதொரு கரையோர நகரமாக மொரட்டுவ அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புகையிரத நிலையம், இ.போ.ச பஸ் நிலையம் மற்றும் தனியார் பஸ்நிலையம் என்பன காலி வீதியோரமாக நகர மத்தியில் அமைந்துள்ளன.

கடந்த 1908 காலப் பகுதியில் கொழும்பிலிருந்து ஒரு தனி உள்ளூர் சபை என்ற உள்ளூராட்சி அமைப்பாக மாறிய மொரட்டுவ உள்ளூராட்சி 1930 இல் நகர சபையாக மாற்றமடைந்துள்ளது.1 997 ஆம் ஆண்டில் மாநகர சபையாக உயர்வடைந்த இந்த 29 உள்ளூராட்சி வட்டாரங்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் 48 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்த மாநகர சபையின் நான்காவது மேயரான சமன்லால் பெர்ணான்டோ 2006 முதல் மாநகர மேயராக பதவி வகித்து வருகிறார்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர் ...✍
(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

கூலித் தொழிலில் இருந்து சூப்பர் ஸ்டார் வரை...

71 வயது ஹீரோ கடந்து வந்த பாதை

நடிகர் ரஜினிகாந்த் நேற்று தனது 71 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். அவரைப் பற்றி பலருக்கும் தெரியாத தகவல்கள் உள்ளன. ரஜினிகாந்த் 1975 ஆம் ஆண்டு கே. பாலசந்தரின் அபூர்வ ராகங்கள் படத்தில் ஒரு துணை கதாபாத்திரத்தில் நடித்து, தனது திரை வாழ்க்கையைத் தொடங்கினார். இந்த படத்தில் நடிகர் கமல்ஹாசன் ஹீரோ.

ரஜினிகாந்த் பாலசந்தரை ஒரு கதாபாத்திரத்திற்காக அணுகினார். இதனால் ரஜினிகாந்த் கடைசி நிமிடத்தில் படத்தில் சேர்க்கப்பட்டார். அதுவும் இப்படத்தில் கதாநாயகியின் முன்னாள் கணவராக அவர் நடித்தார்.

ரஜனியின் இயற்பெயர் சிவாஜி ராவ் கெய்க்வாட். இவருக்கு ரஜினிகாந்த் என்ற பெயரை சூட்டியவர் பாலசந்தர். ஆனால் பாலசந்தரிடம் வேறு இரண்டு பெயர்களும் இருந்தன. அவை சந்திரகாந்த் மற்றும் ஸ்ரீகாந்த்.

ரஜினிகாந்த் திரையுலகில் நுழைவதற்கு முன்பு கூலி, கார்பெண்டர், பஸ் நடத்துநர் என பல வேலைகளும் செய்து வந்தார். அவர் லதா ரங்காச்சாரியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். லதா ரஜினிகாந்த் இவரை விட 8 வயது இளையவர். லதா தனது கல்லூரி இதழுக்காக ரஜினியை பேட்டி எடுக்க வந்த போது இருவரும் சந்தித்தனர். பின்னர் இருவரும் காதலித்து 1981 இல் திருமணம் செய்து கொண்டனர்.

2007 ஆம் ஆண்டு இயக்குனர் பி. வாசு தயாரித்து ரஜினிகாந்த் நடித்த 'சந்திரமுகி' திரைப்படம்தான் தமிழில் நீண்ட நாட்கள் திரையரங்கில் ஓடிய திரைப்படம். ரஜினிகாந்த் தனது திரைவாழ்க்கையை ஆரம்பித்த முதல் இரண்டு வருடங்கள் அவருக்கு எதிர்மறை கதாபாத்திரங்களான துஷ்பிரயோகம் செய்யும் கணவன், பாலியல் வல்லுறவு செய்பவன், ஆபாச காரியங்கள் செய்பவன், விபசாரம் செய்பவன் போன்ற கதாபாத்திரங்கள் மட்டுமே கிடைத்தன. ஆனால் 1977 இல் 'புவனா ஒரு கேள்விக்குறி' திரைப்படத்தில் முதன்முதலில் ஒரு நேர்மறையான கதாபாத்திரம் கிடைத்தது. ஆசியாவிலேயே அதிக சம்பளம் வாங்கிய இரண்டாவது நடிகர் ரஜினிகாந்த். 2007 ஆம் ஆண்டில் ரஜினிகாந்த் சம்பளமாக ரூ. 26 கோடி பெற்றார். இது ஜாக்கிசானுக்குப் பிறகு ஆசியாவில் அதிக சம்பளம் வாங்கும் இரண்டாவது நடிகராக அவரை மாற்றியது.

மூதூர் பொலிஸ் பிரிவில் கைக்குண்டு வெடித்து சிறுவன் உயிரிழப்பு

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலைமூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இக்பால் நகர் பகுதியில் கைக்குண்டொன்று வெடித்ததில் 15 வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் நேற்று (12) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் தோப்பூர் அல்லைநகர் பகுதியைச் சேர்ந்த முகம்மது ஹபீஸ் நளீம் (15வயது) தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, ஆட்டுக்கு இழை வெட்ட சென்ற சிறுவன் பற்றைக் காட்டுக்குள் வெட்டிக் கொண்டிருந்தபோது கீழே இருந்த கைக்குண்டில் கத்தி பட்டு வெடித்ததில் குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

சிறுவனின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சீமெந்தை...

நிர்ணயம் செய்யும் அதிக பட்ச சில்லறை விலை 1275 ரூபாவாகும்.

எனினும், இந்த விலையை விடவும் அதிக விலைக்கு சிமெந்து விற்பனை செய்யப்படுவதாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நுகர்வோர் தரப்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது.

சுகாதாரம் தொடர்பான... (03ஆம் பக்கத் தொடர்)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஆகியோருக்கு அதற்கான வழிகாட்டல் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை நாட்டிற்கு வரும் விமானப்பயணிகள் தமது சுகாதர தகவல்களை விமான நிலையத்தின் கருமபீடத்தில் ஒன்லைன் மூலம் பதிவிரக்கம் செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் தமது உறுதிப்படுத்தல் அறிக்கைகள் மற்றும் சான்றிதழின் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பதுடன் அவ்வாறின்றி தமது கையடக்க தொலைபேசியில் அதனைப் பதிவு செய்வது அவசியமாகும். அதற்கிணங்க மேற்படி வழிகாட்டல் கட்டளைகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக புதிதாக வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல் மூலம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.(ஸ)

அரிசி, சீனி உள்ளிட்ட...

சிய பொருட்களை சதொச மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு நேற்று முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தப்பொருட்கள் சந்தையில் விற்பனை செய்யப்படும் விலையை விட குறைவான விலையிலேயே சதொச மூலம் விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க நேற்று முதல் நாட்டரிசி ஒரு கிலோவை 99 ரூபா 50 சதத்திற்கும் சம்பா அரிசி ஒரு கிலோவை 130 ரூபாவுக்கும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அந்த அரிசியை 5 கிலோ வரை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் சீனி, பருப்பு உள்ளிட்ட 50 பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றின் போது அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் அதனைக் குறைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நான் மக்களுக்கு பொய் கூறி என்னை சிறுமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. விலைகளை என்னால் குறைக்க முடியும் என்றால் நான் குறைக்காமல் இருப்பேனா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதுகாப்பை... (03ஆம் பக்கத் தொடர்)

சமையல் எரிவாயு பாவனையாளர்கள் தொடர்பான சட்ட தொகுதியில் குறைபாடுகள் இருந்துள்ளன. அதனை நாங்கள் மறுசீரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். எதிர்கால சந்ததியின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு தேவையான சட்ட நியதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

அமைச்சரவைக் கூட்டத்தில் ...

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் நடைபெறும் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இது என்பதால் இன்றைய கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பல தொடர்பில் ஆராயப்பட உள்ளன.

வெளிநாட்டு கையிருப்பு மற்றும் நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடி தொடர்பில் இம்முறை அமைச்சரவையில் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற உள்ள நிலையில், நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கும் அமைச்சரவையில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடு முகம் கொடுத்துள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடி தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட உள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் இந்த அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட உள்ளது.

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதற்கு பின்னர் நடைபெறும் முதலாவது அமைச்சரவை கூட்டம் இது என்பதால் இங்கு நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதேவேளை யுக தனவி மின் உற்பத்தி நிலையத்தின் ஒப்பந்தம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது வெளிநாட்டு கையிருப்பு 1.5 பில்லியன் அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ள நிலையில் அது தொடர்பில் நிதியமைச்சு உரிய கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

20 வயதுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரிட்டிஷ் இன்ஸ்டிடியூட் ஒஃப் ஹெல்த்கேர் ஆய்வில், ஒமிக்ரோன் கொரோனாவின் தொற்று அபாயத்திலிருந்து தடுப்பூசி பாதுகாப்பை வழங்கும் என்று கூறுகிறது.

மூன்றாவது டோஸ் 75 சதவீதம் கொரோனா நோய்த்தொற்றுகளைத் தடுக்கிறது என்றும் அவர்களின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

நிலையான வளர்ச்சி...

வீட்டுக் கணக்கெடுப்பு 2022/2023ல் மேற்கொள்ளப்படும் என்றார்.

இந்தத் தொற்று நோய்க்கு பிந்தைய நெருக்கடியின் விளைவாக ஏனைய நாடுகளைப் போலவே இலங்கையும் கடினமான காலகட்டத்தைக் கடந்து செல்கிறது.

பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டமிடல் துறையானது, குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்து, தொற்று நோய்க்குப் பிந்தைய நெருக்கடியைச் சமாளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அற்புதமான நடிப்பால்...

பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அதற்கமைய பிரதமர் நரேந்திர மோடியும் ரஜனிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், "ரஜனிகாந்துக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

அவர் தனது படைப்பாற்றல் மற்றும் அற்புதமான நடிப்பால் மக்களை தொடர்ந்து ஊக்கப்படுத்த வேண்டும்.

நல்ல உடல் நலத்துடன் நீண்ட நாள் ரஜனிகாந்த் வாழ கடவுள் ஆசீர்வதிக்கட்டும்" என பதிவிட்டுள்ளார்.

பாடசாலை கிரிக்கட்...

வாசகர்களின் இறுதி வார வாக்கு எண்ணிக்கையின்படி, ஆண்டின் மிகவும் பிரபலமான பாடசாலை கிரிக்கெட் வீரராகவும் தெரிவாகியுள்ளார்.

நாளை 14 ம் திகதி கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் சண்டே ஒப்சர்வர்எஸ்எல்ரி மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரர் விருது வழங்கும் விழாவில் இலங்கையின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு ராஜபக்ஷ மற்றும் நிமேஷா ஆகியோருக்கு விருதுகளை வழங்குவார்.

பாதுகாப்பை...

சமையல் எரிவாயு பாவனையாளர்கள் தொடர்பான சட்ட தொகுதியில் குறைபாடுகள் இருந்துள்ளன. அதனை நாங்கள் மறுசீரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். எதிர்கால சந்ததி

புலமைப் பரிசில்...

புரிந்துணர்வு ஒப்பந்த கைச்சாத்து மற்றும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல் இன்றைய தினம் பிற்பகல் 12 மணிக்கு ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவன முக்கியஸ்தர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.(ஸ)

13 க்கு அப்பால்...

பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு" என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் படித்த ஆற்றலுள்ள இளைஞர்களுக்கு முன்னுரிமை என்று நாங்கள் தீர்மானித்தோம். ஆனால் அது வேட்புமனுவில் காணப்படவில்லை. 2022ஆம் ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒரு ஆண்டாக இருக்கலாம் . சாணக்கியன் போன்ற ஐந்தாறு இளைஞர்களை நாங்கள் களமிறக்கியிருந்தால் நாட்டையே தலைகீழாக மாற்றி இருப்போம் மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்க வேண்டும்.

சமஷ்டி என்ற சொல் அன்றும் இருந்தது இன்றும் இருக்கின்றது. ஆனால் சமஷ்டிக்கான விளக்கம் தற்போது மாறிவிட்டது. சம்பந்தன் பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்த பொழுது பிரித்தானியாவில் அன்றிருந்ததைப் போன்று இலங்கையிலும் யாப்பை அறிமுகப்படுத்தினீர்கள். ஆனால் இன்று உங்கள் நாடு எங்கேயோ சென்றுவிட்டது. ஆனால் எமது நாடோ பின்னோக்கி சென்றுவிட்டது என்றார்.

சம்பந்தன் அன்றைய சிந்தனையோடு இருக்கவில்லை. புதியதையும் உள்வாங்குகிறார். அதனாலேயே இன்றும் அவர் எமக்கு தலைவராக இருக்கின்றார்.

13க்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது,13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்போதைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ 13க்கு அப்பால் சென்று அர்த்தபுஷ்டியான தீர்வைத் தருவோம் என்கிறார். ஆனால் சில தமிழ் கட்சித் தலைவர்களோ 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த கோருகின்றனர்.

13ஆம் திருத்தம் அடிப்படையிலேயே பழுதுபட்டது. அதனை திருத்த முடியாது என இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறுகின்றார். 13ஆம் திருத்தத்தின் சில முக்கியமான நல்ல விடயங்கள் உள்ளன. அவற்றையும் சேர்த்துக் கொண்டு அதையும் தாண்டிய அதிகாரப்பகிர்வை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் என்றார்.

நாட்டில் அரிசிக்கு...

இதற்கு ஊடகங்களிடம் பதிலளிக்கையிலேயே விவசாயத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

10 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் இருக்கின்றது எனவும், பெரும்போகத்தின்போது தேவையான அறுவடை கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

திருப்பதியானுக்கு 5.3 Kg ...

ஏ.வி.தர்மாரெட்டி பெற்றுக் கொண்டார். அதேவேளை திருப்பதி கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் ஒருவர் விடாமல் உண்டியலில் காணிக்கை செலுத்தி விட்டு செல்வது வழக்கம்.

குபேரனிடம் தன் திருமணத்திற்காக வாங்கிய கடனை, கலியுகத்தில், மனிதர்கள் யார் யார் என்ன பாவம் செய்தார்களோ, அதற்கேற்ப பணத்தை வசூல் செய்து தன் கடனை அடைத்துவிடுவதாக திருமால் வாக்கு கொடுத்ததாக புராணங்கள் கூறுகின்றன.

இந்தியாவிடம் உதவியை...

ஹர்ஷ டி சில்வா, அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்தநிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்கான காலம் தற்போது கடந்துவிட்டதாக ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதா? இல்லையா? என்பது தொடர்பில் இன்று நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக ஜனாதிபதியின் செயலாளரும் திறைசேரியின் செயலாளரும் அமைச்சரவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஹர்ஷ குறிப்பிட்டார்.

2020 வரவு செலவு திட்டம் முன்வைக்கப்பட்ட போது சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அன்றே நாணய நிதியத்திடம் சென்றிருந்தால், இன்று பொருளாதார சீர்கேடு ஏற்பட்டிருக்காது. நாட்டில் தற்போது வெளிநாட்டு திரவ ஒதுக்கமாக 1000 பில்லியன் டொலர்கள் கூட இல்லையென்று ஹர்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் எதிர்வரும் ஜனவரி மாத முதல் வாரத்தில் 1440 மில்லியன் டொலர்கள் கடனாகவும் வட்டியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.

இதேவேளை சர்வதேச பிணைமுறி கடன் தவணையை ஒரு தடவை செலுத்த முடியாவிட்டால், செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனையின் படி பெற்ற முழு கடனையும் திருப்பிச்செலுத்த வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படும் என்றும் ஹர்ஷ எச்சரிக்கை விடுத்தார்.

இதுஇவ்வாறிருக்க, இலங்கையின் சுயகௌரவத்துக்கு தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், நாட்டின் பொருளாதார நிலமையை சீரமைக்ககூடிய புதிய திட்டங்கள் தம்மிடம் இருப்பதாகவும், அரசாங்கத்தை முன்னெடுக்கும் ஆளுமை ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளதாகவும் ஹர்ஷ குறிப்பிட்டார்.

சில பிரதேசங்களில்...

அதற்கிணங்க நாட்டின் சில பிரதேசங்களில் அரைமணித்தியால மின் துண்டிப்பை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்தார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில;

நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தின் பொயிலரில் கசிவு ஏற்பட்டுள்ளதன் காரணத்தால் அதனை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் வகையில் மின் உற்பத்தியில் இருந்து அதனை நிறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன் காரணமாக நாட்டின் மின் சாரத் தேவையில் குறிப்பிட்ட அளவு மின்சாரம் குறைவடைவதால் நாட்டின் சில பகுதிகளில் அரை மணித்தியாலய மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

பிச்சை எடுக்கும்...

பெண் என பொலிஸார் தெரிவித்தனர். மொரட்டுவ பிரதேசத்தில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு அருகில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த இவர் ஏ டி எம் அட்டை தரையில் விழுந்து கிடந்த நிலையில் எடுக்கப்பட்டதாக தகவல் அளித்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் மூலம் சுமார் 135,000 ரூபா பெறுமதியான சலவை இயந்திரம், அரிசி குக்கர், ஆயத்த ஆடைகள், மதுபானம் மற்றும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உணவு, பானங்கள் வாங்குவதற்காக அவரது கணவர் வைத்திருந்த ரூ.50 ஆயிரத்தை பொலிஸாரிடம் கொடுத்ததாக கூறப்படுகிறது.

பிச்சை எடுத்தாலும், சந்தேக நபருக்கு 20,000 ரூபா வாடகைக்கு கொடுக்கப்பட்ட இரண்டு வீடுகளின் உரிமையாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர் மொரட்டுவ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

கொழும்பில் திடீரென...

பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பொது யோசனையை வெளியிடும் நோக்கில் நேற்றைய தினம் கொழும்பில் கூடியுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21ம் திகதி வெளியிட தீர்மானித்துள்ள பொது யோசனையை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கம் மற்றும் சர்வதேசத்திற்கும் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அத்துடன் இலங்கையிலுள்ள அனைத்து கட்சிகளுக்கும் அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் பிளவுபடாத ஒன்றிணைந்த இலங்கைக்குள் சிங்கள மக்களுடன் ஒரே நாட்டில் வாழும் சூழ்நிலையை உருவாக்குவது தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு உள்ள பொறுப்புக்கள் தொடர்பிலும் நேற்று கலந்துரையாடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இதன்போது கட்சித் தலைவர்கள் இணைந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஈபீஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தா, ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், ஈரோஸ் தலைவர் பி.பி. தேவராஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் வடமாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளிட்ட 8 கட்சிகளின் தலைவர்கள் நேற்றைய இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர்.

அதற்கிணங்க எதிர்வரும் 21ஆம் திகதி மேற்படி தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மீண்டும் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் கலந்துரையாடப்படும் விடயங்கள் உள்ளடங்கிய பொது யோசனைகளை இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மற்றும் தெற்கில் வாழும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் முன்வைத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் நேற்றைய மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளவில்லையென்பதுடன் அதுதொடர்பில் அவரிடம் வினவிய போது, தமக்கு அதற்கான அழைப்பு கிடைக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார். (ஸ)

உலகின் பெரிய..

சபை தெரிவித்துள்ளது.

ஆசியாவின் ராணி (Queen of Asia) என மேற்படி மாணிக்கக்கல்லுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அந்த மாணிக்கக்கல் 310 கிலோ கிராம் எடையைக் கொண்டுள்ளதென்றும் உலகிலேயே இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள தனி நீல மாணிக்கக் கல்லில் இது பாரிய அளவைக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் தெரிவித்துள்ள தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை,

இரத்தினபுரி பட்டுகெதர பிரதேசத்தில் மேற்படி மாணிக்கக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அது 'ஜிம லோஜிக்கல் இன்ஸ்டிடியூட் என்ட்ரிஷேச் பிறைவட் லிமிட்டெட்' நிறுவனத்துக்கு சொந்தமானது என்றும் தெரிவித்துள்ளது.

மேற்படி மாணிக்கக்கல் தற்போது ஹொரணைப் பிரதேசத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் முதல் தடவையாக அந்த மாணிக்கக் கல் ஊடகங்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகார சபை மேலும் தெரிவித்தது.(ஸ)

முன்னாள் ஜனாதிபதி...

அவர்கள் எங்கிருந்தாலும், எத்தகைய பதவிகளை வகித்தாலும் அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பது அவசியமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்தகையவர்கள் தற்போது அரசாங்கத்திலிருந்தாலும் எதிர்க்கட்சியிலிருந்தாலும் பொதுக் கூட்டணியிலிருந்தாலும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கக்கூடாது. அது மன்னிப்பு வழங்கக்கூடிய குற்றமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேற்படி தாக்குதலுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அவர்கள் தற்போது உள்ள நிலைக்கிணங்க அதன் பாரதூரமான தன்மையை மாற்றிக்கொள்ளக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடரபில் ஊடகவியலாளர்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர்;

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னர் கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில், தாக்குதலுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதற்கிணங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்போதைய முப்படைத்தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் முழுமையான பொறுப்பேற்கவேண்டும். தெரிந்தோ அல்லது தெரியாமலோ தகவல்களை மறைத்து தாக்குதலுக்கு இடமளித்தமை பெரும் குற்றமாகும்.

தாக்குதலின் பின்னர் அதுதொடர்பான விசாரணைகளில் ஏற்பட்ட நெருக்கடிகள் பாராளுமன்றத்தில் தமது தரப்பினரை அதுதொடர்பில் சம்பவத்தை மறைக்க முயற்சித்தல் அன்றும் இன்றும் தவறானதாகும். அதற்கு நாம் எப்போதும் எதிர்ப்பே என்பதை நான் பகிரங்கமாக பல தடவைகள் தெரிவித்துள்ளேன்.

குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு என்னை அழைத்தாலும் இதுதான் என்னுடைய நிலைப்பாடு. நான் அதிலிருந்து மாறப்போவதில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பரிந்துரைகளுக்கமைய சட்டமா அதிபர் மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

மேற்படி சம்பவத்திற்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் எமது கட்சியிலிருந்தாலும் எமது முன்னணியிலிருந்தாலும் குற்றம் குற்றமே.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க மதத் தலைவர்கள் மற்றும் கத்தோலிக்க சமூகத்தினர் அதேபோன்று நாட்டில் அனைத்து மக்களும் அந்த சம்பவம் தொடர்பில் நீதியை எதிர்பார்த்துள்ளனர்.

சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் அரசாங்கத்துடன் இணைந்துள்ள நிலையில் நீதிமன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட க்கூடாது. மக்கள் எம்மிடம் எதிர்பார்ப்பதை அரசாங்கம் என்ற வகையில் நாம் நிறைவேற்ற வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசி...

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் மக்கள் பல்வேறு பயணங்களை மேற்கொள்வதற்கு முடிவெடுத்திருப்பார்கள். அவ்வாறான பயணங்களை மேற்கொள்வதற்கு முன்பதாக கொரோனா மூன்றாவது தடுப்பூசியை கண்டிப்பாக பெற்றுக்கொள்வது சிறந்தது.

மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாமல் மக்கள் கூடும் இடங்களுக்கு செல்லல், பயணங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகள் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் சூழ்நிலைக்கு வழிவகுக்கும் என்றும் அதற்கிணங்க வருட இறுதியில் நாட்டில் கொவிட் சுனாமியொன்று உருவாகக்கூடிய அபாயநிலையே ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் மீண்டும் புத்திசாலித்தனமாக செயற்படுகின்றனர். பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் களியாட்டங்களை மேற்கொள்ளமுயற்சித்தால்டிசம்பர்மாதத்தின் இறுதி வாரத்தில் கொரோனா வைரஸ் பரவும் நிலை மேலும் மோசமடையுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

மலைச்சாரலி

டிரேட்டன் குடியிருப்பில் எரிவாயு அடுப்பு வெடித்தது

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிரேட்டன் தோட்டக் குடியிருப்பில் எரிவாயு வெடிப்புச் சம் பவம் ஒன்று நேற்று காலை இடம் பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குடியிருப்பில் உள்ள பெண் காலை 05/30 மணியளவில் சமையல் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் போது எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள் ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பே எரிவாயு சிலிண்டர் வாங்கப் பட்டுள்ளது.

ஆட்டோ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

அட்டன் நுவரெலியா வீதியில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்த நிலையில் லிந்துலை மாவட்ட வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

அட்டனில் இருந்து செல்லும் வழியில் சென். கிளர் எனும் இடத்திற்கு அருகேயுள்ள மின்கம் பம் ஒன்றில் மோதியதாலேயே இவ்விபத்துச் சம் பவித்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரி வித்தனர். நேற்று மதியம் 1.30 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, இரு பிள்ளைகளே குறித்த வண்டியில் பயணித்துள்ளதாக தெரிவிக் கும் பொலிஸார், முச்சக்கரவண்டியை செலுத்திய கணவன் மற்றும் அவரது மனைவி இரு பிள்ளைக ளுமே காயமுற்றுள்ளனர்.

விபத்தில் முச்சக்கரவண்டி கடும் சேதமாகியுள் ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசார ணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

படிக்கட்டுகளில் தவறி விழுந்தவர் மரணம்

தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை ஹொலிரூட் பகுதியில் ஆண் ஒருவர் படியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள தாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் அண் மையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தையான இராமையா இந்திர குமார் வயது (52) என அடையாளம் காணப் பட்டுள்ளார். இவரது மனைவி சில வரு டங்களுக்கு முன் உயிரிழந்ததாகவும் குறித்த வீட்டில் இவர் மாத்திரம் வசித்து வந்ததாக வும் இவரின் ஒரே ஒரு மகன் கொழும்பில் வேலை செய்து வருவதாக வும் அயலவர்கள் தெரிவிக் கின்றனர். இதேவேளை அன்று மாலை குறித்த நபர் மது போதையில் தமது வீட் டிலிருந்து படிக்கட்டுகளில் இறங்கி வரும்போது தவறி விழுந்து சம்பவ இடத் திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தை பிரேத பரிசோ தனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு அனுப்ப நடவ டிக்கை எடுத்துள்ளதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அறநெறிப் பாடசாலைகளை நவீனமயப்படுத்த 21 மில்லியன் ரூபா

பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் அறநெறிப் பாட சாலைகளையும் மற்றும் பௌத்த விகாரைகளை யும் புனரமைத்து நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டங்களுக்காக இருபத்தி ஒரு மில்லியன் ரூபா நிதி புத்தசாசன அமைச்சின் மூலம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 213 வேலைத்திட்டங் கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இந்த வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக கலந்துரையாடல் அண்மையில் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லோகுபோதாக மவின் தலைமையில் மற்றும் புத்தசாசன மத விவகார கலாச்சார அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) திருமதி. கே.கே.சம்பிகாவின் பங் களிப்புடன் இரத்தினபுரி மாவட்ட செயலக காரி யாலயத்தில் இடம்பெற்றன.

2021 ஆம் வருடத்தில் இரத்தினபுரி மாவட் டத்தில் உள்ள 18 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்டு மத வழிபாட்டுத் தலங்கள் அபிவிருத்தி செய்யவும் அறநெறி பாடசாலை களை அபிவிருத்தி செய்யவும் 23 வேலைத்திட் டங்களுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

மழையின் பின் மஞ்சள் காமாலை வயிற்றோட்டம் பரவும் அச்சுறுத்தல்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கடந்த சில நாட்களாக இரத்தினபுரி மாவட்டத்தின் பல பிரதேசங்களுக் கும் பெய்த மழையின் காரணமாக தொற்றுநோய் கள் பரவும் அச்சுறுத்தல் நிலவுவதாக சுகாதார தரப்புக்க ள் பொதுமக்களை அறிவுறுத்தி வ ருகின்றன. எனவே வயிற்றோட்டம் மஞ்சள் காமாலை டெங்கு எலிக்காய்ச்சல் போன்ற நோய்களில் இருந்து அவதானமாக இருக்கு மாறு வேண்டப்பட்டுள்ளனர்.

மழையின் பின் நீர் தேங்கி நிற்பதா லும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் உள்ள தடங்கல்கள் கா ரணமாகவும் இந்நிலை மைகள் ஏற்பட்டுள்ளதாக பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகள் பொதுமக்களை அறிவுறுத்தி வருகின்றனர்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மூலம் டொலர் பிரச்சினைக்கு முடியுமான தீர்வு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சி னைக்கு சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மூலம் அதிக மான வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகும் என சிறு ஏற்றுமதி பயிர்கள் இரா ஜாங்க அமைச்சர் நேற்று தெரிவித்தார். எம்பிலி பிட்டிய பிரதேசத்தில் நடை பெற்ற ஊடகவியலா ளர்சந்திப்பி ன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர்தொடர்ந்துதகவல்தருகையில்2009ஆம்ஆண்டு சிறு ஏற் றுமதிப்பயிர்கள்மூலம63ஆயிரம்மில்லியன் ரூபாய்கள் நாட்டுக்குக் கிடைத்தன. ஆனால் கடந்த 30 ஆம் திகதியுடன் இந்த வருமானம் ஒரு ஒரு இலட் சம் மில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. தேயிலை மற்றும் கருவா போன்ற ஏற்றுமதி பயிர்களுக்கு அவசி யமான இரசாயனப் பசளை இறக்குமதி செய்யப்படும். மேலும் தேனப் பசளை உற்பத்திக்காக சௌகல மற் றும் பெலவத்தை பிரதேசங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன . இவற்றை கறுவா, மிளகு போன்ற பயிர்களுக்குப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

திகதி 10.12.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4612
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,684,960.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 4 2 1 4 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.26,893,151.00

திகதி 11.12.2021 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4613
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,227,100.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 0 2 8 2 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.27,663,227.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2907
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,458,960.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 18 31 53 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,309,943.36

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் :2908
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,905,600.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 02 09 12 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.78,567,888.16

Mega Power 10
சீட்டிழுப்பு இலக்கம் 960
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,152,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.159,000,942.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து K சுப்பர் இலக்கம் 12 வெற்றி இலக்கங்கள் 31 32 52 57

Mega Power 10
சீட்டிழுப்பு இலக்கம் 961
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,968,700.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.159,301,384.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 08 26 39 66

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 642
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,306,960.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 03 39 52 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,422,044.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 643
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,757,060.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 60 64 71 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,630,979.20

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1644
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,771,700.00
சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 36 45 50 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,182,015.20

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் :1180
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,221,940.00
வெற்றி இலக்கம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 1 0 7 4 9 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,900,780.40
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.

10.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 640,954
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.27,374,700.00
ரூ. 2,000,000.00 பரிசு 02 ரூ. 500,000.00 பரிசு 01
ரூ. 100,000.00 பரிசு 25
• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

11.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 579,448
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 24,080,400.00
ரூ.2,000,000.00 பரிசுகள் 01 ரூ.1,000,000.00 பரிசுகள் 01
ரூ. 100,000.00 பரிசுகள் 22
• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

விலைமனுக்களுக்கான அழைப்பு

Furniture கொள்வனவு செய்தல்

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில தெஹிவளை

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் மூலம் இந்த வைத்தியசாலைக்காக அவசியமான Furniture கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(1) இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்றவர்கள் விலைமனு ஆவணக் கட்டணமாக 2,000.00 ரூபா மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் ஒன்றை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து 2021.12.13 ஆம் திகதி தொடக்கம் 2021.12.22 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை இந்த வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

(2) விலைமனு விண்ணப்பத்தை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் - Furniture கொள்வனவு செய்தல் - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவிலை, தெஹிவளை – 2021.12.23 என்று குறிப்பிட்டு 2021.12.23 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவிலை, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ள முடியும். 2021.12.23 ஆம் திகதி மு.ப. 10.00க்கு கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

(3) அனைத்து உபகரணங்களினதும் கூறுவிலை மற்றும் கோரப்பட்டுள்ள விபரக்குறிப்புகளுடன் படம் ஒன்றை (Catalog) சமர்ப்பித்தல் அத்தியாவசியம் என்பதோடு தேவைப்படின் மாதிரிகளை சமர்ப்பித்தல் அவசியமாகும்.

(4) விலைமனு ஆவணங்களை 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு அந்த 02 உறைகளையும் ஒற்றை உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் அந்த இடத்திலேயே விலைமனு விண்ணப்பங்கள் திறக்கப்படுவதோடு, விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

(6) விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.

(7) அரசாங்க ஒப்பந்தம், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நபர்களுக்கு விலைமனுக்கள் வழங்கப்படமாட்டாது.

(8) குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் பகுதியையேனும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக் குழு வசமானது.

(9) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழைக்கவும். (தொலைபேசி இலக்கம் - 0112763038)

தலைவர்
பிராந்திய பெறுகைக் குழு,
கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,
களுபோவிலை,
தெஹிவளை

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்காக துப்புரவு சேவை வழங்கல் 2022

விலைமனு அறிவித்தல்

2022 ஆம் ஆண்டுக்கான சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை துப்புரவு சேவை வழங்கும் நோக்கில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கீழ் குறிப்பிடப்பட்ட அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

I. இலங்கை வர்த்தகப் பெயர் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ் சுத்தம் செய்தல் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றாக 03 ஆண்டுகளுக்கு முன்னர் பதிவு செய்த நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

II. சுத்தம் செய்தல் சேவை வழங்கல் தொடர்பில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு, அவைகளின் வருடாந்த பெறுமதி கீழுள்ளவாறு இருத்தல் வேண்டும். சேவை அனுபவம் மற்றும் வருடாந்த பெறுமதி குறித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட கடிதத்துடன் சேவை வழங்கிய நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட கடிதம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

வருடாந்த பெறுமதி

1. சுகாதார நிறுவனங்கள் ரூபா 300,000.00

iii. முந்தைய ஆண்டுக்காக தமது வர்த்தக பதிவு பெயரின் கீழ் சுத்தம் செய்தல் சேவைக்காக சேவைக்கு ஈடுபடுத்தப்பட்ட அனைத்து பணியாளர்களுக்காகவும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்தி இருப்பதை இலங்கை மத்திய வங்கி/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் சீ அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். (2020/ 2021 ஆம் ஆண்டுக்காக மாத்திரம்.)

iv. முந்தைய மதிப்பீட்டு ஆண்டுக்காக சுத்தம் செய்தல் நிறுவனத்தின் பெயரில் வட் வரி/ வருமான வரி செலுத்தி இருப்பதாக எழுத்துமூலம் அத்தாட்சி மூலம் உறுதி செய்தல் வேண்டும். (வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயரிலும், தனி நபர்/ கூட்டு வர்த்தக நிறுவனங்கள் அனைத்து பங்குதாரர்களின் பெயரிலும், முந்தைய ஆண்டுக்காக வருமான வரி/ வட் வரி செலுத்தி இருப்பதாக எழுத்துமூல ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (2020/ 2021 ஆம் ஆண்டுக்காக மாத்திரம்.)

v. 300,000.00 ரூபா பெறுமதியான வங்கிப் பிணை அல்லது இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்/ காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயருக்கு எழுதப்பட்ட விலைமனுக்களை ஏற்பது முடிவுறும் திகதி தொடக்கம் 120 நாட்களுக்கு செல்லுபடியான வகையில் பெற்றுக்கொண்ட விலைமனுபிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இல்லையேல் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயருக்கு இலங்கை வங்கியின் 78088835 இலக்கம் கொண்ட கணக்கிற்கு மேலுள்ள பெறுமதிக்கு ஏற்ப தொகையை வைப்புச் செய்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சிறாப்பர் பிரிவில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டில் இரண்டாவது பிரதியை அதற்காக சமர்ப்பிக்க முடியும்.

02. விலைமனு விண்ணப்பங்களை 2021.12.15 ஆம் திகதி தொடக்கம் 2021.12.24 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை இல. 47, டபிள்யு.ஏ.டி. ராமனாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகை துறைக்கு பொறுப்பான அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தை தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயரில் உள்ள இலங்கை வங்கியின் 78088835 கொண்ட கணக்கிற்கு வைப்பிட்டு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சிறாப்பரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. வர்த்தக பதிவு சான்றிதழ்
2. கீழுள்ளவாறு பிரதேச செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட (பொது 170 படிவத்தில்) பெறுமதிச் சான்றிதழ்

வரிசை இலக்கம்	நிறுவனத்தின் பெயர்	பெறுமதிச் சான்றிதழ்	விலைமனுபிணை

3. 03 ஆண்டுகள் அனுபவம் பற்றிய சான்றிதழ்
4. பொது ஒப்பந்த சட்டத்தின் 8 ஆவது பிரிவின் கீழான பதிவுச் சான்றிதழ்

03. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணத்தை 2021.12.27 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பெறுகைக் குழு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இல. 47, டபிள்யு.ஏ.டி. ராமனாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அனுப்புவதற்கு அல்லது அந்த முகவரியிலேயே அமைந்துள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்கு பிரிவின் விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விமனு ஆவணங்களை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "2022 ஆம் ஆண்டின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்காக சுத்தம் செய்தல் சேவையை வழங்கல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04. விலைமனு ஆவணங்களை 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறாக உறைகளில் இட்டு அந்த இரு உறைகளையும், ஒற்றை உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2021.12.27 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் அவைகளை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும். மேலதிக விபரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

06. குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதியை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைக்குழு வசமானது.

தலைவர்,
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பெறுகைக் குழு,
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை,
இல. 47, டபிள்யு.ஏ.டி. ராமனாயக்க மாவத்தை, கொழும்பு 02.

எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி
பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலவிற்பனைத் திகதி	முகவரி
03/10/18/24 ஜனவரி 2022	இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 434, ஈ.டபிள்யூ.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 19, பிரதான வீதி, கேகாலை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 81, கண்டி வீதி, வரகாபொல.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 149, பிரதான வீதி, தெனியாய.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம.
03/10/18/24 ஜனவரி 2022	ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம்.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம்.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 26, கண்டி வீதி, மதவாச்சி.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை.
03/10/18/24 ஜனவரி 2022	பிரதான வீதி, மெதிரிகிரிய.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 96, அகலவத்த வீதி, மத்துகம.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 87, பிரதான வீதி, பிட்டிகல.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய.
03/10/18/24 ஜனவரி 2022	இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம்.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம்.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 75A, சிலாபம் வீதி, மாரவில.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 661/A, தேவத்த வீதி, ராகம.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 39, கொழும்பு வீதி, கந்தானை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை
04/11/19/25 ஜனவரி 2022	இல. 722, வராகொட வீதி, வீஹாரை சந்தி, களனி.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 145, மலே வீதி, கொழும்பு 02.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 66, காலி வீதி, கல்கிசை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 54, டி.எஸ்.சேனநாயக்க மாவத்தை, பொரளை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 10, ஸ்டேசன் வீதி, மொரட்டுவ.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ.
04/11/19/25 ஜனவரி 2022	இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல்.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல்.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 21, தம்புளை வீதி, குருநாகல்.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 31, குருநாகல் வீதி, கலேவெல.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய
05/12/20/26 ஜனவரி 2022	இல. 69, தெஹிவளை வீதி, மஹாராகம.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம
05/12/20/26 ஜனவரி 2022	இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 18, கெகெல்வத்த, பாணந்துறை.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 508, காலி வீதி, பாணந்துறை.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 534, காலி வீதி, வாத்துவ.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர்.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 175/A, காலி வீதி, பேருவளை.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 358, காலி வீதி, அளுத்கம.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 84A, காலி வீதி, தெஹிவளை.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 124, காலி வீதி, தெஹிவளை.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 269, பிரதான வீதி, அத்திடிய.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 676, காலி வீதி, கொழும்பு 03.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06
05/12/20/26 ஜனவரி 2022	இல. 150, பிரதான வீதி, காலி.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட.
05/12/20/26 ஜனவரி 2022	இல. 598 நு, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை.
06/13/21/27 ஜனவரி 2022	இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி
06/13/21/27 ஜனவரி 2022	இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 251, பிரதான வீதி, மாத்தளை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 55, லோவர் வீதி, பதுளை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 26, வங்கி வீதி, பதுளை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ
06/13/21/27 ஜனவரி 2022	இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 52, தன்பார் வீதி, ஹற்டன்.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 230, கண்டி வீத, மாவனல்ல.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 81, மோதர வீதி, கொழும்பு 15.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை
06/13/21/27 ஜனவரி 2022	MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09.
06/13/21/27 ஜனவரி 2022	பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை.
06/13/21/27 ஜனவரி 2022	இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08
06/13/21/27 ஜனவரி 2022	பிரதான வீதி, பொத்துவில்.
06/13/21/27 ஜனவரி 2022	இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை
07/15/22/28 ஜனவரி 2022	இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 25A, பிரதான வீதி, எலெலியகொட.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 34, பிரதான வீதி, தியல்மஹாராமய
07/15/22/28 ஜனவரி 2022	இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா.
07/15/22/28 ஜனவரி 2022	பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை
07/15/22/28 ஜனவரி 2022	சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை
07/15/22/28 ஜனவரி 2022	திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 114, பிரதான வீதி, கந்தளாய்.
07/15/22/28 ஜனவரி 2022	பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி.
07/15/22/28 ஜனவரி 2022	சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி
07/15/22/28 ஜனவரி 2022	பிரதான வீதி, அட்டாளைச்சேனை
07/15/22/28 ஜனவரி 2022	இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறார் 3, ஏறார்
07/15/22/28 ஜனவரி 2022	இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 187, பிரதான வீதி, மன்னார்.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.
07/15/22/28 ஜனவரி 2022	1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
07/15/22/28 ஜனவரி 2022	P.W வீதி, முல்லைத்தீவு.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம்.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய்.
07/15/22/28 ஜனவரி 2022	இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி
07/15/22/28 ஜனவரி 2022	பிரதான வீதி, மல்லாவி
07/15/22/28 ஜனவரி 2022	இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை
07/15/22/28 ஜனவரி 2022	இல 3, 5 வல்லை வாதி சங்கானை.
07/15/22/28 ஜனவரி 2022	இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை.

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ∴பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE

தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

ஹோமாகம பிரதேச சபை - ஹோமாகம
பிரதேச விலைமனுக் கோரலுக்கான அறிவித்தல்

ஹோமாகம பிரதேச சபையின் திண்மக் கழிவுகள் பிரிவினால் சேகரிக்கப்படும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களை 2022ஆம் ஆண்டிற்காக விற்பனை செய்வதற்காக தகைமையான நிறுவனங்களில் இருந்து பிரதேச விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விகள் விநியோகித்தல் - 2021.12.13 அலுவலக நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 3.00 வரை

கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் முடிவடைதல் - 2022.01.03 பி.ப. 2.00

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2022.01.04 பி.ப. 2.25 வரை

கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2022.01.04 பி.ப. 2.30 இற்கு

கேள்வி விண்ணப்பங்கள் வேறுவேறாக 02 பிரதிகளுடன் (மூலப் பிரதி/ நகல் பிரதி) விநியோகிக்கப்படுவதுடன் அப்பிரதிகள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை இரு உறைகளில் (2) இட்டு பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப் பிரதி/ நகல் பிரதி மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்) என்று குறிப்பிட்டு தலைவர், ஹோமாகம பிரதேச சபை, ஹோமாகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறித்த நேரத்திற்கு அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் பற்றிய இறுதித் தீர்மானம் ஹோமாகம பிரதேச சபைக்கு உரியதுடன் இது பற்றிய மேலதிக விபரங்களை ஹோமாகம பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

மீள்சுழற்சி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் - ரூ. 200.00
தொ.பே. இல - 0112855230
பெக்ஸ் - 0112857169

நிபந்தனைகள்

1. விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது வியாபார பதிவுச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. திண்மக் கழிவுப் பொருள் பிரிவில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை, சபையின் அறிவித்தல் விடுக்கப்பட்டபின்பு திண்மக் கழிவுப் பொருள் பிரிவிற்கு வருகை தந்து கொண்டுசெல்லல் வேண்டும்.
3. பிரதேச சபையினால் மீளளிக்கப்படாத ரூ. 200/- ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட கேள்வி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ் மாதிரிப் பத்திரத்தில் சேவை வழங்குதல் பற்றிய சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் பிரதேச சபைக்கு உரியது.
5. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் பிரதேச சபையுடன் சேவை ஒப்பந்தம் ஒன்றிற்கு வரல் வேண்டும்.
6. ஒப்பந்தம் ஒன்றிற்கு வரும்போது சபையினால் தீர்மானிக்கப்படும் தொகையை மீளளிக்கப்படும் பிணை வைப்பாக சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

தலைவர்,
பிரதேச சபை
ஹோமாகம

2021 டிசம்பர் 12ம் திகதி
தலைமையகத்தில்

குளியாப்பிட்டிய பிரதேச சபை
2022ஆம் வருடத்தின் பொருட்டு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தம்மால் சுயமாகத் தயாரித்துக் கொண்ட விண்ணப்பங்களை முகவரி, வியாபாரத்தின் தன்மை, தகைமை மற்றும் ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுக் கட்டணத்துடன் பதிவுத் தபாலில் எனக்கு அனுப்புதல் வேண்டும். ரொக்கப் பணமாக அல்லது காசுக் கட்டளை மூலம் அல்லது காசோலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். காசோலை, காசுக் கட்டளைகளை தலைவர், குளியாப்பிட்டிய பிரதேச சபை எனும் பெயரில் எழுதி அனுப்புதல் வேண்டும். பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2022.01.12ஆம் திகதியுடன் முடிவுறும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தொ. இல.	விடயம் / பொருள் சேவைகள் வழங்கல்	பதிவுக் கட்டணம்
01	அலுவலக காகிதாதிகள்/அச்சிடப்பட்ட ஆவணங்கள்/முத்திரை உட்பட	1000.00
02	அலுவலக உபகரணங்கள் / மரம் / உருக்குப் பொருட்கள் / உபகரணங்கள்	1000.00
03	மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்/ வீதி விளக்கு உபகரணங்கள்	1000.00
04	சுகாதாரம் மற்றும் சிகிச்சை நிலைய உபகரணங்கள்	1000.00
05	கட்டிட நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்	1000.00
06	விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சனசமூக நிலைய உபகரணங்கள்	1000.00
07	பாலர் பாடசாலை உபகரணங்கள்	1000.00
08	அச்சு வேலைகள், டிஜிட்டல் மற்றும் ஒப்செட்	1000.00
09	அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்	1000.00
10	சீருடைத் துணிகள் / கூடாரம் வகைகள்	1000.00
11	டுப்ளோ / ரோணியோ / புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள்	1000.00
12	வீதி நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்	1000.00
13	கிருமிநாசினிகள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள், முகக்கவசம், செனிடைசர், கிருமியழிப்பு திரவம் போன்றன	1000.00
14	ரெடிமிக்ஸ் வழங்குதல்	1000.00
15	அறித்தல் பலகைகள் மற்றும் பதாகைகள் வரைதல் / ஞாபகச் சின்னங்கள்	1000.00
16	நிர்மாண வேலைகளுக்கான மனிதவலு வழங்கல்	1000.00
17	நிர்மாண வேலைகளுக்கான இயந்திரோபகரணங்கள்	1000.00
18	வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல்	1000.00
19	அனைத்து வகையான வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல்	1000.00
20	மோட்டார் கிரேடர், ஜேசிபி உட்பட அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர்கள் வழங்குதல்	1000.00
21	சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளுக்குத் தேவையான உபகரணங்கள் (கிருமிநாசினிகள்) தும்புத்தடி, விளக்குமாறு உட்பட	1000.00
22	கனரக வாகனங்கள் மற்றும் இலகுரக வாகன திருத்தவேலைகள் சீட் உறைகள் இடல் மற்றும் குசன் வேலைகள்	1000.00
23	வடிகான் வரம்புக் கற்கள் (ஹியும் குழாய்கள்) கொங்ரீட் கம்பி தூண் உட்பட கொங்கிரீட் உற்பத்திகள் வழங்குதல்	1000.00
24	கணனி திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல்	1000.00
25	வாகன சேர்விஸ் வேலைகள் செய்தல்	1000.00
26	தார் வழங்குதல்	1000.00
27	நீர்க்குழாய் உபகரணங்கள் / நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்குதல்	1000.00
28	எரிபொருள் வழங்குதல்	1000.00
29	நில அளவையாளர் சேவை வழங்குதல்	1000.00
30	மொழிபெயர்ப்பாளர் சேவை வழங்குதல்	1000.00
31	சட்டத்தரணி சேவை வழங்குதல்	1000.00
32	புகைபடமெடுத்தல் மற்றும் வீடியொ படமெடுத்தல்	1000.00
33	உணவு வழங்குதல் மற்றும் பரிமாறல் சேவை வழங்குதல்	1000.00
34	பலகை வழங்குதல்	1000.00
35	தீந்தை வகைகள், தினர் மற்றும் வார்னிஷ் வகைகள் வழங்குதல்	1000.00
36	ஆபத்தான மரங்களை வெட்டும் விடயங்கள்	1000.00

நிர்மாண ஒப்பந்தங்கள்

01	500000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள்	1000.00
02	500000.00 ரூபா முதல் 1000000.00 ரூபா வரையான வேலைகள்	1500.00
03	1000000.00 ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகள்	2000.00

மேற்குறிப்பிடப்பட்ட நிர்மாண ஒப்பந்த வேலைகளுக்காக நிர்மாண (ICTAD) நிறுவனத்தின் பதிவைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைத் தவிர்ந்த ஏனைய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

விபரங்களை கடமை நேரங்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 037-4947212 / 037-4947902

2021-12.13

ஈ.எம். விஜயசிரி ஏக்கநாயக்க,
தலைவர்,
குளியாப்பிட்டிய பிரதேச சபை.

அறிவித்தல்

வாகனங்களை ஒழுங்குருத்தல், பஸ் போக்குவரத்துச் சேவை மற்றும் ரயில்வேப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகனக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் ஏக்கல வ/ப லக்திவ இன்ஜினேரு (தனியார்) கம்பனிக்கு 2022ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக, பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பெற்றுள்ள, பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

நிறுவனத்திற்கு நேரில் சமுகமளித்து களப்பரீசீலனை மேற்கொண்டதன் பின்னர் மீளளிக்கப்படாத ரூபா 3000/- இற்கான தொகையை

கிழக்கின் குரல்

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் பகடைக்காய்களாக பயன்படுத்தப்பட்டனர்

மட்டு. மாவட்ட பயிற்சி பட்டதாரி ஆசிரியர் சங்கம் கவலை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

அதிபர் ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டின் போது பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்ட பயிற்சி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

சனிக்கிழமை (11) மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட பயிற்சி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் க.அனிர்தன் மற்றும் லோ.சுதர்சன், எஸ்.பிரசாந்தினி அண்மையில் இடம்பெற்ற அதிபர் ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டின் போது பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு தங்களின் சந்தர்ப்பத்திற்கு பட்டதாரிகளை பயன்படுத்தி விட்டு தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்படப் போகின்றது என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம்.

பட்டதாரிகள் பயிலுனர் ஆசிரியர்களாக பாடசாலைகளிலே சுமார் ஒரு வருடத்தைத் தாண்டிய நிலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது ஏமாற்றப்பட்ட நிலையில் இருக்கின்றோம்.

இருப்பினும் எமது நாட்டின் ஜனாதிபதிக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். கடந்த வருடம் செம்டெம்பர் மாதம் நாடளாவிய ரீதியில் அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

அது மிகவும் சந்தோசமானதொரு விடயம். அதனடிப்படையில் பட்டதாரிகளுக்கு ஐந்து கட்டப் பயிற்சிகள் நடைபெற்றது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பயிற்சிகள் இடைநிறுத்தப்பட்டு அதன் பிற்பாடு பல பட்டதாரிகளின் விருப்பத்திற்கு இணங்க அவர்கள் பாடசாலைகளில் ஆசிரியர் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

நேர்முகத் தேர்வின் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டதற்கமைவாகவே பட்டதாரிகள் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆசிரியர் பயிற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எமது பட்டதாரிகள் பயிற்சி ஆசிரியர்களாக மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே கடமையாற்றி வருகின்றார்கள்.

அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கின்றது. இந்த ஆசிரியர் நியமனம் நிரந்தரமாக்கப்படும் என்பதாகும். அதற்காகத் தான் இத்தனை கஸ்டங்களையும் தாங்கி தங்கள் பயிற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என மேலும் தெரிவித்தனர்.

நாவிதன்வெளி பிரதேச அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள்

பதில் அரசாங்க அதிபர் ஜெகதீசன் பிரதம அதிதி

(காரைதீவு குறூப் நிருபர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நாவிதன்வெளி பிரதேச செயலகம் இணைந்து நாடாத்தும் தெய்வீக சிறுவர் திட்டத்தின் ஊடாக பின்தங்கிய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கும் திட்டம் நேற்றுமுன்தினம் மத்தியமுகாமில் நடைபெற்றது.

அவ்விழாவில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். பதில் அரசாங்க அதிபராக பதவியேற்றபின்னர் கலந்துகொண்ட முதலாவது விழா இதுவாகும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தெய்வீக சிறுவர் திட்டத்தின் ஊடாக, பின்தங்கிய கிராமங்களில் இயங்கும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டினை முன்னெடுக்கும் வகையில் கற்றல் உபகரணம், புத்தகப்பை அப்பியாச கொப்பிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருவது தெரிந்ததே.

அந்தவகையில், மத்தியமுகாம் 05 ஸ்ரீ சித்திவிநாயகர் அறநெறிப் பாடசால நாவிதன்வெளி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி உதவிப் பிரதேச செயலாளர் பே.பிரணவரூபன், அம்பாரை சிவனருள் பவுண்டேசன் செயலாளர் வே.வாமதேவன் மற்றும் ஆலய தர்மகர்த்தாக்கள், சமூக சேவையாளர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வு தொடர்பான ஒழுங்கமைப்பினை மாவட்ட செயலக இந்துக்கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.

சங்கமன்கண்டியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலாளர் நிருவாக எல்லைக்குட்பட்ட சங்கமன் கண்டி படிமலை அடிவாரத்தில் வைக்கப்பட்டு இருந்த புத்தர் சிலை, நேற்றிரவு அகற்றப்பட்டுள்ளது.

இப் புத்தர் சிலையானது நேற்று சனிக்கிழமை அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியில் சங்கமன்கண்டியில் இரவோடு இரவாக வைக்கப்பட்டு இருந்ததுடன், அதனை எதிர்த்து பொது மக்கள் மற்றும் அரசியல் வாதிகள் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

இதனையடுத்து பொலிசார் பொது மக்களிடம் இரண்டு நாள் கால அவகாசம் கேட்டிருந்ததை அடுத்து, இவ்விடத்தில் இருந்து பொது மக்கள் பௌத்த துறவிகள் மற்றும் அரசியல் வாதிகள் கலைந்து சென்று இருந்ததுடன், இவ் விடத்தில் பொலிசார் கடமைகளில் இருந்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் ரீ.சுபோதரன் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் நேற்று இவ்விடத்தில் வைக்கப்பட்டு இருந்த புத்தர் சிலையானது, அகற்றப்பட்டு இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்ததுடன், புத்தர் சிலை வைக்கப்பட்டு இருந்த கம்பியினால் ஆனா பீடம் மற்றும் பௌத்த கொடிகள் அகற்றப்படாது இருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

அந்தவகையில் இப் புத்தர் சிலை வைப்பு விவகாரமானது திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அரசியல்வாதிகள் மற்றும் அரச நிருவாகிகள் பொது மக்கள் ஆகியோர் மிக நிதானமாக அமைதியான முறையில் கையாண்டு இருந்ததுடன், பொலிசார் மிகவும் பொறுப்புடன் இவ்விடத்தில் முறன்பாடுகள் ஏற்படாதவாறு தமது கடமைகளை முன்னெடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் பெரிய பள்ளிவாசல் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு பணி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் பலர் இனங்காணப்பட்டு வருவதையிட்டு, மூதூர் பெரிய பள்ளிவாசல் நிருவாக சபையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி ஞாயிற்றுக்கிழமை (12) மூதூர் பெரிய பள்ளிவாசலிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் மூதூர் பிரதேச சபை, பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி பனிமனை, பொலிஸார், இராணுவத்தினர், சமூக நல பொது அமைப்புக்களினதும் மற்றும் பொது மக்களின் பெரும் பங்களிப்புடன் இப்பணி இடம்பெற்றது.

மூதூர் மேற்கு, ஜாயா நகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள வீதிகள், வெற்றுக்காணிகள், பாடசாலைகள், சமய நிறுவனங்கள், பாலர் பாடசாலைகள், ஆற்றங்கரைகள், மைதானங்கள், வடிகாண்கள் மற்றும் பொது இடங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் காணப்பட்ட குப்பை கூளங்கள் உடனுக்குடன் அகற்றப்பட்டு வடிகாண்களும் தூய்மைப்படுத்தப்பட்டன.

மூதூர் பெரிய பள்ளிவாசல் நிருவாகத்தினரின் ஏற்பாட்டிற்கிணங்க, அனைத்து கிராமங்களிலும் இருந்தும் பொது மக்கள், பொது நல அமைப்புக்கள் என கலந்து கொண்டு மேற்கொள்ளப்பட்ட இப்பணியின் மூலம் குடியிருப்பாளர்கள் தொடர்ச்சியாக நமது குடியிருப்பையும், அதன் சூழலையும் தூய்மை பேணி டெங்கு ஆபத்தில் இருந்து மக்கள் பாதுகாப்பு பெறுவதற்கான விழிப்புணர்வும், பள்ளிவாசல் நிருவாகத்தினர் மற்றும் அதிகாரிகள் மூலமும் மேற்கொள்ளப்பட்மை குறிப்பிடத்தக்கது.

மஜ்மாநகரில் யானைகளால் தோட்டப் பயிர்கள் சேதம்

கல்குடா தினகரன் நிருபர்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மாநகர் கிராமத்தில் இரவு வேளைகளில் யானைகள் வருகை தந்து தோட்டப் பயிர்கள் மற்றும் குடிசைகளை சேதமாக்கி செல்வதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மஜ்மா கிழக்கு மற்றும் மேற்கு கிராமத்தில் வாழும் மக்கள் தங்களது காணியில் பயன்தரும் மரங்கள், மரவள்ளி தோட்டங்கள் செய்து பராமரித்து வரும் நிலையில், இரவு வேளைகளில் வாழைச்சேனை காகித ஆலை காட்டுப் பகுதியின் ஊடாக வரும் யானைகள் தொடர்ச்சியாக பயிர்களை சேதப்படுத்தி செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

இரவு வேளையில் வாழைச்சேனை காகித ஆலை காட்டுப் பகுதியின் ஊடாக கிராமத்திற்கு வருகை தந்த யானைகள் தென்னை மரம், மரவள்ளி தோட்டம், வீட்டுப் பயிர்கள் மற்றும் வேலிகளை சேதப்படுத்துடன், எங்களது உயிர்களுக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

காகித ஆலை வீதியால் எமது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கின்றனர். அத்தோடு விவசாய செய்கைக்கும் பலர் செல்கின்றனர்.

இவ்விடயமாக அரசியல்வாதிகளுக்கு தெரிவித்தால் கரிசனை கொள்வதில்லை. ஆனால் யாரும் யானை அடித்து உயிரிழந்தால் வந்து புகைப்படம் எடுத்து வெளியிடங்களுக்கு காட்டுவதற்கு நடித்து விட்டு செல்கின்றனரே தவிர, எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. குறித்த பகுதி மிகவும் இருள் நிறைந்து காணப்படுகின்றது. இங்கு வீதி மின்விளக்குகளை அமைத்து தருமாறு ஒட்டமாவடி பிரதேச சபையிடம் முறையிட்டும் இதுவரை எந்த பலனும் இல்லை.

மூதூர் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.எம்.பிஸ்ரி கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து, கல்லூரி நிர்வாகம் நடாத்திய சேவை நலன் கௌரவிப்பு நிகழ்வில் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் மூதூர் கிளையின் பொதுச் செயலாளர் ஏ.எம். ரஹீம் (ஆசிரியர்) அவரின் சேவை நலனைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கிய போது. (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

மீன் வியாபாரிகளுக்கு தராசுகள் வழங்கி வைப்பு

(ரொட்டவெவ குரூப் நிருபர்)

திருகோணமலை உப்புவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீன் வியாபாரிகளுக்கு, தராசுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு சாம்பல் தீவு பகுதியில் இடம் பெற்றது.

திருகோணமலை நலன்புரிச்சங்கம் கனடா என்ற அமைப்பினரிடம் கடல் அன்னை மீன் வியாபாரிகள் கூட்டுறவுச்சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, ரகுநாதன் தங்கவடிவேல் என்பவரின் சொந்த நிதியிலிருந்து சனிக்கிழமை (11) தராசுகள் வழங்கிவைக்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக மீன் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலையில், தராசுகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதாகவும் மீனவர்கள் மீன் விற்பனை நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்டு வந்ததாகவும் தெரிவித்தனர்.

முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசி

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி

(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு சுகாதார பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சனிக்கிழமை முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

முதல்நாளில் 600 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி 3 இடங்களில் வழங்கப்பட்டதாக காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

காரைதீவு சுகாதாரவைத்தியஅதிகாரி அலுவலகம் மற்றும் விபுலாநந்தா சண்முகா ஆகிய இரு பாடசாலைகளிலும் சனிக்கிழமை, விசேட தடுப்பூசி நிலையங்களை நிறுவி அதனூடாக இந்த 3ஆம் கட்ட தடுப்பூசி வழங்க ப்பட்டது. எனவே அடுத்துவரும் நாட்களில் பொதுமக்கள் அனைவரும் இதற்காக பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் எமது மாகாணத்தை கொரோனாவிலிருந்து முற்றாக விடுவிக்க உதவுமாறும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

கிழக்கு மாகாணத்தில் 30வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சனிக்கிழமை முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுவருகிறது தெரிந்தது.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக கிழக்கு மாகாணத்தில்; முதலிரண்டு தடுப்பூசிகளை பெற்று 3 மாதம் கடந்த 30வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சனிக்கிழமை முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 18வயதுக்கு மேற்பட்ட சகல களநிலை உத்தியோகத்தர்களுக்கும் இந்த பூஸ்டர் தடுப்பூசி வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கும் இது ஏற்றப்பட விருக்கின்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 'ஆளுமை விருத்தி' செயலமர்வு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான ஒருநாள் 'ஆளுமை விருத்தி' பயிற்சிச் செயலமர்வு ஒலுவில் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உலக வங்கி நிதியில் நடைமுறைப்படுத்தப்படும் 'எகெட்' திட்டத்தின் கீழ், 'எகெட்' நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், விரிவுரையாளர் சி.எம்.எம்.மன்சூரின் ஏற்பாட்டில், கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இச்செயலமர்வு நடைபெற்றது. தம்புள்ள வைத்தியசாலை ஆளுமை விருத்தி பயிற்சியாளர் டொக்டர் எம்.ரீ.எம். அலவி, உளவியல், உளவளத்துணை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர், வெளிநிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஏ.சுபராஜ் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட இறுதி வருட மாணவர்கள் இச்செயலமர்வில் கலந்து கொண்டு நன்மையடைந்தனர். பங்குபற்றுனர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மட்டு. மாநகர சபை உறுப்பினர் தவராஜா காலமானார்

மட்டக்களப்பு விசேட நிருபர்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினருமான வேலுப்பிள்ளை தவராஜா சனிக்கிழமை (11) தனது 68 ஆவது வயதில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் காலமானார்.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ்த் தேசியப் பற்றாளராகவும் மட்டக்களப்பு மாநகர சபையின் கலை கலாசாரக் குழுவின் தலைவராகவும், தமிழ் இலக்கிய ஆர்வலராகவும், கதிரவன் கலைக் கழக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆலோசராகவும் இருந்து தமிழ், அரசியல், கலை மற்றும் கலாசார மேம்பாட்டுக்கு தன்னை அர்ப்பணித்துப் பணிகள் புரிந்துள்ளார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (13) மட்டக்களப்பு மாநகரசபை நகர மண்டபத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக எடுத்து செல்லப்பட்டு, மாலை 4.00 மணியளவில் கள்ளியங்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம்.

எரிவாயு அடுப்பு வெடிப்பு

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அகரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை 3 ஆம் பிரிவிலுள்ள வீடொன்றில் சனிக்கிழமை (11) இரவு 8.30 மணியளவில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. இரவு சமையல் பணிகள் முடிவடைந்து உணவு உட்கொண்டிருந்த வேளையிலேயே இந்த வெடிப்பச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இருப்பினும் இதனால் எவருக்கும் பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை . இவ்வெடிப்புச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மார்கழியின் மகிமை

ஜோதிடவியலில் மார்கழி மாதம் ஒன்பதாவது மாதமாக கூறப் படுகிறது. சூரியன் தனுசுராசி யில் சஞ்சரிப்பது மார்கழி மாதம் என்று அழைக்கப்ப டுகிறது. இம்மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரம் என கருதப்படுகிறது. மார்கழி 1ம் திகதி தனுர் மாத பூஜை ஆரம்பம். திருமணமாகாத பெண்கள் அன்று முதல் இம்மாதம் முழுவதும் தினசரி பெருமாள் கோயிலுக்கு சென்று தினமும் ஒரு பாசுரம் வீதமாக திருப்பாவை படித்தால் விரைவில் திருமணம் நடை பெறும். மனிதர்களாகிய நமக்கு ஒரு வருட காலம் என்பது தேவர்களைப் பொறுத்த வரை ஒரு நாள் கால அளவே ஆகும். அந்த வகையில் கணக்கிட்டால் நமக்கு ஒரு மாதம் என்பது தேவர்களுக்கு 2 மணி நேரம் மட்டுமே. (1 மாதத்திற்கு 2 மணி நேரம் வீதம் 12 மாதத்திற்கு 24 மணி நேரம் = 1 நாள்) இதில் தை மாதம் முதல் ஆனி மாதம் வரை வருகின்ற ஆறு மாத காலம் தேவர்களுக்கு பகல் பொழுதாக அமைகி றது. இந்தக் காலத்தை உத்தராயணம் என்று அழைக் கிறோம்.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை வருகின்ற ஆறு மாத காலம் தேவர்களுக்கு இரவுப் பொழுதாக அமைகிறது. இதை தட்சிணாயணம் என்று சொல் கிறோம். இந்த தட் சிணாயணத்தின் நிறைவுப் பகுதி அதாவது, தேவர்களைப் பொறுத்தவரை இரவுப் பொழுது நிறைவடையும் காலமான அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையான நேரமே மார்கழி மாதம் என்று பொருள் கொள்ளலாம்.

இந்த காரணத்தால்தான் தேவர்களை வரவேற் கின்ற விதமாக மார்கழி மாதத்தில் அதிகாலை 4 மணி முதல் 6 மணிக்குள் வீட்டு வாசலில் பெண்கள் வண்ணக் கோலமிடுவதை வழக்கமாகக் கொண்ட னர்.

மனிதர்களாகிய நாமும் தேவர்களுடன் சேர்ந்து பூஜை, வழிபாடு போன்றவற்றை செய்வதால் அந்த மாதத்தில் செய்யப்படும் பூஜைகளுக்கு அதிகமான சக்தி உள்ளதாக கூறுகிறது சாஸ்திரங்கள்.

ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய சிறந்த மாதம் மார்கழி ஜோதிட சாஸ்திர ரீதியாக ஆராய்ந்தால், மிரு கசீரிஷ நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சரிக்கும் காலத் தில் பௌர்ணமி தோன்றும் மாதத்தை 'மார்க்கசிர' என்று வடமொழியிலும் 'மார்கழி' என்று தமிழிலும் அழைக்கிறோம். இந்த மிருகசீரிஷ நட்சத்திரம் ம்ரு கண்டு மகரிஷிக்கு உரியது. ஜோதிடப் பிதாமகராகத் திகழ்பவர் ம்ருகண்டு மகரிஷி. இவரது 'ம்ருகண்டு சூத்ரம்' மற்றும் 'ம்ருகண்டு வாக்கியம்' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அந்நாளில் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது. என்றும் சிரஞ்சீவியாக விளங்கும் மார்க்கண்டேயரின் தந்தை இந்த ம்ருகண்டு மகரிஷி என்பதும் மார்க்கண்டேயரின் ஜென்ம நட்சத்திரம் மிருகசீரிஷம் என்பதும் கவனிக்கப்பட வேண்டியவை. சப்த சிரஞ்சீவிகள் என்றழைக்கப்படும் அஸ்வத்தாமர், மகாபலி, வியாஸர், ஹனுமான், க்ருபாசார்யர், பரசுரா மர், விபீஷணர் ஆகிய ஏழு பேருக்கு அடுத்தபடியாக நேரடியாக சிரஞ்சீவிப் பட்டத்தைப் பெற்றவர் மார்க் கண்டேயர்.

தனது உயரிய பக்தியின் மூலமாக மரணத்தை வென்ற மகாயோகி அவர். மார்கழி மாதத்திற்கு உரிய நட்சத்திரமான மிருகசீரிஷத்தில் உதித்த அந்த இளம் ஞானி தனது 16வது வயதில் மரணம் நிச்சயம் என்பதை உணர்ந்தும் இவ்வுலக சுகங்களை நாடாமல் இறைவனை மட்டுமே சிந்தையில் கொண்டிருந்தார். தனது அபரிமிதமான பக்தியினால் சிவலிங்கத்தைக் கட்டித் தழுவியிருந்த அவரைக் கொண்டு செல்ல நினைத்த எமதர்மனை சிவபெருமான் வதைத்த கதை நாம் அறிந்ததே. மார்க்கண்டேய சரித்திரம் மர ணத்தை வெல்லும் மார்கழி என்று இந்த மாதத்தின் பெருமையை நமக்கு உணர்த்துகிறது. எனவேதான் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய மார்கழி மாதத்தை தேர்ந்தெடுப்பார்கள், விவரம் அறிந்தவர்கள். பக் திக்கு முக்கியத்துவம் தரும் மாதம் அரங்கநாத னையே மணாளனாக அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டாள் விரதமிருந்த மாதம் இது.

அவரது உயரிய பக்தியின் காரணமாகத்தான் அவரால் ஆண்டவன் அடி சேர முடிந்தது. அதே போன்று ராம நாம ஜபத் தினையே தனது உயிராகக் கொண்டிருக்கும் ஆஞ்சநேயர் பிறந்ததும் மார்கழி மாத அமாவாசை நாளில். மார்கழி மாதத்தில் வரும் வளர் பிறை ஏகாதசித் திருநாளை வைகுண்ட ஏகாதசி எனக் கொண்டாடுகிறோம். இந்துக்கள் எல்லோருமே விரதம் இருக்கும் நாள் வைகுண்ட ஏகாதசி. விவரம் தெரியாதவர்கள் கூட வைகுண்ட ஏகாதசி நாள் அன்று விரதம் இருப்பதோடு உறங்காமல் கண் விழிக்க வும் செய்வார்கள். அந்த நன்னாளில் அதிகாலை வேளையில் ஆலயங்களில் சொர்க்க வாசல் திறக்கப் படுகிறது. அன்றைய தினத்தில் பெருமாளை சேவிப் பவர்கள் சொர்க்கத்தை அடைவர் என்பது சாஸ்திர நம்பிக்கையாகும். மார்கழி மாதத்தில் சூரிய பகவான் தனுசு ராசியில் சஞ்சரிப்பதால் இதை தனுர் மாதம் என்றும் அழைப்பார்கள். தனுசு ராசிக்கு அதிபதி குரு பகவான். அதாவது, குரு பகவான் வீட்டில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் இது.

நவகிரகங்களில் அரசன் ஆகிய சூரியன், குருகுல வாசம் செய்யும் நேரம் என்பதால் அந்நாளில் அரசர் கள் உட்பட சத்திரியர்கள் யாரும் போர்த் தொழிலில் ஈடுபட மாட்டார்கள்.

பொதுமக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டிய காலமாக மார் கழியைக் கொண்டிருந்தார்கள் நம் முன்னோர்கள். 'மாதங்களில் நான் மார்கழி' என்று கீதையில் கண்ணன் சொன்னது பக்தி மார்க்கத்தால் என்னை அடைய முடியும் என்பதை

சுட்டிக்காட்டவே என்பதை நாம் உணர வேண்டியது அவசியம். சுபநிகழ்வு நடக்காததன் காரணம் நமது சொந்தக் காரியங்களை யெல்லாம் ஒதுக்கி வைத் துவிட்டு இந்த ஒரு மாதமாவது இறைவனின் மேல் நமது முழு சிந்தனையையும் செலுத்த வேண்டும் என்ற காரணத்தினால்தான் மார்கழியில் திரும ணம் முதலான சுபநிகழ்ச்சிகளைத் தவிர்த்தார்கள் நம் முன்னோர்கள். பக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டும் மாதமாக மார்கழியைக் கருதினார்கள். வீடுபேறு எனும் மோட்சத்தினை அடைய உதவும் மாதம் இது. பீடு என்றால் பெருமை மிகுந்த அல்லது உயரிய என்று பொருள். பீடு உடைய மாதமாகிய இதனை பொருள் மாற்றி பலர் திரித்து இந்த புனிதமான மாதத்தினை பீடை மாதமாக மாற்றிவிட்டனர்.

தேவர்களுடன், மக்களும் இறை சிந்தனையில் ஈடுபடும்போது சுபநிகழ்சி என்னும் மகிழ்ச்சியால் பக்திக்கு இடர் ஏற்படக் கூடாது என்ற பெரியோரி களின் உயர்ந்த நோக்கமே மார்கழியில் எந்த சுப நிகழ்ச்சிகளும் நடைபெறாததற்கு உண்மையான காரணமாகும். இனியாவது இந்த மார்கழியின் சிறப்பிற்கேற்ப நாமும் அதிகாலையில் எழுந்து தேவர்களுடன் சேர்ந்து பூஜை, அபிஷேகம் போன்ற வற்றை செய்து தேவர்களைப் போன்று சிறப்படை வோம்.

மானுடவியல் (தொடர்)

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

பெயர்: ஐயடிகள் காடவர்கோன்
குலம்: குறுநில மன்னர்
பூசை நாள்: ஐப்பசி மூலம்
அவதாரத் தலம்: காஞ்சி

51

ஐயடிகள் காடவர்கோன் பெறுதற்கரிதாகிய மானுட சரீரமானது முடிமன்னராய் உல காண்டு அறபரிபாலனஞ் செய்யும் உயர்பெரு மகிமை தாங்குதற்கு முரியதாகும். ஆனால், இச்சரீரத்தோடு உயிர்க்குள்ள தொடர்பானது நாளொரு விதமாய்த் தேய்ந்து தேய்ந்து போய் ஒரு கட்

டத்தில் உயிர் உடலை விட்டு அறுதியாக விலகியேவிட வேண்டிய அவலநிலையும் மேலும் எடுக்க விருக்குஞ் சரீரந்தோறும் மீளமீள அப்படியே நிகழ்ந்து கொண்டிருக்கும் அநர்த்தமும், தவிர்க்கமுடியாத வகையில் உளதாகும்.

அங்ஙனம் நிலையில்லாமையாகிய இப்பொய்ம்மையோடு கூடிய இந்த உடலுயிர் வாழ்க்கைப் பற்றை, மனமே, நீ அறவிட்டொழிவா யாக. விட்டதும் பாம்பை வைத்தாட்டுந் திருக்கரத்தினரும் பரமபதியும் திருமுருகன் தந்தையுமாயுள்ளவரும் திருத்தினை நகரில் எழுந்தருளி யுள்ளவருமாகிய சிவக்கொழுந்தீசனைச் சென்றடைவாயாக என்பது அவ்வாய்மை. அது நாயனார் வாக்கில், "வேந்த ராயுல காண்ட றம் புரிந்து வீற்றிருக்குமிவ் வுடலது தன்னைத் தேய்ந்திறந்துவெந் தூயருழந்திடுமிப் பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே பாந்தளங் கையில் ஆட்டுகந்தானைப் பரமனைக் கடற் சூர்தடிந்திட்ட சேந்தன் தாதையைத் திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே" என வரும்.

திருத் தொண்டராகிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார் வரலாற் றுண்மை இத்தேவார வாய்மைக்கு உருவந் தீட்டியவாறாக அமைந்தி ருக்கும் நயங்குறிப்பிடத்தகும்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் கீதா ஜெயந்தி

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் நாளை 14ஆம் திகதி செவ்வா யன்று கீதா ஜெயந்தி அனுஷ்டிக்கப்படும். அன்றைய தினம் மாலை 5.00 மணிமுதல் பகவத் கீதை பாராயணம் நடைபெறும். பாராயண நிகழ்வில் கலந்துகொள்ளும் பக்தர் களுக்கு பகவத்கீதை அன்பளிப்பாக வழங்கப்ப டும். பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பகவான் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முகவரி: இல. 188 புதுச்செட்டித்தெரு, கொழும்பு13 தொலைபேசி இல: 0772288166 மின்னஞ்சல்: iskcon @slt.lk முகநூல் முகவரி: Iskcon Sri Lanka

அறநெறி நிவுநெறி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

18762) இறந்த பெற்றோருக்கு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால் அவர் கள் கொடுக்கும் சிராத்தம் ஏற்புடையது தானா?

பெண்கள் நேரடியாக இதை செய்யக் கூடாது. யாராவது ஒரு ஆணிடம் தர்ப் பையைக் கொடுத்து அவர் மூலமாக செய்ய வைக்கலாம். திருமணமான பெண்கள் கணவன் வீட்டைச் சார்ந்து விடுவதால், பெற்றோருக்காக தர்ப்பை கொடுக்கக் கூட அதிகாரம் கிடையாது. பெற்றோரின் பங்காளிகளைச் செய்யச் சொல்லி பொருளுதவி மட்டும் செய்ய லாம்.

18763) கோவில்களில் கொடுத்த பூமாலையை வீட்டில் உள்ள சுவாமி படங்களுக்கு போடுவது சரிதானா?

ஒருமுறை சுவாமிக்கு சாத்தப்பட்டு பிறகு எடுக்கப்படும் மாலைக்கு "நிர் மால்யம்' என்று பெயர். நிர்மால்ய மாலைகளை வேறு தெய்வத்திற்குச் சாத் துதல் கூடாது.

18764) பூஜை அறையில் சுவாமி படங் களுடன் மறைந்த பெரியவர்களின் படங் களை வைக்கலாமா?

சுவாமி படங்களுடன் சேர்த்து வைப்பது கூடாது. சற்று தள்ளி தனியாக வைத்து வழி படலாம். மறைந்த பெரியவர்கள், பிதுர்கள் என்று அழைக்கப்படுவர். தெய்வநிலை வேறு. பிதுர்நிலை வேறு.

18765) கிரகப்பிரவேசம் செய்யும் போது முதலில் பசுவையும், கன்றையும் அழைத்து வந்து கோபூஜை செய்வதன் நோக்கம் என்ன?

பசுவின் உடம்பில் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருக்கிறார்கள். நான்கு வேதங்களும் நான்கு கால்க ளாக உள்ளன. கன்றுக்காக சுரக்கும் பாலை நமக்கும் கொடுக்கும் பசுவை "கோமாதா" என அழைக்கிறோம். இதன் காலடி பட்ட இடத்தில் மங்களம் உண் டாகும். கன்றுடன் கூடிய பசுவை பூஜிப் பதால், லட்சுமியின் அருள்கடாட்சம் நிலைத்திருக்கும். கன்று இல்லாமல் பசுவை தனித்து அழைத்து செல்லவோ, பூஜை செய்யவோ கூடாது.

ஹம்ஸ யோகம் - 51

எல்லா சமய நூற்களும் உன்னை அறி என்றே உபதேசிக்கி றது. அதுவே உனது ஆன்மா விற்குச் செய்யும் கடமை என்று புகட்டுகிறது. இதைச் சரியாகப் புரிந்துகொண்டு வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டுவரும் பயிற்சியினைச் செய்வதே வாழ்க் கையின் உண்மையான் இலட்சியம்! நான் என்பதன் அர்த்தத்தினை உண் மையாக அறியாமல் ஒருவன் நிம் மதியையோ, இலட்சியத்தினையோ தேட முயன்றால் அவன் உண்மை யான செல்வத்தையோ, வாழ்க்கை யின் இலட்சியத்தையோ அடைய மாட்டான். ஒருவன் சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை தனது பயிற்சிக் குக் கொண்டுவர விரும்பும் ஒருவன் மிகத் தெளிவாக தனது மனதில் இருத்த வேண்டிய உண்மை ஆன் மாவும் உடலும் இரண்டு வேறு வேறானவை என்பது. இந்த இரண் டிற்குமிடையிலான உறவு என்பது வாகனமும், அதை ஓட்டுபவனும் போன்று சிந்திக்கப்பட வேண்டும். உடல் என்பது ஆன்மா தன்னை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் ஒரு கருவி மாத்திரமே என்ற தெளிவு இருக்க வேண்டும்.

உடலினது தேவையும், ஆன் மாவினது தேவையும் வெளிவே வேறானவை. உடலுக்கு சொகுசான வாழ்க்கை, ஆடம்பரம், மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாம் தேவை. இது இன்பத்தைத் தேடி அலையும் பித் துப்பிடித்த மனதினை உருவாக்கும். ஆனால் ஆன்மா எந்த விதமான பௌதீக உலகிய இன்பங்களால் தாக்கமுறாததும், பற்றாக்குறை, துன்பங்கள் எதுவும் ஏற்படாத வஸ்து. எமது உடலும் மனமுமே இந்த ஆசைகளையும், வேட்கை யையும் உருவாக்கிக்கொண்டு இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டிருப்பவை. மனதில் புலன்களால் உருவாகும் இந்த உணர்ச்சிகளும், எண்ணங் களும் அந்தக் கணம் சார்ந்தவை. எதுவும் நிரந்தரமானவை அல்ல. விரும்பியது கிடைத்தவுடன் அந்த விருப்பத்தின் மீது இருக்கும் கவர்ச்சி மறைந்து போகும்.

அதன் பிறகு மனம் இன்னொரு விருப்பத்தின் மீது ஓடத்தொடங் கும். அதை அடைந்த பின்னர் இன்னொன்றின் மேல், இப்படி ஒவ்வொன்றின் மீதும் பற்றுக் கொண்ட வாழ்க்கையாக ஓடத்தொ டங்கும். இறுதியாக இன்னும் திருப் தியுறவில்லை என்ற நிலையில் வாழ்க்கை முடியும்.

அனேக மானிடர்கள் மனித வாழ்க்கை என்பது இறைவனின் படைப்பில் மிக உன்னதமானது என்பதும் இந்த உடலிற்குள் இருக் கும் உயிர் தன்னை குறித்த உயர் நிலைக்கு உயர்த்திக்கொள்ள வழங் கப்பட்ட வாய்ப்பு என்பதையும் உணர்வதில்லை. உயர் பரிணாமத் தினை அடையவேண்டும் என்று தூண்டப்படுபவர்களும் கூட சாதனை என்று வரும் போது மேலோட்டமாகத்தான் ஈடுபடுகிறார் கள். ஆன்மீகம் என்று சொல்லிக் கொண்டு இறை நூல்களைப் படிப் பது, பூஜை செய்வது, கோயிலிற்குச் செல்வது ஆன்ம முன்னேற்றம் என நினைக்கிறார்கள். அந்தச் செய்கை கள் மனதினை உண்மையான ஆன் மீகத்தில் தூண்டுவதற்கான ஒருவித ஆரம்ப செய்கைகள்தான் அன்றி, உண்மையான ஆன்மீகம் அல்ல என் பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இவை எவையும் ஆன்மா பற்றிய உண்மையான அறிவையோ, உடலி னது,மனதினதும் தாழ் இயல்புகள் பற்றிய அறிவையோ தரா.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் தெய்வீக கிராம நிகழ்வு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் தில் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தெய்வீக கிராம நிகழ்வு இடம்பெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அணுசரணையில் , புத்த ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தி னால் நடத்தப்பட்ட குறித்த நிகழ்வில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வெங்கட சுந்தர ராம குருக்கள் ஆசியுரை நிகழ்த்தினார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரனின் ஆலோசனை யில், திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ர. விமல ரஞ்சனியின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக் கள் பாபுசர்மா மற்றும் இந்து கலாசார திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோ கத்தர் பவானி முகுந்தன் உள்ளிட்ட உத் தியோகத்தர்களும், சிவாச்சாரியார்களும், ஆலய நிர்வாக சபையினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நந்திக்கொடியேற்றப்பட்ட துடன் , அரசங்கத்திற்கும், நாட்டு மக்களுக் கும் ஆசி வேண்டி விஷேட பூஜைகளும் , தல விருட்சம் நடுகையும் இடம்பெற்றன.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வெங்கட சுந்தர ராம குருக்கள் பூஜை வழிபாடுகளை நடத்தினார்.

இதன்போது புத்தளம் மாவட்ட அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 13
திங்கட்கிழமை

ஆமையுடன் ஒருவர் கைது

யாழ். விசேட நிருபர்

சுமார் 300 கிலோ கிராம் எடையுள்ள கடலாமையை பிடித்து வந்த ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் உடமையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆமை உயிருடன் உள்ளதால் நீதிமன்றின் அனுமதியுடன் குறிகாட்டுவான் கடலில் மீள விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

திணைக்களங்கள் தரப்படுத்தலில் யாழ் மாவட்ட செயலகம் முதலிடம்

யாழ். விசேட நிருபர்

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் 2018/2019ம் ஆண்டினை தழுவி நடாத்தப்பட்ட 2020ம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ் மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றிருப்பதுடன் , அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் பங்குகொண்ட 14 பிரதேச செயலகங்களும் வெற்றி பெற்றுள்ளன. அந்த வகையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் முதலாம் இடத்தினையும் யாழ்ப்பாணம், தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் இடத்தினையும் சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

உடுவில், காரைநகர், சங்கானை, ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்கள் சிறப்பு மெச்சுரை விருதினையும் நெடுந்தீவு பிரதேச செயலகம் மெச்சுரை விருதினையும் பெற்றுள்ளது .

யாழ் மாவட்ட செயலகம் தேசிய ரீதியாக மாவட்ட தரப்படுத்தலில் முதலிடம் பெற்றிருப்பதுடன் பங்குபற்றிய 14 பிரதேச செயலகங்களும் பொதுமக்கள் சேவை வழங்கலில் சிறந்த அங்கீகாரத்திற்கான அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வெற்றியானது யாழ் மாவட்டம் முழுவதுக்கும் நிர்வாக ரீதியாக கிடைத்த சிறந்த அங்கீகாரம் ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

இது ஒரு மக்கள் சேவை வழங்கலில் உத்வேகம் மற்றும் ஊக்கத்தை எடுத்துக்காட்டுவதுடன், எதிர்காலத்திலும் வினைத்திறன் மற்றும் விளைதிறனான பொதுமக்கள் திருப்தியுறும் வகையில் சேவை வழங்கலில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வலுப்பெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதேவேளை இப்போட்டித் தொடரில் 2016 ஆம் ஆண்டில் 3ம் இடத்தையும் 2018 ஆம் ஆண்டில் 2ம் இடத்தையும் பெற்று அரச அலுவலகங்களுக்கு முன்மாதிரியான தனித்துவமான மாவட்டமாக யாழ் மாவட்டம் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இயற்கை ஊற்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும்

கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் அமலன்

முல்லைத்தீவு குறுப நிருபர்

முல்லைத்தீவு கரைதுறைபற்றின் இயற்கை நீர் ஊற்றுகள் உள்ள இடங்களில் பிளாஸ்டிக் இலத்திரனியல், விலங்குக் கழிவுகள் மக்களினால் கொட்டப்படுவதனால் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருவதாக கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது இயற்கை நீர் ஊற்றுக்களான ஊற்றங்கரை மற்றும் புதுநிகுடா, குஞ்சுக்குளம் மற்றும் பெரும்பீலி ஆகிய இடங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள், விலங்குக் கழிவுகள் என்பனவற்றினை மக்கள் கொட்டுவதனால் அப்பகுதிகளில் உள்ள அரியவகை தாவரங்கள் பல அழிவடைந்துள்ளன . பல தாவரங்கள் அருகிச் செல்கின்றன. அதுமட்டுமல்லாமல் நீர் மாசடைகின்றது.

இந்த ஊற்று நீர்களில் கொட்டப்படும் கழிவுகள் நந்திக் கடலிற்கு கொண்டு செல்லப்படுவதனால் அங்கு வாழ்கின்ற மீன், நண்டு, இறால் போன்ற உயிரினங்கள் அழிவடைகின்றன. இதனால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே இந்த கழிவுகளினை கொட்டாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இயற்கை ஊற்றுகளை பாதுகாப்பதன் மூலம் நிலத்தடி நீர் பாதுகாத்து குடிநீர் வளத்தினை பேண முடியும். இயற்கை ஊற்றுகளுடன் கழிவுகள் கலப்பதனால் நீர் பெருமளவில் மாசடைந்து எதிர்காலத்தில் குடிநீருக்குக் கூட நெருக்கடி ஏற்படலாம். இயற்கை வளங்களை பாதுகாப்பதில் எல்லோரும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

வட மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை

கரவெட்டி தினகரன் நிருபர்

வட மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைதடியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் காலதாமதம் அடையும் நிலமையில் இந்த ஏற்பாட்டை ஆளுநர் மேறகொண்டுள்ளார். இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

மேற்படி கூட்டம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு காரணமாக பிற்போடப்பட்டது.

வ ட்டுக்கோட்டையில் பாரதியாரின் உருவச்சிலை

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்ப்பாணம் வ ட்டுக்கோட்டைக் ரோட் முதலாம் ஒழுங்கையில் சுப்பிரமணிய பாரதியாரின் உருவச்சிலை திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.

மறவன்புலவு சச்சிதானந்தம் சம் பிரதாயபூர்வமாக சிலையை திரை நீக்கம் செய்து திறந்துவைத்தார். இதன்போது சிறுவர்களால் பாரதியாரின் பாடல்களும் பாடப்பட்டன.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில், மறவன்புலவு சச்சிதானந்தம், பாலகுமார சர்மா குருக்கள், யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். நாக விஹாரையின் வண. மீஹ சந்துர விமலதேரர், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுமன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாரதியாரின் நற் சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டும் வண்ணமாக குறித்த உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி சென்ற புகையிரதம் வவுனியாவில் முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்து

வவுனியா விசேட நிருபர்

கொழும்பில் இருந்து யாழ் நோக்கிச் சென்ற புகையிரதம் வவுனியாவில் முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது முச்சக்கர வண்டி சாரதி முச்சக்கர வண்டியில் இருந்து பாய்ந்தமையால் மயிரிழமையில் உயிர் தப்பியுள்ளார்.

நேற்று (12.12) காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி சென்ற கடுகதி புகையிரதமானது தாண்டிக்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது குறித்த பகுதியில் இருந்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தின் காரணமாக சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு முச்சக்கர வண்டி இழுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அது முழுமையாக சேதமடைந்துள்ளது. முச்சக்கர வண்டியின் சாரதி விபத்தின் போது பாய்ந்தமையால் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். இவ் விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த பாதுகபாப்பற்ற புகையிரதக் கடவையில் பல தடவைகள் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமையும், உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது

தென்மராட்சி வரணிப் பகுதி விபத்தில் மூவர் படுகாயம்

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

தென்மராட்சி வரணிப் பகுதியில் பயணிகள் சிற்றூர்தியும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை(12) மதியம் தென்மராட்சியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிற்றூர்தியின் பின்பக்கமாக டிப்பர் வாகனம் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வரணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மன்னாரில் நாடகப் பயிற்சிப் பட்டறை

(தலைமன்னார் விஷேட நிருபர்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையிலும் வழிப்படுத்தலிலும் மன்னார் மாவட்ட செயலகம் ஒழுங்கு செய்த மன்னார் மாவட்ட கலைஞர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை சனிக்கிழமை (11.12.2021) மன்னார் மாவட்ட செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வ. மகேஸ்வரன், மன்னார் மாவட்ட செயலக கணக்காளர் எஸ்.செல்வகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு நாடகப் பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் மடு பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி தவமதி ஆகியோர் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையின் தலைவர் விரிவுரையாளர் கலாநிதி க.ரதிதரன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த அழகியற்கற்கைகள் பீடத்தின் விரிவுரையாளர் தி. தர்மலிங்கம் மற்றும் யாழ் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா. அருள் சந்திரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

துணுக்காயில் நாட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

(புதுக்குடியிருப்பு விசேட நிரூபர்)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் நாட்டுத் துப்பாக்கியினை வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரை மல்லாவி பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட உயிலங்குளம் பகுதியினை சேர்ந்த 41 அகவையுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சர்வதேச செய்திகள்

இணையதளப் பாதுகாப்பு பற்றி எஸ்.சி.ஓ பிராந்திய கருத்தரங்கு

இந்தியாவில் இடம்பெற்ற எஸ்.சி.ஓ பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் இரண்டு நாள் கருத்தரங்கில் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் மற்றும் கடும்போக்காளர்களால் இணையதளம் தவறாக பயன்படுத்தப்படுவதற்கான பதில் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

கடந்த புதன்கிழமை முடிவுற்ற சங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ) இந்த மாநாட்டில் பாகிஸ்தான் உட்பட அனைத்து உறுப்பு நாடுகளும் பங்கேற்றன.

சைபர் பயங்கரவாதம், ரான்சம் வெயார் மற்றும் டிஜிட்டல் தடயவியல் போன்ற முக்கிய பகுதிகளில் ஒத்துழைப்புக்கான சாத்தியம் பற்றியும் இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

எஸ்.சி.ஓவின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பு கௌன்சிலின் தலைமையை ஒக்டோபர் 28 தொடக்கம் ஓர் ஆண்டு காலத்திற்காக இந்தியா ஏற்றது.

எஸ்.சி.ஓ மற்றும் அதன் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்புடன் குறிப்பாக பாதுகாப்பு விடயங்களை கையாள்வது குறித்த பாதுகாப்பு விவகாரங்களில் ஒத்துழைப்பை பலப்படுத்துவதில் இந்தியா ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஆஸ்திரியாவில் தடுப்பூசியை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்

கட்டாய தடுப்பூசி உட்பட கொவிட்19 தொற்றுக்கு எதிரான கட்டுப்பாடுகளை எதிர்த்து ஆஸ்திரியாவில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக நான்காவது வார இறுதியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 44,000 பேர் வரை பங்கேற்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஐரோப்பாவில் முதல் நாடாக ஆஸ்திரியாவில் தடுப்பூசி பெற்றவர்களுக்கு கடந்த மாதம் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டதோடு இது நேற்று ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்தது. எனினும் தடுப்பூசி பெறாதவர்களுக்கான கட்டுப்பாடு தொடர்ந்து நீடித்து வருகிறது. எனினும் தடுப்பூசி பெறுவது பற்றி முடிவெடுக்கும் திறன் மக்களுக்கு இருக்க வேண்டும் என்று அதனை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர். யாருக்கும் வலுக்கட்டாயமாகத் தடுப்பூசி போடப்படாது என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் தடுப்பூசி போட மறுப்போருக்கு ஆரம்பக்கட்டமாக 600 யூரோ அபராதம் விதிக்கப்படும்.

“கட்டாய தடுப்பூசி வேண்டாம்” என்ற பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி இருந்தனர். க்ளங்ன போர்ட் மற்றும் லின்ஸ் நகரங்களில் சிறிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஒரே நாளில் 10 முறை தடுப்பூசி பெற்ற ஆடவர்

நியூசிலாந்தில் ஒரே நாளில் 10 முறை கொவிட்–19 தடுப்பூசி போட்டுக்கொண்டதாக ஆடவர் மீது விசாரணை நடத்தப்படுகிறது.

சந்தேக நபரை ‘நம்பமுடியாத அளவு சுயநலமிக்கவர்’ என்று மக்கள் கூறியுள்ளனர். ஆடவர் பணம் பெற்றுக்கொண்டு மற்றவர்களின் பெயரில் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டதாக உள்ளூர் ஊடகங்கள் கூறுகின்றன.

சந்தேக நபர் பல்வேறு தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்றுள்ளார்.

இன்னொருவருக்குப் பதிலாகத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது மற்றவர்களின் உயிரைப் பணயம் வைப்பதாகும் என்று நியூசிலாந்து சுகாதார அதிகாரிகள் கூறினர்.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாமலேயே போட்டுக்கொண்டுவிட்டதாகப் பதிவுசெய்யப்படுவதும் ஆபத்தானது என்று அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். இதுபோன்ற சம்பவங்களை சுகாதார அமைச்சு தீவிரமாய் கண்காணிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பரிந்துரை செய்யப்பட்டதைவிட அதிகமாக யாரேனும் தடுப்பூசி போட்டிருந்தால் விரைந்து மருந்துவ உதவியை நாடுமாறு அதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டனர்.

நியூசிலாந்தில் 90 வீதமானவர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றிருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் பயங்கர சூறாவளி:
உயிரிழப்பு 100 ஐ தாண்டுமென அச்சம்

தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவை தாக்கிய சக்திவாய்ந்த சூறாவளியால் கட்டடங்கள் சேதமடைந்து பேரழிவு ஏற்பட்டிருப்பதோடு 80க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

அமெரிக்க நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்கிய இந்த சூறாவளியில் கென்டக்கியில் 70க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் மெழுகுவர்த்தி தொழிற்சாலையைச் சேர்ந்த பலர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் உயிரிழப்பு 100 தாண்டும் என்று அஞ்சப்படுகிறது.

மேய்பீல்ட் நகரில் இருக்கும் இந்த தொழிற்சாலையின் இடிபாடுகளில் மீட்புக் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். இந்த தொழிற்சாலையை சூறைக்காற்று நேரடியாகத் தாக்கியுள்ளது.

சுமார் 110 தொழிலாளர்களில் 40க்கும் அதிகமானவர்கள் காப்பற்றப்பட்டபோதும் ஏனையவர்கள் உயிரிடன் காப்பாற்றப்படுவது அதிசமான ஒன்றாக இருக்கும் என்று கென்டக்கி ஆளுநர் அன்டி பேஷியர் குறிப்பிட்டார்.

மேய்பீல்டில் இருக்கும் பொலிஸ் நிலையம் இடிந்து தீயணைப்பு பிரிவு உபகரணங்கள் சேதமடைந்திருக்கும் நிலையில் நிர்வாகத்தினர் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளனர்.

சுமார் 200 மைல் தூரத்திற்கு சுழன்று அடித்த காற்று பல்வேறு கவுண்டிகளில் கடுமையான சேதத்தை ஏற்படுத்தி விட்டதாக கென்டக்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் மின்சாரம் மற்றும் நீர் இன்றி உள்ளனர்.

அமெரிக்க வரலாற்றிலேயே இது மிகப்பெரிய பருவநிலைப் பேரிடராக இருக்கலாம் என ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார். பேரிடர் மேலும் மோசமடைந்ததற்குப் பருவநிலை மாற்றம் காரணம் என்றார் அவர்.

இந்த சக்திவாய்ந்த சூறாவளி தாக்குதல்களுக்கு கென்டக்கி தவிர ஆர்கன்சாஸ், இல்லினாய்ஸ், மிசோரி மற்றும் டென்னிஸி ஆகிய 4 மாநிலங்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளன.

ஆர்கன்சாஸ், இல்லினாய்ஸ், மிசோரி, டென்னிஸி மாநிலங்களிலும் சூறாவளி தாக்குதலால் மக்கள் பலியாகி உள்ளனர். கென்டக்கியில் மட்டும் 3 இலட்சம் இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். பலர் அரசு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் இல்லினாய்ஸ் மாநிலத்தில் அமேசான் கிடங்கில் கோரப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்து கொண்டு இருந்த 6 பேர் பலியானார்கள். அமெரிக்காவை தாக்கிய மிகப்பெரிய சூறாவளிகளில் இதுவும் ஒன்றாகும். பெரும்பாலும் வரலாற்றில் மிகப்பெரிய சூறாவளியாக மாறும் வாய்ப்புகளும் உள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சூறாவளி வேகமாக பயணித்து 5 மாநிலங்களை தாக்கி உள்ளது. 400 கி.மீ வரை இந்த சூறாவளி பயணம் மேற்கொண்டுள்ளது. கடைசியாக 1925இல் அமெரிக்காவை தாக்கிய சூறாவளி 355 கி.மீ தூரம் சென்றது. அதன்பின் இப்போதுதான் சூறாவளி ஒன்று இவ்வளவு தூரம் பயணித்துள்ளது. இதனால் அமெரிக்காவை தாக்கிய நீளமான சூறாவளிகளில் இதுவும் ஒன்றாக பார்க்கப்படுகிறது. அமெரிக்காவில் சூறாவளி ஏற்படுத்திய சேதத்தில் 1925இல் 747 பேர் பலியாகினர். 2011இல் அதிகபட்சமாக 800 பேர் உயிரிழந்திருந்தனர்.

பிரிட்டனில் அடுத்த கொரோனா அலை தொடர்பில் எச்சரிக்கை

பிரிட்டனில் மேற்கொண்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்படாமல் இருந்தால் ஜனவரியில் அடுத்த பெரிய கொரோனா அலை ஏற்படலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தடுப்பூசிகள் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதைப் பொறுத்து ஏப்ரல் இறுதிக்குள் இந்த திரிபால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 25,000 முதல் 75,000 வரை மாறுபடலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், வைரஸ் வகை தொடர்பான விடயத்தில், இன்னும் நிச்சயமற்ற தன்மையே நிலவுவதாக இந்த ஆய்வின் பின்னணியிலுள்ள வல்லுநர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வில் மோசமான சூழ்நிலை எப்படி இருக்கும் என்பது குறித்து இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என இவ்வாய்வோடு தொடர்பில்லாத விஞ்ஞானி ஒருவர் கூறினார். பிரிட்டனில் புதிதாக 54 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 633 பேருக்கு ஒமிக்ரோன் வைரஸ் தொற்றியுள்ளது. இங்கிலாந்தில், இன்று முதல் 30 வயதும் அதற்கும் மேற்பட்டோரும் பூஸ்டர் எனும் கூடுதல் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம்.

பிரான்ஸின் பசிபிக் பிரதேசத்தில் சுதந்திர கருத்துக்கணிப்பு வாக்கு

பிரான்ஸின் பசிபிக் பிரதேசமான நியு கலாடோனியாவில் பிரான்ஸில் இருந்து சுதந்திரம் பெறுவதை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் இறுதி கருத்துக்கணிப்பு வாக்கு நேற்று இடம்பெற்றது.

எனினும் கொரோனா தொற்று சுதந்திரமான வாக்குப் பதிவை தடுப்பதாகக் கூறி பிரதான சுதந்திர ஆதரவு கட்சிகள் இந்தத் தேர்தலை புறக்கணித்த நிலையிலேயே வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கிழக்காக 2,000 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் இந்த பிரதேசத்திற்கு சுதந்திரத்திற்கான மூன்று கருத்துக்கணிப்பு வாக்குகளை நடத்த 1988 இல் அனுமதி அளிக்கப்பட்டது.

எனினும் 185,000 வாக்காளர்களை கொண்ட இந்த பிரதேசத்தில் 2018 மற்றும் கடந்த ஆண்டு இடம்பெற்ற வாக்குகளில் பிரான்ஸிலிருந்து பிரிவதை பொரும்பாலான வாக்காளர்கள் நிராகரித்திருந்தனர்.

எனினும் இந்த வாக்கெடுப்பில் பிரான்ஸ் எந்த பக்கமும் சாராது செயற்படுவதற்கு பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மெக்ரோன் உறுதி அளித்துள்ளார். பிரான்ஸின் மிகப்பெரிய கடல்கடந்த பிரதேசங்களில் ஒன்றாக இருக்கும் நியு கலாடோனியா, உலகின் நிக்கல் உற்பத்தியில் 10 வீதத்தை கொண்டுள்ளது.

முஸ்லிம் லீக்-என் கட்சிக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டு

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்–என் கட்சியின் செயற்பாட்டாளர்கள் வாக்குகளை விலை கொடுத்து வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி தேர்தல்கள் ஆணையகத்தைக் கோரியுள்ளது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்–என் கட்சியின் பணியாளர்கள் வாக்காளர்களிடமிருந்து வாக்குகளை இலஞ்சம் கொடுத்து வாங்குவதாகப் பிரதிபலிக்கும் வீடியோக்கள், சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டுள்ளதை அடுத்து இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமா ரி.வி அறிக்கையின்படி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸின் கட்சி அலுவலகம் போன்று வீடியோ காணொளி காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக்காணொளியை தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் பஞ்சாப் தலைவர் எஜாஸ் சௌத்ரி பகிர்ந்துள்ளதோடு, “இதன் காரணத்தினால் தான் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்–என் கட்சியினர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் முஸ்லிம் லீக்–என் கட்சியினர், இது போலியான வீடியோ நாடகம். இந்நாடகத்தின் நடிகர்கள் முகக்கவசம் அணிந்துள்ளனர் என்றுள்ளனர்.

முதல் விண்வெளி வீரரின் மகள் விண்வெளி பயணம்

அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரான அலன் ஷெப்பர்ட்டின் மகள், தன் 74ஆவது வயதில் விண்வெளிக்குச் சென்றுள்ளார்.

அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் ஆரம்பித்த ப்ளு ஒரிஜின் எனும் வணிக ரீதியிலான விண்வெளி நிறுவனத்தின் விமானத்தில் லாரா ஷெப்பர்ட் சர்ச்லே இந்த விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார்.

இப்பயணத்தில் ஆறு பேர் கலந்து கொண்டனர். பயணிகள் சில நிமிடங்களுக்கு புவியீர்ப்பு விசையற்ற நிலையை அனுபவித்தனர். ப்ளு ஒரிஜின் நிறுவனம் விண்வெளி சுற்றுலாவை ஊக்குவிக்கவும், புதிய சந்தையைப் பிடிக்கவும் நடத்திய மூன்றாவது பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

லாரா ஷெப்பர்ட்டின் தந்தை கடந்த 1998ஆம் ஆண்டு உயிரிழந்தார். அவர் 1961 மே 5ஆம் திகதி ப்ளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கனவெரலிருந்து ஏவப்பட்ட மெர்குரி விமானத்தில் விண்வெளிக்குப் பயணித்து, அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரானார்.

இஸ்ரேல் பிரதமர் ஐக்கிய அரபு இராச்சியம் பயணம்

இஸ்ரேல் பிரதமர் நப்டாலி பென்னட் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணம் மேற்கொண்டு அந்த வளைகுடா நாட்டின் முடிக்குரிய இளவரசர் ஷெய்க் முஹமது பின் சயித் அல் நஹ்யானை சந்திக்கவிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் பென்னட் அலுவலகம் செய்தி வெளியிட்டபோதும் ஐக்கிய அரபு இராச்சியம் இதனை உடன் உறுதி செய்யவில்லை. கடந்த ஆண்டில் இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தின. அமெரிக்காவின் மத்தியஸ்தத்திலேயே இந்த உடன்பாடு எட்டப்பட்டது. இது இரு தரப்புக்கும் இடையே சுற்றுலா தொடக்கம் வர்த்தகம் வரை பல்வேறு உடன்படிக்கைகளுக்கு வழிவகுத்தது. ஈரானுடன் அணு சக்தி பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தை பலப்படுத்த பென்னட் எதிர்பார்ப்பதாக கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் தாத்தாவை மறுத்த இத்தாலி தேவாலயம் மன்னிப்பு

கிறிஸ்மஸ் தாத்தா உண்மை இல்லை என்று குழந்தைகளிடம் கூறியதற்காக இத்தாலியின் சிசிலி நகரில் உள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளது.

கிறிஸ்மஸ் தாத்தா அணிந்திருக்கும் சிவப்பு ஆடை கொகா கோலா நிறுவனத்தால் விளம்பரத்திற்காக உருவாக்கப்பட்டதாகவும் அந்தப் பேராயர் குழந்தைகளிடம் கூறியுள்ளார்.

கிறிஸ்மஸ் பண்டிகையின் உண்மையான அர்த்தத்தைப் பிள்ளைகளுக்கு உணர்த்த பேராயர் முயற்சி செய்ததாக அந்தத் தேவாலயம் கூறியது. அதனால் ஏமாற்றமடைந்த குழந்தைகளுக்குத் தேவாலயத்தின் தொடர்பு பணிப்பாளர் தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். எனினும், குழந்தைகளின் உற்சாகம் வீணாக்கப்பட்டதாகப் பெற்றோர்கள் குறைகூறினர். குடும்பப் பாரம்பரியங்களிலும் கொண்டாட்டங்களிலும் பேராயர் தலையிட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

நகர்வலம்

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு:

எதிர்க்கட்சியினர் வீண் பிரசாரங்களை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

சபையில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

கொரோனா பரவல் சூழ்நிலைக்கு பின்னர் நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் எதிர்க் கட்சியினர் வீண் பிரசாரங் களை விடுத்து ஒத்துழைப்பு வழங்க முன் வருமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரி வித்தார்.

ஆர்ப்பாட்டங்களை மேற் கொண்டு சர்வதேசத்திற்கு தவறான தகவல்களை வழங்குவதற்கு எதிர்க் கட்சியினர் முற்பட்டால் சுற்றுலாத்துறையை மீள கட்டி யெழுப்ப முடியா மல் போகும் என தெரி வித்த அவர், அனைவரும் ஒன்றிணைந்தே வீழ்ச்சிய டைந்துள்ள சுற்றுலாத்து றையைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அமைச் சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சுற்றுலாத் துறை தொடர்பில் 27.2ன் கீழ் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் யுத்தம் நிலவிய காலத் தில் இலங்கைக்கு 4 லட்சம் சுற்று லாப் பயணிகள் வருகை தந்துள்ள னர். யுத்தத்திற்குப் பின்னர் அந்த எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங் கியது.

2018 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் நேரடியாகவும் மறைமு கமாகவும் மூன்று மில்லியன் பேர் ஈடுபட்டிருந்தனர். அந்த வருடத்தில் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்தனர். அதன் போது சுற்றுலாத்துறை வருமானமாக 4.5 பில்லியன் ரூபாவை பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதனையடுத்து நாட்டில் இடம் பெற்ற ஈஸ்டர் பயங்கரவாத குண் டுத்தாக்குதல் அதனைத்தொடர்ந்த கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை என சுற்றுலாத்துறை பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

வீழ்ச்சியடைந்த சுற்றுலாத்து றையை மீண்டும் கட்டியெழுப்பு வதற்கு எதிர்க்கட்சியினரதும் ஒத்து ழைப்பு அவசியம் .

அதனை விடுத்து எதிர்க்கட்சியினர் பிரசாரங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங் களை மேற்கொள்ளும்போது வெளி நாட்டு உல்லாசப் பயணிகளின் வரு கைக்கு அது தடையாகவே அமையும் என்பதை அவர்கள் உணர்ந்து செயல் பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

புத்தளம் நகர சபை சில பகுதிகளுக்கு புதிதாக மின் விளக்குகள்

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் மன்னார் வீதி பாரியப்பா பள்ளி பின்பகுதி குடியிருப்பு மற்றும் நெடுங்குளம் குளக்கட்டு வீதி பகு திகளில் நகரபிதாவின் பணிப்பின்பேரில் நக ரசபையால் அப்பகுதி களில் முதன் முதலாக வீதி விளக்குகள் ஒளி ருவதை கண்காணிக்கச் சென்றார்.

நீண்ட காலமாக குறிப்பிட்ட பகுதிகளில் மின் விளக்குகளின்றி மக்கள் அல்லலுறுவதாகவும் இதனால் சமூக விரோதிகளின் நடமாட்டம் இரவில் அதிகரித்து காணப்படுவதாகவும் கிடைத்த மக்களின் முறைப்பாடுகளுக்கு நக ரபிதா இதன்மூலம் தீர்வைப் பெற் றுக்கொடுத்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன் நகரபிதா குறித்த பகுதிகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது மக்களுக்கு வழங் கிய வாக்குறுதியும் தற்போது நிறை வேற்றப்பட்டுள்ளது.

மறைந்த நகரபிதா மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் அவர்களினது, அப்பகுதியில் மின்னொளி ஒளிர வேண்டும் என்ற விருப்பமும் நிறைவேறியுள்ளது.

எதிர்வரும் நாட்களில் அப்பகுதி யிலுள்ள கால்வாய்கள் துப்புரவாக் கப்படவுள்ளதாகவும் நகர பிதா ரபீக் தெரிவித்தார்.இதன் போது நக ரபிதாவுடன் நகரசபை உறுப்பினர் கள் ரனீஸ் பதூர்தீன், பர்வின் ராஜா, ஆரிப் சிஹான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அநுராதபுரம்; விவசாய சங்கங்களுக்கு புல்வெட்டும் இயந்திரம் வழங்கி வைப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் , திறப்பனை தினகரன் நிருபர்கள்

அநுராதபுரம் திறப்பனை பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட விவசாய சங்கங்களுக்கு தேவையான புல் வெட்டு இயந்திங்களை இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வழங்கியுள்ளார்.

சேதனப் பசளை திட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் களைக களைக் கட்டுப்படுத்தவும் களைக் கொள்ளிகளை பயன்படுத்துவதற்கு பதிலாக களைகளை கட்டுப்படுத்த விவசாயிகளை வழிநடத்துவதே இதன் நோக்கமாகும்.

விவசாய சங்கங்கள் ஊடாக குறித்த புல்சமச்சீராக்குதல் இயந்திரங்களை சகல விவசாயிகளுக்கும் வாடகை அடிப்படையில் வழங்கி விவசாய சங்கங்கள் அதன் மூலம் இலாபம் ஈட்டும் வழிமுறையை வகுக்க வேண்டும் என சங்கங்களின் பிரதி நிதிகளுக்கு இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த நிகழ்வின் பின்னர் இரா ஜாங்க அமைச்சர் திறப்பனை கமநல சேவை திணைக்கள உரக் களஞ்சிய சாலையை பார்வையிட்டுள்ளார். அங்கு அரசாங்கத்தினால் வழங்கப் பட்டுள்ள சேதனப் பசளை மற்றும் திரவப் பசளை என்பன குவித்து வைக்கப்பட்டுள்ளதை அவதானித் தார். அவைகளை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்காமை தொடர்பில் அதிகாரிகளிடம் வினவிய போது அவைகளை விவசாயிகள் எடுத்துச் செல்ல வருவதில்லை என தெரிவித் தனர்.

பின்னர் இராஜாங்க அமைச்சர் திறப்பனை கமநல சேவை மத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சேதனப் பசளை திட்டத்தி னையும் பார்வையிட்டார்.

புல்வெட்டும் இயந்திர நிகழ்வில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச் சர், விவசாய திட்டத்தின் தற்போதய நிலவரம் தொடர்பில் விவசாயிகள் மற்றும் வேளாண் ஆராய்ச்சி அலுவ லர்களிடம் விசாரித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

அமைச்சர்களான விமல், டளஸ் கண்காணிப்பு விஜயம்

வெலிகம தினகரன் நிருபர்

மாத்தறை மாவட்ட யடியன பிர தேசத்தில் அமைந்துள்ள ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலை கடந்த சில காலமாக பல்வேறு காரணங்களால் தொழிற்படாதிருந்ததையடுத்து அதை துரிதமாக மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள் ளது.

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் இத்தொழிற்சாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டனர்.

மக்கள் நேரடியாகவும், சுழற்சி முறையிலும் வேலை வாய்ப்பு களைப் பெற சந்தர்ப்பங்களை உருவாக்கவே இத்தொழிற்சாலை மீண்டும் இயங்க வைக்க முயற் சிக்கப்படுகின்றது. இதன்பிரகாரம் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவதற்குள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளது. இத் தொழிற்சா லையின் கட்டடப் பகுதிகள் சேதம் அடைந்துள்ள நிலையில் அதைமீண் டும் புனர் நிர்மாணம் செய்ய பிரதேச சபையுடன் இணைந்து செயற்பட தீர் மானிக்கப்பட்டுள்ளது.

தேசியசிறுகைத்தொழில் இணைப்பு சபையின் கீழ் இத்தொ ழிற்சாலை 1964 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அப்போதைய வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சராக பணியாற்றிய மைத்திரி பால சேனாநாயக்கவினால் ஆரம்பிக் கப்பட்டது.

ஓடு மற்றும் செங்கல் உற்பத்திக் கான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் போதிய ளவு காணப்படாததால் கடந்த சில காலமாக இத்தொழிற்சாலை மூடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு வீரர் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

அநுராதபுரம் திறப்பனை தினகரன் நிருபர்

பதவிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பராக்கிரமபுர கூட்டுறவு சங்க கட்டிட புன ரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த தனது நண்பனை சந்திப்பதற்கு சென்றிருந்த சிவில் பாதுகாப்பு வீரர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். கடந்த (08) இரவு 10.00 மணியளவில் மின்சார தாக்கு தலுக்கு உள்ளாகியுள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு வரும் பதவிய பொலிஸார் தெரிவித்தனர். பதவிய தோணிகள பகு தியைச் சேர்ந்த 28 வயது திருமணமா காத சிவில் பாதுகாப்பு வீரர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சிவில் பாது காப்பு திணைக்கள பதவிய கல்குளம் முகாமில் கடமையாற்றி வரும் அவர் முகாமின் " அதி ரித்ம '' இசைக்குழுவின் அறிவிப்பாளராக கடமையாற்றி வந்தவர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

வெலிகம அறபா தேசிய பாடசாலையில் நீண்டகாலமாக கடமை புரிந்து ஓய்வு பெற்று மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரிய ஆசிரியைகளை கௌரவிக்கும் பிரியா விடை வைபவமொன்று அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் 9 ஆசிரிய ஆசிரியைகள் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரி அதிபர் எம். டி. எம்.முதஹ்ஹர் ஒரு ஆசிரி யைக்கு நினைவுப்பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம் வெலிகம தினகரன் நிருபர்)

யானை தாக்கி இருவர் உயிரிழப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

சூரியவெள, மீகஹ ஜந்துர பிரதே சத்தில் மோட்டார் சைக்கிளில் சென் றுகொண்டிருந்த இருவர் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள் ளதாக சூரியவெள பொலிஸார் (08) தெரிவித்தனர்.

இவ்வாறு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகிய இருவரினதும் சடலங் கள் சூரியவெள வைத்தியசாலையி ருந்து ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர்.

பாணந்துறை தொட்டவத்தை அல்பஹ்றியா மத்திய கல்லூரியின் 1993 க.பொ.த. (சாதாரணம்) குழுமத்தின் 28 வது வருட நிறைவின் முதலாவது ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் லேக் சைட் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பழைய மாணவர்களை காணலாம். இவ்வொன்றுகூடல் இராப்போசனத்துடன் நிறைவுபெற்றது.

(படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

வெவ்வேறு விபத்துகளில் மூவர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் பொலிஸ் வலயத் தின் மதவாச்சி மற்றும் எலயாபத் துவ பொலிஸ் பிரிவுகளில் இடம் பெற்ற மூன்று வெவ்வேறு வாகன விபத்துக்களில் மூவர் உயிரிழந் துள்ளதாக வலய போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நியாஸ் தெரிவித்தார்.

அநுராதபுரம் புத்தளம் வீதியின் புளங்குளம் பகுதியில் கடற்படை பஸ் வண்டியொன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இடம் பெற்றுள்ள விபத்தில் ஒருவரும் மதவாச்சி பொலிஸ் பிரிவின் இக்கி ரிகொள்ளாவ மற்றும் இசின்பெஸ் ஸகல பகுதிகளில் இடம்பெற்ற இரு வெவ்வேறு விபத்துக்களான பஸ்விபத்து மற்றும் கார் முச்சக்கர வண்டி மோதி இடம்பெற்ற விபத் துக்களில் இருவருமாக மூன்று பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக் கதாகும்.

இவர்கள் 23,26,55 வயதுடைய நொச்சியாகம மற்றும் மதவாச்சி, கிளிநொச்சி பகுதிகளை வசிப்பிட மாக கொண்டவர்கள் என்பது தெரி யவந்துள்ளது.

காயமடைந்த மேலும் இருபது பேர் அநுராதபுரம் போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். அவர்களில் எட்டுபேர் கடற்படை வீரர்கள் என்பது குறிப் பிடத்தக்கதாகும். சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி மற்றும் எலயாபத்துவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருவ தாக அநுராதபுரம் வலய போக் குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நியாஸ் மேலும் தெரி வித்தார்.

மதுரங்குளி பிரதேசத்திற்கு புதிய பொலிஸ் நிலையம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் பிராந்திய பொலிஸ் அத் தியட்சகர் பிரிவுக்குட்பட்ட மதுரங் குளி பிரதேசத்தில், கடந்த வெள் ளிக்கிழமை (10) புதிய பொலிஸ் நிலையமொன்று திறந்து வைக்கப் பட்டது.

ஜனாதிபதியின் 'சௌபாக்கியா' வேலைத்திட்டத்தின் கீழ் நாடு முழு வதும் புதிய பொலிஸ் நிலையங் கள் திறந்து வைக்கப்பட்டு வரும் நிலையில், மதுரங்குளி பகுதியிலும் புதிய பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்படுள்ளது.

வடமேல் மாகாணத்துக்கு பொறுப் பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டு புதிய பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் புத்தளம் பிராந் திய பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி. எஸ். ஜயமஹ, பொலிஸ் அத்தியட் சகர் டி.டி.பி. வீரசிங்க, உட்பட உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், புத்தளம் பிராந்தியத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களிகளின் பொறுப்பதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த புதிய பொலிஸ் திறப்பு விழா நிகழ்வின் ஆரம்பத்தில் சர் வமத தலைவர்கள் ஆசி வழங்கிய பின்னர், பொலிஸ் நிலையம் வைப வரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு புதிதாக திறந்து வைக் கப்பட்டுள்ள, பொலிஸ் நிலையம் முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மூக்குத்தொடுவா, கந் தத்தொடுவா, பாலசோலை, கடை யாமோட்டை, கணமூலை வடக்கு, கணமூலை தெற்கு, புபுதுகம, மது ரங்குளி, வேலுசுமனபுர, வீரபுர, புழு திவயல், விருதோடை, நல்லந்தளுவ ஆகிய 13 கிராம சேவகர் பிரிவுகள் புதிய பொலிஸ் நிலையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

குறித்த 13 கிராம சேவகர் பிரிவில் 34,000 பொதுமக்கள் இந்த பிரதேசத் தில் வசிக்கின்றனர்.

மதுரங்குளி பொலிஸ் நிலையத் தின் பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் கே.கே.ஜி. விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திபுலாகல பிரதேச சபை பட்ஜெட் தோல்வி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலநறுவை மாவட்டம் திபு லாகல பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் ஆறு மேலதிக வாக்குகளி னால் தோற்கடிக்கப்பட்டுள்ளன.

குறித்த சபையில் 21 உறுப்பினர் கள் அங்கம் வகிப்பதுடன் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஒருவர் இடை நிறுத்தப்பட்டுள்ளதனால் 20 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந் துகொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இணைந்து திவுலாகல பிரதேச சபையின் அதிகாரத்தை கொண்டி ருந்த நிலையில் திபுலாகல பிரதேச சபை தலைவர் ஜயந்த மாரசிங்க (ஸ்ரீல சு கட்சி) வினால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் கடந்த (08) பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் முன்வைக்கப் பட்டது.

இதன் போது திட்டத்திற்கு ஆதர வாக 07 பேரும் எதிராக 13 பேரும் வாக்களித்தனர்.

அதனூடாக 2022 ஆம் ஆண்டுக் கான வரவு செலவு திட்டம் ஆறு மேலதிக வாக்குகளினால் தோற்க டிக்கப்பட்டுள்ளன.

வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் ஜயசிங்க பண்டார வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சதொச பல்பொருள் அங்காடிகளின் பெயர் பலகைகளில் தமிழ்மொழி எங்கே?

தமிழ் மொழி உள்ளடக்கப்பட வேண்டுமென செந்தில் தொண்டமான் கோரிக்கை

அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றப்படும் புதிய பெயர் பலகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவது கண்டிக்க தக்க விடயமென இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது,

அண்மைக்காலமாக சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றியமைக்கப்படும் புதிய பெயர் பலகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் உள்ளன. சிங்களம் மற்றும் தமிழ் மக்கள் பயன்படுத்தும் அங்காடியாக சதொச உள்ளது.

ஆகவே, தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதற்கான காரணம் என்ன? இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதுடன், தேசிய மொழிகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளேன். உடனடியாக இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் வலிறுத்தியுள்ளேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

வீட்டுப்பணிப்பெண்கள் தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம்

(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

வீட்டுப்பணிப்பெண்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும் அப்போதுதான் ஒரு மித்த குரலாக எங்களால் முன்னோக்கி செல்ல முடியும் என புரட்டெக் அமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் கருப்பையா மைதிலி தெரிவித்தார்.

ஹட்டன் லா எடம்ஸ் விருந்தகத்தில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் அண்மையில் இடபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

வீட்டு பணிப்பெண்களின் கோரிக்கை அல்லது பிரச்சினை என்பது சுமார் 200 வருட பழமை வாய்ந்தது. வீட்டுப்பணிப்பெண்களின் உரிமைகள் என்பது தீர்க்கப்படாத ஒன்றாக காணப்படுகின்றது.எனவே வீட்டுப்பணிப்பெண்கள் தொடர்பாக நாம் கூறுவது அவர்களின் உரிமைகள் என்ன இவர்களுக்கு கிடைக்கும் குறைந்த பட்ச வருமானம் என்ன என்பதை தீர்மானிக்க வேண்டும். இந்த பிரச்சினைகளை எடுத்து செல்லும் நோக்கிலே புரடெக் தொழிற்சங்கம் செயல்படுகின்றது.

வீட்டுப்பணிப்பெண்கள் தங்களுக்கான சம்பளத்தை ஒரு கோரிக்கையாக வைக்க வேண்டும். அத்துடன் தான் எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்கின்றோம் என்பதை உணர வேண்டும்.

அது போல் எமது சங்கம் கூட இந்த கஷ்டமான பணியை குறித்த வீட்டுப்பணிப்பெண்களுக்கு உணர வைப்பதற்கு முயற்சிக்கின்றது. மேலும் ஒரு சிலர் வீட்டுப்பணிப்பெண்கள் என்ற சொற்பதத்தை கூறுவதையே தவிர்க்கின்றனர். இப்படியான சூழ்நிலையில்தான் இந்த புரட்டெக் தொழிற் சங்கத்தில் அனைவரையும் ஒன்று திரட்டி அவர்களின் பிரச்சினைகளை வெளிகொணர முயற்சிக்கின்றோம். அதற்கு வீட்டுப்பணிப்பெண்கள் அவர்களின் பிரச்சினைகளை கூறுவதற்கு முன் வர வேண்டும்.

அத்துடன் வீட்டுப்பணிப்பெண்கள் சட்டபூர்வமாக பாதுகாக்கப்பட்டால் மாத்திரமே அவர்களுக்கான உரிமைகள் சுதந்திரம் கிடைப்பதோடு அதுபோல் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஈடிஎப் ஆகியவையும் கிடைக்கும். எனவே அவர்கள் தொழிலாளர் காரியாலயத்தில் இணைந்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இணைவார்களாகவிருந்தால்தான் ஒரு ஒருமித்த குரலாக எங்களால் முன்னோக்கி செல்ல முடியும் என அங்கு தெரிவித்தார்.

நான் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது கிடையாது

-இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

" நான் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது கிடையாது. அரசியலைவிடவும் சிறந்த நிர்வாகத்தையே செய்ய விரும்புகின்றேன். அதனால்தான் கடந்த ஆட்சியில் முழுமைப்படுத்தப்படாத வீட்டுத் திட்டங்களை முழுமைப்படுத்தி மக்களுக்கு வழங்கி வருகின்றேன். எனது அமைச்சு ஊடான புதிய வேலைத்திட்டங்கள் ஜனவரி முதல் ஆரம்பமாகும்." என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் இன்று (11.12.2021) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" எதையும் செய்யவில்லை என சிலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். புதுமையாக நான் எதையாவது செய்வதாக இருந்தால் அரசியல் பழிவாங்கலில் தான் ஈடுபட்டிருக்க வேண்டும். அதை நான் செய்யவில்லை. குறைவாக முழுமைப் பெறாத நிலையில் இருந்த திட்டங்களை முழுமைப்படுத்துவதில் தீவிரம் காட்டினேன்.

நான் அமைச்சு பதவியை ஏற்கும்போது அந்த அமைச்சு 2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா கடன் சுமையில் இருந்தது. நல்லாட்சியின்போது 4 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தில் 699 வீடுகள்தான் மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. நான் அமைச்சு பதவியை ஏற்ற பின்னர் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை இம்மாதத்துக்குள் கையளிக்கப்படும்.

அவர்களால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை நிறுத்தியிருக்க முடியும். அதனை நாம் செய்யவில்லை. எனது அமைச்சின் புதிய வேலைத்திட்டங்கள் அடுத்தவருடம் முதல் ஆரம்பமாகும்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தம் மூலம் நாம் தொழிலாளர்களை பாதுகாத்தோம். ஆனால் அது தொடர்பில் போலி பரப்புரைகளை முன்னெடுத்து எம்மையும் தொழிலாளர்களையும் தூரப்படுத்த முற்பட்டனர். அன்று கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக செயற்பட்ட சங்கங்களும், அரசியல் கட்சிகளும் இன்று சந்தா பணத்துக்காக ஒப்பந்தம் வேண்டும் என்கின்றன. எனவே, சுயநல அரசியலை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை சனத்தொகையில் 10 வீதமானோர் அரச சேவையில் உள்ளனர். கொரோனா நெருக்கடி நிலையால் இனி ஆட்சேர்ப்பு நடக்குமா என தெரியவில்லை. எனவே, நாம் சுயதொழில் பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிலர் வேலைதேடியே காலத்தை வீணடிக்கின்றனர். சொந்த முயற்சி மீதும் நம்பிக்கை செலுத்த வேண்டும்.

நாம் அபிவிருத்திகளை செய்தாலும் திறப்பு விழா நடத்தி பிரச்சாரம் செய்யவில்லை. அரசியலைவிடவும் சிறந்த நிர்வாகத்தைதேய நான் விரும்புகின்றேன்." என்றார்.

ஆயுர்வேத மருத்துவ சபை

சுதேச வைத்திய மேம்பாடு கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு

பாரம்பரிய மருத்துவராக தொழில்பயிற்சி பெறும் மாணவர்களுக்கான ஆயுர்வேத மருத்துவ சபையின் முன் பதிவைப் பெற்றுக் கொள்ளல்

பராம்பரிய மருத்துவர்களைப் பதிவு செய்யும் முறைமையை செயற்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட பராம்பரிய மருத்துவர்களின் கீழ் தற்போது தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாவர்கள் ஆயுர்வேத மருத்துவ சபையில் முழுமையான பதிவுக்கு உற்படுத்தப் படல் வேண்டும் என மருத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆசிரிய மருத்துவரின் கீழ் தொழில் பயிற்சி பெறுகின்ற பாரம்பரிய மருத்துவ மாணவர்களுக்கு ஆயுர்வேத மருத்துவ சபையின் முழுமையான பதிவு 2022.01.31ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆசிரிய மருத்துவரின் கீழ் தொழில் பயிற்சி பெறும் மாணவர்கள் மருத்துவ சபையின் முன் பதிவு செய்வதற்கான தகைமைகள்

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த ஆரோக்கிய நிலையில் இருத்தல் வேண்டும்.
III. 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
IV. குற்றங்கள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் தண்டனை பெறாது இருத்தல் வேண்டும்.
V. க.பொ.த. உயர்தரம் எந்தத் துறையிலாவது மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(கவனிக்கவும்: முன் பதிவைப் பெற்ற ஒருவராக இருப்பினும், முறையான பதிவைப் பெறுவதற்காக மேற்படி கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

குறித்த மாணவர்களின் தகவல்கள் மாதிரிப் பத்திரம் 01 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் குறித்த விண்ணப்பத்தை ஆயுர்வேத மருத்துவ சபை அலுவலகத்தில் அல்லது மருத்துவ சபை உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த முறைமை செயற்படும் நாள் முதல் முறையான பதிவிற்காக இந்த முன் பதிவை பெற்றுள்ள பாரம்பரிய மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

(கவனிக்கவும்)

பல பிரிவுகளின் கீழ் பதிவு செய்துள்ள மருத்துவராக இருப்பினும் அவருக்கு 08 வருடத்திற்குள் ஐந்து மாணவர்களுக்கு மட்டுமே முன் பதிவை செய்ய முடியும்.

தொடர்புகள்:-
தொலைபேசி: 011-5672905, 011-5672906
முகவரி: பதிவாளர் ஆயுர்வேத மருத்துவ சபை, நாவின்ன, மஹரகம
இணையத்தளம்: www.ayurvedicmedicoun.gov.lk

பேராசிரியர் எம்.டீ.ஜே. அபேகுணவர்தன,
ஆயுர்வேத ஆணையாளர் மற்றும்
ஆயுர்வேத மருத்துவ சபையின் தலைவர்.
2021 டிசம்பர் 01ம் திகதி

பெறுகை அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபை

"நீர்கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை D4E இயந்திரத்தை பயன்படுத்தி மெல்லியதாக்கல்"

நீர்கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை கொட்டுகின்ற கொச்சிக்கடை ஓவிட்டியாவத்த குப்பை கூடத்திற்கு கொண்டுவந்து கிடைக்கின்ற குப்பைகளை மெல்லியதாக்கி அதன்மீது போடப்படுகின்ற மண்/ சரளைகளை பரப்பலுக்கு தேவையான இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய அனுபவம் பெற்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விமனு விபரம்:

கேள்விமனு	படிவக் கட்டணம் ரூபா 1500/= மற்றும் அது சார்ந்த வரிக் கட்டணம்.	
கேள்விமனு	வைப்புக் கட்டணம் (மீளளிக்கப்படுவது) ரூபா 15,000/=	
கேள்விமனு	படிவம் வழங்கப்படுவது	2022.01.05 ஆம் திகதி பி.ப. 3.00 வரை
கேள்விமனு	படிவம் ஏற்கப்படுவது	2022.01.06 ஆம் திகதி பி.ப. 2.00 வரை
கேள்விமனு	திறக்கப்படுவது	2022.01.06 ஆம் திகதி பி.ப. 2.05க்கு

❖ கேள்விமனுக்களை இரு பிரதிகள் கொண்டதாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குப்பைகளை மெல்லியதாக்கல்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

தகைமை:-

I. பிரதேச செயலாளர் அலுவலகம் ஒன்றில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
II. போதுமான பணிக்குழு ஒன்றை பணியில் ஈடுபடுத்துவதற்கு திறன் இருத்தல் வேண்டும்.
III. போதுமான மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் இருத்தல் வேண்டும்.
IV. சரளை/ மண் இயந்திரம் பயன்படுத்தி மெல்லியதாக்குதல் தொடர்பில் முன் தகைமையை சமர்ப்பித்துள்ளவர்களின் அனுபவம் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்.

01. வட் வரியின் கீழ் பதிவு செய்திருக்கும் நபர்கள் கேள்விமனுவின் இரு பிரதிகளிலும் குறித்த வட் இலக்கம் மற்றும் தொகையை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
02. இரு பிரதிகளைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களை 2022.01.06 ஆம் திகதி பி.ப. 2.00 க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறில்லையேல் நகர ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும்.
03. கேள்விமனுக்களை சமர்ப்பிக்கும்போது அதன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறாக கடித உறைகளில் இட்டு (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு) முத்திரை இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. எந்த ஒரு கேள்விமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை இந்த சபை வசமானது. கேள்விமனு தொடர்பில் நீர்கொழும்பு மாநகர சபையின் முடிவு இறுதி முடிவாகும்.
05. வெற்றிகரமான கேள்விமனுதாரரை தேர்வு செய்த பின் கேள்விமனுவை வழங்கலுக்கு முன்னர் நீர் கொழும்பு மாநகர சபையுடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்.
06. கேள்விமனுவை திறக்கும் சந்தர்ப்பத்தில் கேள்விமனுதாரருக்கு அல்லது அவரின் எழுத்துமூல அனுமதியை பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு மாத்திரம் தோன்ற முடியும்.
07. மேலும் தெளிவுபடுத்தல் தேவையெனில் அலுவலக நேரத்தில் கீழுள்ள இலக்கத்திற்கு அழைத்து மேலதிக விபரங்களை நகர சுகாதார திணைக்கத்தில் இருந்து கேட்டறிந்துகொள்ள முடியும்.

தலைமை பொதுச் சுகாதார பரிசோதகர் 031-2222262

என்.பி.ஆர்.வி. பெர்னாண்டோ,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
நீர்கொழும்பு

2021.12.10 ஆம் திகதி

விலைமனுக்களுக்கான அழைப்பு

மஹர பிரதேச சபை

மஹர பிரதேச சபைக்கு பின்வரும் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல் மற்றும் விற்பனை செய்வதற்காக விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தொ. இல.	விபரங்கள்	எண்ணிக்கை	வைப்புச் செய்ய வேண்டிய விலைக்கோரல் பிணை (ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணை முறியாக)	விலைமனுக்கள் மற்றும் விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாக வேண்டிய காலம்
(A)	(B)	(C)	(D)	(E)
1	குப்பை முற்றவெளிக்கான டிராக்டர்	02	50,000.00	2022-03-29
2	குப்பை முற்றவெளிக்கான 01 கியூப் டிப்பர் வண்டி	01	100,000.00	2022-03-29
3	தகனச்சாலைக்கான 33 Kva மின்பிறப்பாக்கி இயந்திரம்	02	60,000.00	2022-03-29

இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேற்படி ஒவ்வொரு விடயத்திற்கும் இயைபாக பெற்றுக்கொண்ட விலைக்கோரல் படிவத்தைப் பயன்படுத்தி வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச சபைக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். 2021-12-28ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைக்கோரல் படிவங்களை மஹர பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் படிவங்கள் மஹர பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தினால் மட்டுமே வழங்கப்படும். விலைக்கோரல் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய இயந்திரம் அல்லது வாகனத்தின் வகையைக் குறிப்பிட்டு '' மஹர பிரதேச சபைக்கு பின்வரும் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல் மற்றும் விற்பனை செய்வதற்காக விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள்கோரல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைக்கோரல் அறிவுரைகளைக் கடைபிடித்து தயாரித்துக்கொண்ட சகல விலைமனுக்களையும் தலைவர், மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்தை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் மேற்படி Dயின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பண வைப்பொன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், வங்கிப்பிணைமுறி மூலம் வைப்பைச் செய்வதானால் அதை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2021-12-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் அதன்பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளவர்கள் அல்லது அவர்களின் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை மஹர பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைவர்,
மஹர பிரதேச சபை,
பஹல கரகஹமுன, கடவத்தை.
தொலைபேசி இல. 0112-927076 (வழங்கல்கள்)

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க

கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் என கோரி தொழிலாளர்கள் போராட்டம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

தோட்ட நிர்வாகம் மற்றும் கம்பனிகளுக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தி, தோட்டத் தொழிலாளர்களால் லிந்துலை நகரில் (12.12.2021) முன்னெடுத்த போராட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் பங்கேற்று, கூட்டு ஒப்பந்தத்துக்காக குரல் எழுப்பினர். லிந்துலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில் டயகம, தலவாக்கலை, கொட்டகலை, லிந்துலை மற்றும் ஏனைய சில தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர். இ.தொ.காவின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சக்திவேல், கொட்டகலை, தலவாக்கலை பிரதேச சபைகளை சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட இ.தொ.காவின் பிரதிநிதிகளும் இப்போராட்டத்தில் பங்கேற்று, தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் பங்கேற்ற மக்கள், தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடிகளை கண்டித்ததுடன், தமது உரிய வகையில் சம்பள கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

" கொழுந்தின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அரை நாள் பெயர்தான் விழுகின்றது. ஆயிரம் ரூபா கிடைத்தும் பயன் இல்லை. " என தொழிலாளர்கள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினர். கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் தமக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய மக்கள், அந்த ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

களனி பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடங்கள்

2021.12.24 ஆம் திகதி வரையும் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமும் தகைமையுமுள்ள நபர்களிடமிருந்து களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும்.

மருத்துவ பீடம்

❖ **மாற்றுத்திறனாளி கற்கைநெறிகள் திணைக்களம் (ஒலியியல்/ தொழில்சார் சிகிச்சை)**
விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத நிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

https://www.kln.ac.lk/vacancies என்ற இணையதளத்திலிருந்து மேலேயுள்ள ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு தகைமைகள் மற்றும் அனைத்து உரித்தான தகவலை பெற்றுக் கொள்ளலாம்.

சம்பள அளவுத்திட்டங்கள்:

U-AC 3(IV) : **விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை):**
மாதாந்தம்54,600-10x1,335-67,590 ரூபா (அண்ணளவான திரட்டிய சம்பளம் 136,110 ரூபா)

U-AC 3(III) : **விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத நிலை)**
மாதாந்தம் 69,580-5x1,630-77,730 ரூபா (அண்ணளவான திரட்டிய சம்பளம் 182,445 ரூபா)

U-AC 3(II) :**சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்** II:
மாதாந்தம் 79,360-11x1,630-97,290 ரூபா (அண்ணளவான திரட்டிய சம்பளம் 222,865 ரூபா)

U-AC 3 (I) : **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்** I:
மாதாந்தம் 91,310-7x2,170-106,500 ரூபா (அண்ணளவான திரட்டிய சம்பளம் 255,250 ரூபா)

விண்ணப்பிக்கும் நடைமுறை:

மேலேயுள்ள பதவிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விபரங்கள் ஆகியவற்றை அலுவலக நேரங்களில் கல்விசார் தாபனங்களுக்கான பிரதிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது **https://www.kln.ac.lk/vacancies** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தபாலினூடாக விண்ணப்பப் படிவங்களை பெறவிரும்பினால், 23x10 செமீ அளவுள்ள முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதிப் பதிவாளர்/கல்விசார் தாபனங்கள், களனி பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு ஸ்கேன் பிரதிகளுடன் 2021 டிசம்பர் 24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். (''விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம் ஆகியன மின்னஞ்சலின் பாடத்தின் வரிசையில் குறிப்பிடப்படல் வேண்டும்") விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத, தெளிவில்லாத அல்லது மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

மருத்துவ பீடம் - applyme@kln.ac.lk

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்விசார் நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனங்களின் தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்,
களனி பல்கலைக்கழகம்,
களனி.
09.12.2021

இலங்கை போக்குவரத்துச் சபை

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு (EOI)

இ.போ.ச. ஊழியர்களுக்கு காப்புறுதி காப்பீட்டை வழங்குதல்

(SLTB/TS/GEN/Insurance Emp/2021)

1. இ.போ.ச நிரந்தர ஊழியர்களுக்கான காப்புறுதி காப்பீட்டை வழங்குவதற்காக, காப்புறுதி சேவை வழங்குநர்களை தேர்ந்தெடுப்பதற்காக தகைமையான, நம்பகமான காப்புறுதி சேவை வழங்குநர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு, இலங்கைப் போக்குவரத்து சபையின் சார்பாக, இ.போ.ச. பாரிய பெறுகைக் குழுவின் தலைவரால் இத்தால் அழைக்கப்படுகின்றன. நாடளாவிய ரீதியிலான இ.போ.ச வேலை, தளங்களின் இ.போ.ச ஊழியர்களுக்கிடையில் அவர்களது காப்புறுதி தயாரிப்பை மேம்படுத்துவதற்கான உரிமைகளை தேர்ந்தெடுக்கப்படும் காப்புறுதி சேவை வழங்குநர் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும்.

2. கீழ்க்காணும் தகைமைகள் அனுபவம் மற்றும் வர்த்தக பரும அளவை கொண்டுள்ள பிரேரிப்பவர் மாத்திரம் EOI ஐ சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.

   i. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்துள்ளவராக பிரேரிப்பவர் இருத்தல் வேண்டும்.

   ii. உயிர் மற்றும் மருத்துவ காப்புறுதி காப்பீடுகளினை வழங்குவதில் குறைந்தபட்சம் (05) வருடங்கள் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் காப்புறுதி கம்பனியை பிரேரிப்பவர் கொண்டிருத்தல் வேண்டும்.

   iii. 2020ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 2.5 மில்லியனுக்கு குறையாத பொது காப்புறுதியின் பிரரேரிப்பவரின் மொத்த எழுத்து மூல காப்பீடு அவர்களது தகைமையை உறுதி செய்வதற்கு மேற்படி i, ii, iii, இற்கான ஆவணச் சான்றுகளை பிரேரிப்பவர் வழங்குமாறு கேட்கப்படுகின்றனர்.

3. ஓர் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 20,000/- செலுத்துவதன் பேரில் 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் 2021.12.13 முதல் 2022.01.03 வரை சாதாரண வேலை நாட்களிலும் இலங்கை, கொழும்பு 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி EOI ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கொள்வனவு செய்யப்படும் ஆவணங்களில் மட்டும் பயன்படுத்தி EOI ஐ சமர்ப்பித்தல் வேண்டும்.

4. EOI 2022.04.08 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

5. EOI ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் அவர்களது சீல் இடப்பட்டு பிரேரிப்பவர்களால் ஒப்பமிடப்படல் வேண்டும்.

6. EOI பொறியிடப்பட்ட உறையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொறியிடப்பட்ட உறைகளில் EOI இன் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' உள்ளடக்கப்பட்ட, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இபோச நிரந்தர ஊழியர்களின் காப்புறுதி காப்பீட்டை வழங்குதல்' என்று குறிப்பிட்டு, 2022.01.04 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் கெழும்பு -05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்கு பராமரிக்கப்படும் பெட்டியில் வைப்பிலிடலாம் அல்லது அதே முகவரிக்கு பதிவு தபாலில் தபாலிடலாம்.

7. மூடப்படும் நேரத்தின் பின் கிடைக்கும் EOI களை திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

8. EOI மூடப்பட்டவுடன் உடனடியாக, பிரேரிப்பவர்கள் அல்லது அவர்களது சமுகமளிப்பதற்காக தேந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9. இ.போ.ச பெறுகைக் குழுவானது எந்த EOI ஐயும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது செயற்பாட்டின் எந்த வேளையிலும் எல்லா EOI களையும் அல்லது ஒன்றை நிராகரிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் EOI ஐ தயாரித்தல் அல்லது விநியோகிப்பதுடன் பிரேரிப்பவருடன் தொடர்புபட்ட எந்த ஆகு செலவுகள் அல்லது செலவுகளுக்கும் இலங்கை போக்குவரத்து சபை பொறுப்புக்கூறமாட்டாது.

தலைவர்,
இபோச பெறுகைக் குழு,
இலங்கை போக்குவரத்து சபை
இல. 200, கிருல வீதி,
கொழும்பு - 05.

நீர்ப்பாசன அமைச்சு

வெற்றிடங்கள்

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP)

நிதி மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டமானது 2024ஆம் ஆண்டு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற, ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) இருந்து பெறப்பட்ட சலுகைக் கடன் வசதி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட எதிர்நிலை நிதியத்துடன் நீர்ப்பாசன அமைச்சு மூலம் முன்னெடுக்கப்படும் மகாவலி பல்நோக்கு அபிவிருத்தி திட்ட முதன்மை திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

விண்ணப்பங்கள்:

ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதியுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2021.12.27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இரு உறவினர் அல்லாத பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடன் கல்வி, தொழில் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உள்ளடக்கிய தமது சுயவிபரக் கோவைக் கொண்டதாக தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புமாறு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். மேலும் இதே விண்ணப்பத்தின் மேலதிக பிரதியொன்றை மின்னஞ்சலின் Subject விடத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு pdadbproject@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பி hr.mwsip@gmail.com எனும் மின்னஞ்சலுக்குப் பிரதியிடவும்.

திட்டப் பணிப்பாளர்,
மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,
இல. 493-1/1, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும். எனவே, ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவது அல்லது எந்த ஒரு செல்வாக்கு செலுத்தலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். அடிப்படை தகைமைகளை நிரூபிப்பதற்கு சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் என்பதோடு முழுமை பெறாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். அரச சேவைகள்/ சட்டரீதியான சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த அபேட்சகர்களின் விண்ணப்பங்கள், தேர்வு செய்யப்பட்டால் முழு நேர அடிப்படையில் விண்ணப்பதாரர்களை விடுவிப்பதை குறிப்பிட்டு முறையே தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

பதவிகள் மற்றும் தொழில் விபரம்	தகைமைகள் மற்றும் அனுபவம்
1. பணிப்பாளர் (SIWRM) (PS-02) **திட்ட முகாமைத்துவ பிரிவு, கொழும்பு.**	* தகைமைகள் 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமாகும். தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2021-11-19ஆம் திகதி பிரசுரமான தினகரன் பத்திரிகையின் 19ஆம் பக்கத்தைப் பார்க்கவும். (சம்பள அளவு: PS-2 - ரூ.185,000.00 - ரூ.205,000.00)
02. பெறுகை நிபுணர் (PS 03) திட்ட முகாமைத்துவ பிரிவு, கொழும்பு. **தொழில் விபரம்** கடன் / மானிய ஒப்பந்தம் மற்றும் அல்லது செயற்றிட்ட அமுலாக்கத் திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, திட்டத் தயாரிப்பு மற்றும் செயல்படுத்தலின் அனைத்து அம்சங்களிலும் கொள்வனவு மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத் துறையில் தொடர்புடைய தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல். ● கொள்வனவில் திட்ட நடவடிக்கைகளைக் கையாளுதல் ● தொடர்புடைய பிரிவுகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் ஆலோசகர்களுடன் தொடர்பு கொண்டு பொருந்தக்கூடிய தரநிலைகள் மற்றும் நீர்ப்பாசனம் / நீர்வளத் திட்டங்களை நிர்மாணித்தல், வாகனங்கள், பொறித்தொகுதிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு விபரக்குறிப்புகளைப் பிரயோகித்தல். ● கொள்வனவு மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ விடயங்களில் மற்றைய குழு உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளல் / ஆலோசனைகளை மேற்கொள்ளுதல். ● நன்கொடை வழங்கும் முகவர் மற்றும் துறை அமைச்சகங்களுடன் தொடர்பு கொள்ளுதல் ● கொள்வனவு திட்டத்தை தயாரித்தல், அதன் செயலாக்கத்தை கண்காணித்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல். ● TEC மற்றும் கொள்வனவு குழுக்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள். ● செயற்றிட்டப் பணிப்பாளரால் ஒதுக்கப்படும் ஏனைய இயைபுடைய பணிகள்.	* தகைமைகள் 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமாகும். 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணிப்பட்டம் ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் **அல்லது** சிவில் பொறியியல் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்திற்குச் சமமான ஒரு தகைமை **அல்லது** சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த ஒரு தொழில்சார் தகைமை **அத்துடன்** முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 14 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம். 2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணிப்பட்டம் ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் **அல்லது** சிவில் பொறியியல் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்திற்குச் சமமான ஒரு தகைமை **அல்லது** சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த ஒரு தொழில்சார் தகைமை **மற்றும்** சிவில் பொறியியல் துறையில் பெற்றுக்கொண்ட பட்டப்பின்படிப்பு பட்டம், கூட்டு / பட்டய அங்கத்துவம் அல்லது சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட நிகரான தொழில்சார் தகைமை **அத்துடன்** முகாமைத்துவமட்டத்தில் ஆகக் குறைந்தது 10 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம். 3. நாடளாவிய அரசாங்க சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர் அல்லது சிவில் பொறியியலில் நிகரான நிலைமை. **அத்துடன்** I ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 05 வருடகால அனுபவம். (சம்பள அளவு: PS-3 - ரூபா 180,000.00 - ரூபா 195,000.00)
03. சிரேஷ்ட பொறியியலாளர் திட்ட முகாமைத்துவ பிரிவு, கொழும்பு. **தொழில் விபரம்** ● ஆலோசகர்கள்/ADB சமர்ப்பித்த அனைத்து வடிவமைப்புகள், ஒப்பந்த வரைபடங்கள், விவரக்குறிப்புகள், விலைக்கோரல் ஆவணங்கள், அனைத்து தொழில்நுட்ப அறிக்கைகள், சிறப்பு அறிக்கைகள் மற்றும் வடிவமைப்பு கையேடுகளை மீளாய்வு செய்து சான்றுபடுத்துதல். ● வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் அமுலாக்கல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் திட்டம் மற்றும் அதன் பகுதிகளை மேலதி-கமாக செயல்படுத்துதல். ● அனைத்து திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் ஒப்பந்த ஆவணங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் ● ஒப்பந்தங்களை நிர்வகித்தல். ● ஒப்பந்தக் கொடுப்பனவுகள் மற்றும் கோரி-க்கைகளை சரிபார்த்தல் மற்றும் அனுப்புதல். ● ஆலோசகர்கள் மற்றும் துறை அமைச்சகங்களுடன் தொடர்பு கொள்ளுதல் ● காணி சுவீகரித்தல் தொடர்பான நடவடி-க்கைகளை ஒருங்கிணைத்தல்.	* தகைமைகள் 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமாகும். 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது சிவில் பொறியியல் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்திற்குச் சமமான ஒரு தகைமை அல்லது சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த ஒரு தொழில்சார் தகைமை அத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 14 வருட கால தகைமைக்கு:ப் பின்னரான அனுபவம். 2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது சிவில் பொறியியல் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்திற்குச் சமமான ஒரு தகைமை அல்லது சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த ஒரு தொழில்சார் தகைமை மற்றும் சிவில் பொறியியல் துறையில் பெற்றுக்கொண்ட பட்டப் பின்படிப்பு பட்டம், கூட்டு / பட்டய அங்கத்துவம் அல்லது சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட நிகரான தொழில்சார் தகைமை அத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 10 வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம். 3. நாடளாவிய அரசாங்க சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர் அல்லது சிவில் பொறியியலில் நிகரான நிலைமை. அத்துடன் I ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 05 வருட கால அனுபவம். (சம்பள அளவு: PS-3 - ரூபா 180,000.00 - ரூபா 195,000.00)

* 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்கள (MSD) சுற்றுநிருபத்திற்கு அமைய மேல் கூறப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கப்பப்படும்.

பொது நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்குக் குறையாதவர்களாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து உத்தியோகத்தர்களும் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பிணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுடன் தமது பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
3. இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள பணி அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.
4. இந்த பதவிகளுக்கான முன் நிபந்தனைகளாக ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும்.
5. செயற்றிட்டங்களின் தேவை மற்றும் செயல்திறன் அடிப்படையில் ஆண்டுதோறும் புதுப்பிக்கும் வகையில் ஓர் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும்.
6. 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் அதன் பின் மேற்கொள்ளப்பட்ட ஏதும் மாற்றங்களின் பிரகாரம் கொடுப்பனவுகளுடன் அரசாங்கம் அங்கீகரித்த சம்பளம் வழங்கப்படும். (http://www.treasury.gov.lk)

செயலாளர்
நீர்ப்பாசன அமைச்சு.

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

கமத்தொழில் அமைச்சு

சிறியளவிலான விவசாய வணிகங்களுக்கான பாதகமான தாக்கங்களைக் குறைக்கும் கருத்திட்டம்

கருத்திட்ட ஆளனியினருக்கான ஆட்சேர்ப்பு

கமத்தொழில் அமைச்சானது, கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் (IFAD) 41.7 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன், வறுமையைக் குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு செயற்பாட்டிற்கு பங்களிக்கும் வகையிலும், 40,000 கிராமிய விவசாயிகளை, பயிர்ச்செய்கையின்போது சுற்றுச்சூழலுக்கு இயைபாக்கமடையும் திறனையும், சந்தையில் பங்கேற்கும் திறனையும் கட்டியெழுப்பும் நோக்கிலும் செயற்படுத்தப்படவுள்ள, சிறியளவிலான விவசாய வணிகங்களுக்கான பாதகமான தாக்கங்களைக் குறைக்கும் இக்கருத்திட்டமானது, இலங்கையின் உலர் வலயத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இக்கருத்திட்டமானது 06 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், வடக்கு (வவுனியா, மன்னார்), வடமேல் (குருணாகல், புத்தளம்), மத்திய (மாத்தளை), கிழக்கு (அம்பாறை), மற்றும் ஊவா (மொணறாகலை) ஆகிய பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு - **www.agrimin.gov.lk**

கீழே காட்டப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய தகைமைகள் மற்றும் அனுபவம் வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கருத்திட்டப் பணிப்பாளர் (PS 01) - 01 பதவி

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில் (துறை: கமத்தொழில், நீர்ப்பாசன பொறியியல் விஞ்ஞானம், கருத்திட்ட முகாமைத்துவம் என்பன) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பட்டம்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உரிய துறையில் முதலாவது பட்டத்திற்கு சமமான தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை

அல்லது

உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தாபன / பட்டய அங்கத்துவம் / அதற்கு இணையான தொழில்சார் தகைமை

மற்றும்

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 12 வருட அனுபவம், அதில் 06 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

02. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில் (துறை : கமத்தொழில், நீர்ப்பாசன பொறியியல் விஞ்ஞானம், கருத்திட்ட முகாமைத்துவம் என்பன) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பட்டம்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உரிய துறையில் முதலாவது பட்டத்திற்கு சமமான தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை

அல்லது

உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தாபன / பட்டய அங்கத்துவம் / அதற்கு இணையான தொழில்சார் தகைமை

மற்றும்

தாபன / பட்டய அங்கத்துவம் அல்லது உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமமான தொழில்சார் தகைமை அல்லது உரிய துறையில் பட்டப்பின்படிப்பு

உடன்

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 10 வருட அனுபவம், அதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

03. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில் (துறை: கமத்தொழில், நீர்ப்பாசன பொறியியல் விஞ்ஞானம், கருத்திட்ட முகாமைத்துவம் என்பன) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பட்டம்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உரிய துறையில் முதலாவது பட்டத்திற்கு சமமான தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை

மற்றும்

உரிய துறையில் பட்டப்பின்படிப்பு

உடன்

தாபன / பட்டய அங்கத்துவம் அல்லது உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமமான தொழில்சார் தகைமை அல்லது உரிய துறையில் பட்டப்பின்படிப்பு

உடன்

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 08 வருட அனுபவம், அதில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

கணக்காளர் (PS 04) – 01 பதவி

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பட்டம்

அல்லது

உரிய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை

அல்லது

உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமமான அங்கத்துவம் / சமமான தொழில்சார் தகைமை

உடன்

உரிய துறையில் ஆகக்குறைந்தது 07 வருட அனுபவம்.

02. அரச நாடளாவிய சேவையில் III/II வகுப்பில் அல்லது அதற்கு மேலான அல்லது உரிய துறையில் சமமான நிலையிலுள்ள ஒரு உத்தியோகத்தராக இருத்தல்.

உடன்

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 07 வருட அனுபவம்.

தெரிவு செய்யும் முறை :

தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

சம்பள அளவுத்திட்டம் :

சம்பளமானது 2019.03.05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

தொழில் நிபந்தனைகள் :

அரச சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் இரண்டாம் நிலை அடிப்படையிலும், அரச சேவையைச் சாராத உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அனைத்து நியமனங்களும் முதலில் ஒரு வருட காலப்பகுதிக்கு அமைவதுடன் சிறந்த செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டு சேவை நீடிப்புச் செய்யப்படும்.

வயதெல்லை :

61 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் கருத்திட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.

விண்ணப்பங்கள் :

அனைத்து விண்ணப்பதாரிகளும், உறவினர் அல்லாத இரண்டு நபர்களது சிபாரிசுடன் கூடிய தமது சுயவிபரப் படிவத்தை, சான்றிதழ்களது பிரதிகளுடன் தயாரித்து, **2021 டிசம்பர் 27**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

தற்போது அரச / பகுதி அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அவர்களது உரிய திணைக்களத்தின் தலைவர் ஊடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கின்ற பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரை, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு
சிறியளவிலான விவசாய வணிகங்களுக்கான பாதகமான தாக்கங்களைக் குறைக்கும் கருத்திட்டம்,
80/5, "கொவிஜன மந்திரய", இராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

பொதுமக்களுக்கான அறிவித்தல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் **"கெம் செரிய"** பேருந்து சேவையினூடாக கிராமப்புற மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக இயங்கும் **"நிசி செரிய"** பேருந்து சேவையினூடாக பயணிகளுக்கு இரவு மற்றும் காலைநேர பயண போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்

- உங்கள் பகுதியில் பொது போக்குவரத்து இயங்காத சாலைகள் (பயணிகள் பேருந்துகள் இல்லை) இருப்பின்,
- தற்போது இரவு அல்லது காலை நேரங்களில் பேருந்து இயங்கினாலும் தொடர்ந்து இயங்கவில்லை எனில் இரவு மற்றும் காலை நேரங்களில் பொது போக்குவரத்து சேவைக்கான புதிய பேருந்து ஒன்று தேவைப்படுமானால்,

மேற்படி சேவைகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் **"கெம் செரிய"** மற்றும் **"நிசி செரிய"** திட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்டுள்ள சேவையினை ஆரம்பிக்க முடியும் என்பதால் உங்களின் கோரிக்கையை பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) : 0112-533145/பிரிவுத் தலைவர்: 0112-589344/தொலைநகல்: 0112-585297

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.
பெக்ஸ் : 0112-503725
chairman@ntc.gov.lk

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

சிசுசெரிய மாணவர் பேருந்து சேவை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் **"சிசுசெரிய"** பாடசாலை பேருந்து சேவையினூடாக மணவர்களுக்கு தமது பாடசாலைக்குச் சென்று வருவதற்கு சலுகை அடிப்படையிலான போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

- இந்த **சிசுசெரிய** மாணவர் பேருந்துச் சேவையானது உங்களுக்கோ அல்லது உங்கள் பாடசாலைக்கோ தேவைப்பட்டால், அந்தச் சேவையை ஆரம்பிக்கும் இடம் மற்றும் பயணிக்கும் பாதையில் அமைந்துள்ள பாடசாலையின் அதிபரின் பரிந்துரையுடன் பின்வரும் முகவரியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்து இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- நீங்கள் சிசுசெரிய பாடசாலை பேருந்து சேவையை இயக்க ஆர்வம் காட்டும் பேருந்து உரிமையாளராக இருப்பின், அதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அல்லது மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) : 0112-533145 / சிசு செரிய பிரிவின் தலைவர் - 0112-589344

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.
பெக்ஸ் : 0112-503725
chairman@ntc.gov.lk

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

2022 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திகதியின் நீடிப்பு

2021 ஒக்டோபர் 30 ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட வழங்குநர்களை பதிவு செய்யும் விளம்பரம் தொடர்பானது.

பிரிவுக் கட்டணம் செலுத்துவது மற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திகதி கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளவும்.

அதன்படி பின்வரும் திருத்தங்கள் செயற்படுத்தப்படுவதோடு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2022 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் பதிவின் பதிவு செய்தல் நடைமுறைகளுக்காக எதிர்பார்ப்புடைய வழங்குநர்களால் இந்த திருத்தங்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். கீழ் குறிப்பிடப்பட்டது தவிர்த்து, மேலுள்ள விளம்பரத்தில் தரப்பட்ட ஏனைய விபரங்கள் மாற்றமின்றி நீடிக்கிறது.

விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திகதி, பிரிவு கட்டணங்கள் செலுத்தல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெறுகையின் பெயர்	விண்ணப்ப இறுதித் திகதி	கட்டணம் செலுத்தும் இறுதித் திகதி (பிரிவு கட்டணங்கள்)
2022 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல் - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு (இலங்கை பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை உட்பட்டது(STF)	2021.12.27	2021.12.27

மேலதிக விபரங்களுக்கு பின்வருமாறு தொடர்புகொள்ளவும்;

முகவரி
தலைமை கணக்காளர்
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
14ஆவது மாடி, சுஹுருபாய,
பத்தரமுல்ல
மின்னஞ்சல்: caminlofinance@gmail.com

தொலைபேசி/ தொலைநகல் இலக்கம்
தொலைபேசி - 011-2887697
தொலைநகல் - 011-2887784

செயலாளர்,
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
14 ஆவது மாடி, சுஹுருபாய

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER ADZ Classified
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377

Sunday Observer ADZ தினகரன்
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

Any Single Newspaper	Two Newspapers	Three Newspapers
රු. 300/- (Except Thinakaran Varamanjari)	රු. 500/- (Except Thinakaran Varamanjari)	රු. 650/-

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

பிழைதிருத்தம்

அறிவித்தல்

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக் களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா/தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் கனிய அளவை உதவியாளர் பதவிக்கு ஆர்சேர்ப்புச் செய்வதற்காக போட்டிப் பரீட்சை - 2022

மேற்படி தலைப்பில் கடந்த 2021.12.03ம் திகதி 25ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் 2ஆம் விடயத்தில்

ஆர்சேர்ப்புச் செய்யும் தரம் III எனவும்

மேலதிக விபரங்கள் 05.11.2021 திகதியிட்ட 2353 வர்த்தமானி அறிவித்தலில் கொடுக்கப்படடுள்ளன எனவும் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

கேள்விகளுக்கான அழைப்பு

பொலன்னறுவையில் அஞ்சல் அலுவலகக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் – படிநிலை II

(ஒப்பந்த இலக்கம்: 04-03-13-2021/CT65)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 68.6 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவுடையதுமான ''பொலன்னறுவையில் அஞ்சல் அலுவலகக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் - படிநிலை II'' எனும் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.
   நிர்மாணக் காலம் 280 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்விகோரல் முறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C4 அல்லது C3 தரப்பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்படமாட்டாது
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு வளவுகள், பிரதேச செயலகம், கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 4), பிரதம பொறியியலாளர் அலுவலகம், பிரதம பொறியிலாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 065-2229801 தொலைநகல்: 065-2229807
5. மீளளிக்கப்படாத பதினைந்தாயிரம் (ரூபா 15,000.00) கட்டணத்தை 2021-12-13ஆம் திகதி முதல் 2021-12-29ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு வளவுகள், பிரதேச செயலகம், கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 4), பிரதம பொறியியலாளர் அலுவலகம், பிரதம பொறியிலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2021-12-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, 2ம் மாடி, கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 950,000.00 ரூபா தொகைக்கு
   * 2022 ஏப்ரல் 27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைகூறல் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப் பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ''செத்சிறிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு விலைகூறுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பொறி. எம்.எச்.எம். இஸ்மயில்,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,
கட்டிடங்கள் திணைக்களம்,
2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல.
www.buildings.gov.lk

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

NLDB

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை
பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தான ரிதியகம பண்ணையில் 2022ஆம் ஆண்டில் பயிர்ச் செய்கைக்காகப் பின்வரும் விதை தொகையை வழங்குவதற்காக தேசிய வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

உருப்படி	தேவையான தொகை KGs
சோளம் விதை	2000

பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதைத் தொகை விபரக்குறிப்புக்கள் (Specifications) மற்றும் விலைமனு நிபந்தனைகள் அடங்கிய விலைமனுப் படிவங்களை அலுவலக நேரங்களில் பின்வரும் முகவரியில் உள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின், வழங்கல் முகாமையாளரிடம் விண்ணப்பக்கடித மொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஒன்றிற்காக ரூபா 1,000.00 வீதம் மீளளிக்கப்படாத வைப்பொன்று அறவிடப்படும்.

2021 ஜனவரி 03 அன்று பி.ப. 3.30 வரை விலைமனுப்படிவங்கள் வழங்கப்படுவதுடன் 2022 ஜனவரி 04 அன்று பி.ப. 2.30 இற்கு விலைமனுக்கள் மூடப்படும். அந்நேரம் கடந்ததன் பின்னர் உடனடியாக, கொழும்பு 05 நாரஹேன்பிட்ட, நாவல வீதி, இலக்கம் 40 இல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் விலைமனுத் திறக்கப்படும். விலைமனுக்களை அடக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'ரிதியகம பண்ணைக்கு சோளம் விதைகளைக் கொள்வனவு செய்தல்' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு, மேற்படி தினத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,
இலக்கம் 40, நாவல வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு - 05
தொ.பே.இல: 0112501701/2
011-5746308

மக்கள் வங்கி
விலைமனுக்கோரல்
சுத்தப்படுத்தல் நடவடிக்கை

பிரதேச தலைமைக் காரியாலயம் நுவரெலியா, ஊழியர் விடுதி நுவரெலியா, கிளைகள், சேவை நிலையங்கள்

மக்கள் வங்கி பிரதேச தலைமைக் காரியாலயம் நுவரெலியா பிரதேசத்திற்குபட்ட 12 கிளைகள் 14 சேவை நிலையங்கள், ஊழியர் விடுதி நுவரெலியா, SBU Self Banking Units சுத்தப்படுத்தல் வேலைக்காக 01.01.2022 தொடக்கம் ஒரு வருட காலப்பகுதிக்காக தகைமையுடையவர்களிடமிருந்து (தனியார் அலுவலகங்கள்) விலைமனு கோரப்படுகின்றது.

இந்த விலைமனுக்கோரலின் நிபந்தனைகளுக்கு அமைவாக எம்மால் வெளியிடப்பட்ட அனுமதி பத்திரத்தினை பூரணப்படுத்தி 30.12.2021ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பிராந்திய முகாமையாளர், பிரதேச தலைமைக் காரியாலயம், மக்கள் வங்கி, இல.40 பூங்கா வீதி, நுவரெலியா என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் அல்லது நுவரெலியா பிரதேச தலைமைக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியில் இடவேண்டும்.

அனுமதி பத்திரங்களை கிழமை நாட்களில் வங்கி அலுவலக நேரத்தில் ரூபா.2000.00 பணம் செலுத்தி 22.12.2021ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மக்கள் வங்கி சுத்தப்படுத்தல் நடவடிக்கை 2022 என குறிப்பிடப்பட வேண்டும் 30.12.2021ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் பத்திரங்கள் அந்நேரத்தில் திறக்கப்படும்.

சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக் கோரல்களில் "சுத்தப்படுத்தல்" நடவடிக்கைகளுக்காக தகுதியானவர்களை தெரிவு செய்யும் உரிமை பிரதேச தலைமைக் காரியாலயத்தின் விலைமனுக்கோரல் சபையிடமே உள்ளது. விலைமனுக்கோரல் சபையின் தீர்ப்பே இறுதியானதாகும்.

பிராந்திய முகாமையாளர்
பிரதேச தலைமைக்காரியாலயம்
மக்கள் வங்கி,
இல.40, பூங்கா வீதி,
நுவரெலியா.
052-2222555, 052-2235282

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
(நர்ட் மத்திய நிலையம்)
ஏக்கல ஜா-எல

2022/2023 ஆண்டில் நர்ட் மத்திய நிலையத்தில் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மத்திய நிலையத்தின் வளாகத்திலுள்ள புல் வெட்டுதல்

விலைமனு இலக்கம்: NERDC/DPC/Minor(s)/03/21

நர்ட் மத்திய நிலையத்தில் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மத்தியநிலைய வளாகத்தின் புல்வெட்டும் சேவையை ஒருவருட காலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்காக பெறுகைக்குழுவின் தலைவரினால், குறித்த துறையில் அனுபவமுள்ள வழங்குநர்களிடமிருந்து 2021.12.30 அன்று பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைவர், திணைக்களப் பெறுகைக்குழுவிற்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, 2021.12.13 முதல் 2021.12.28 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூபா 500/- இற்கான கட்டணத்தைப் பணமாகச் செலுத்தி விலைமனுப்படிவங்களைக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில், அனைத்து விலைமனுக்களுடனும், மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையமொன்றாக ரூபா 10,000.00 தொகை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை தாபனத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு விலைமனு மூலப் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும்.

களப்பரிசீலனை மற்றும் மேலதிக விபரங்களிற்காக அலுவலக நேரங்களில் பெறுகைப்பிரிவை அழைக்கவும்.

விலைமனு முன்னோடிச் சந்திப்பு: 2021.12.19 அன்று மு.ப. 10.00 இற்கு இந்நிலையத்தின் குலசிங்ஹ கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

தலைவர் - திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி
மற்றும் அபிவிருத்தி நிலையம்.
(நர்ட் மத்திய நிலையம்),
28P/17B கைத்தொழில் பேட்டை, ஏக்கல - ஜா-எல.
தொ.பே.இல: 011-2236284, 2236307, 011-5852103
மின்னஞ்சல்: supplies@nerdc.lk

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

பொது அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெரிய அளவிலான வாகனங்கள் அதில் குறிப்பிட்டுள்ள பாதையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களில் பயணம் செய்யும் என்பதை பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

திகதிகள் 2021 டிசம்பர் 13 ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 19 ஆம் திகதி வரையும்.

வாகன இலக்கங்கள்: 47 –- 4578, LY - 0258, G – 21- 5014, G-21 – 5015

பயணம் செய்யும் வழி:
டி சேரம் கேட் - அளுத்மாவத்தை வீதி, மருதானை, பொறளை, கிருளப்பன, பிலியந்தல மாற்றுவழி வீதி- கெஸ்பாவ, கஹதுடுவ, ஹொரண வீதி, ஹொரண, வகாவத்த வீதி, பொறுவாதந்த, கணுமாசகல வீதி, வகாவத்த இ.மி.சபை கிறிட் உப-நிலையம்.

நேரம்:
பி.ப. 4 மணிக்கும் மு.ப. 4 மணிக்குமிடையில். பெரிய அளவிலான வாகனங்களுக்கு தற்காலிக்க பயண அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட தேவைப்படுத்தலை பூர்த்தி செய்வதற்காகவே இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

ACE DISTRIPARKS (PVT) LD

2022ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வாகனங்களை ஒழுங்குறுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் இரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் வ/ப லக்திவ இன்ஜினேரு (தனி) கம்பனி

இலக்கம் 73, மினுவங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல என்ற முகவரியில் இயங்கும், வாகனங்களை ஒழுங்குறுத்தும், பஸ்போக்குவரத்துச் சேவைகள் மற்றும் இரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகனக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சுடன் இணைந்த வ/ப லக்திவ இன்ஜினேறு (தனி) கம்பனிக்கு 2022ஆம் ஆண்டில் தேவையான பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காகப் பின்வரும் தகவுத்திறன்களைப் பூரணப்படுத்தும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக, 2021.12.30 அன்று பி.ப. 3.00 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுக் கட்டணமாக ரூபா. 2,000.00 ஐ கணக்குப் பிரிவில் செலுத்தி விண்ணப்பப்படிவமொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அல்லது பின்வரும் மாதிரிப்படிவத்திற்கமைவாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்று, கணக்காளர், வ/ப லக்திவ இன்ஜினேரு (தனி) கம்பனி, கணக்குஇலக்கம் 404914 இலங்கை வங்கி, ஜா-எல என்ற கணக்கிற்கு ரூபா 2,000.00 ஐ வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டுடன் 2021.12.30 அன்று பி.ப. 03.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், '2022ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். இதற்கான விபரங்கள் பின்வருமாறு:

தகைமைகள் மற்றும் தகவுத்திறன்கள்:

- எப்பொழுதாவது அரச நிறுவனமொன்றின் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
- பண்டங்கள் மற்றும் சேவை வழங்கல் தொடர்பாக வியாபாரப் பெயர் பதிவு/ கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுச்செய்யப் பெற்றுள்ள நிறுவனமொன்று/ நபரொருவராக இருத்தல் வேண்டும்.
- கடன் வசதிகளின் அடிப்படையில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான இயலுமை இருத்தல் வேண்டும்.
- கட்டளை பிறப்பிக்கப்படும் ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் தாமதமின்றி குறித்த காலத்தினுள் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இயலுமை மற்றும் கையிருப்புத் தொகைவைத்து இருத்தல் வேண்டும்.
- தேவையான பொழுது, பெறுகைக்குழுவிற்கு பண்டங்களின் மாதிரிகளை வழங்குவதற்கு வழங்குநர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
- கடந்த ஆண்டுகளில், இந்த நிறுவனத்திற்கு உரியவாறு வழங்கல்களை மேற்கொள்ளாத, வழங்கல்களைப் புறக்கனித்த நபர்கள்/ நிறுவனங்கள் பதிவு செய்யப்படமாட்டார்கள்.
- விலைமனுக்கள் குறைந்தபட்சம் 06 மாதங்களிற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் வேறு வழங்குநர்களிடமிருந்தும் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை கம்பனிக்கு உரித்தாகும்.
- உரித்தான தரம் அல்லது பண்பற்ற பண்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1. பண்டங்களின் வழங்கல் தொகை மற்றும் சில்லறை

உருப்படி இலக்கம் **உருப்படி விபரம்**

1. பஸ் பொடிகளைப் புதுப்பிப்பதற்கான அனைத்து வகையான பண்டங்கள் (இரும்பு, அலுமினியம் உட்பட அனைத்தும்)
2. பஸ் பொடி வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான மூலப் பொருட்கள்
3. வாகன மின் உதிரிப்பாகங்கள்.
4. வாகனங்களிற்கான உதிரிப்பாகங்கள்.
5. அனைத்து வாகனங்களினதும் உதிரிப்பாகங்கள் (புத்தம் புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்டவை)
6. அனைத்து வாகனங்களிற்குமான உராய்வு நீக்கி எண்ணெய் வகைகள்.
7. வாகனங்களிற்கான டயர் மற்றும் பெற்றறிகள்.
8. வாகனங்களின் சேர்விசுகளில் பயன்படுத்தப்படும் அனைத்துவகையான பதார்த்தங்கள்
9. அனைத்து வகையான எழுது கருவிகள் மற்றும் அச்சுப்படிவங்கள், ஆவணங்களை வழங்கல் (ரிபன், டோனர் உட்பட அனைத்தும்)
10. அலுவலக இயந்திராதிகளை வழங்கல் (கணனி, ஸ்கேன், நிழற்படப்பிரதி, தொலைநகல் இயந்திரம், விரல் அடையாளப் பொறி, CCTV கெமராக்கள்)
11. கட்டிடப் பொருட்கள் வழங்கல்
12. உள்ளக மின்சார உதிரிப்பாகங்கள் மற்றும் வளிச்சீராக்கிகள்.
13. சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்புப் பதார்த்தங்கள் வழங்கல் (தொற்று நீக்கிகள், கையுறைகள், கம்பூட்ஸ், தும்புத்தடிகள், கூட்டுமாறுகள்)
14. தைக்கப்பட்ட ஆடைகள், திரைச்சீலைகள் போன்றவற்றை வழங்கல்.
15. அலுவலக உபகரணங்களை வழங்கல். (இரும்புக்கப்பட், கதிரைகள், மேசைகள் போன்றவை)
16. பாதுகாப்பு உபகரணங்கள் (தொழிற்சாலை ஊழியர்களிற்கானவை)
17. வீட்டுத்தோட்ட அலங்கரிப்பு உபகரணங்கள் மற்றும் தேவையான பதார்த்தங்கள்
18. விளையாட்டுப் பண்டங்கள்,
19. முதலுதவி உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள்.

2. சேவைகள்:

உருப்படி இலக்கம் **உருப்படி விபரம்**

1. வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசு
2. அலுவலக உபகரணங்களைப் புதுப்பித்தல்
3. சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகள்
4. அச்சு நடவடிக்கைகள்
5. கட்டிட நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல் மற்றும் உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல்
6. மின்சார வழங்கல்களைப் புதுப்பித்தல்.
7. உசாத்துணை சேவைகள்
8. ஒப்பந்த அடிப்படையில் பஸ் பொடிகளைப்புதுப்பித்தல் மற்றும் வர்ணம் பூசுதல்
9. உள்ளக வளிச்சீராக்கிகளைப் புதுப்பித்தல்
10. அலுவலக கணனிகள், தொலைபேசிகள், பாதுகாப்புக் கெமராக்கள் விரல் அடையாளப் பொறிகளின் சேவைகளை நடைமுறைப்படுத்தல்

மாதிரி விண்ணப்பப்படிவம்.

1. நிறுவனத்தின் பெயர் :
2. முகவரி :
3. தொலைபேசி இலக்கம் :
4. வியாபாரப் பதிவு இலக்கம் :
   (வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று, கழராதவாறு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்)
5. மின்னஞ்சல் முகவரி :
6. கட்டணம் செலுத்தியவங்கி மற்றும் கிளை :
7. பதிவு செய்யும் துறை : பண்டங்கள் ☐ சேவைகள் ☐
   (உரித்தான கூட்டில் புள்ளடி இடவும்.)
   7.1 பண்டங்கள் மற்றும் சேவை உருப்படிகளின் இலக்கம்.
   7.2 பண்டங்கள் அல்லது சேவை உருப்படியின் விபரத்தின் பிரகாரம்
   (லக்திவ இன்ஜினியரிங் நிறுவனம் குறி உள்ளவாறு குறித்த விபரங்களைக் குறிப்பிடவும்.)

தலைவர்,
பெறுகைக்குழு,
வ/ப லக்திவ இன்ஜினியரிங் (தனி) கம்பனி
ஏக்கல, ஜா-எல
தொ.பே. 0112236530, 0112236458

அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
கோல்டன் வோட்டர் ட்ரொப் (பிரைவட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: PV00249505

பதிவு முகவரி :
61/B, பலப்பிட்டியகொட தெபுவன களுத்துறை, அஞ்சல் குறியீடு 12008

கம்பனி செயலாளர்
KKD ரொசிட்டா பிரெட்ரிக்

அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
ஸான்டாய் (பிரைவட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: PV00246939

பதிவு முகவரி :
இல. 11/7, முதலாம்லேன், விஜய மாவத்த, மினுவன்கொடை

கம்பனி செயலாளர்கள்
KKD ரொசிட்டா பிரெட்ரிக்

Repeat Your ad For Better Offers

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு பகிரங்க நொத்தாரிசு டீ.எஸ். வெலுவங்க மூலம் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதிய இலக்க 2604 கொண்ட அற்றோணி தத்துவத்தின் மூலம் ஐகெயா மார்கட்டின் பிறைவட் லிமிடெட் பணிப்பாளர் மொஹமட் ஹனீபா மொஹமட் நவாப் மூலம் ரன்பிம ஹோல்டிங்ஸ் லங்கா பிறைவட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவம் இன்று தொடக்கம் இரத்துச் செய்யப்படுகிறது என்பதை அறியத்தருகிறோம்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

விலைமனுக்கோரல்

இரண்டு (02) எண்ணிக்கையிலான நெட்வொர்க் சேமிப்பக நிலைமாற்றிகளை (NETWORK STORAGE SWITCHES) வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் இரண்டு (02) எண்ணிக்கையிலான நெட்வொர்க் சேமிப்பக நிலைமாற்றிகளை (NETWORK STORAGE SWITCHES) வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,000.00** கட்டணத்தினை செலுத்தி **2021.12.30** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப. 09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2021.12.31 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"இரண்டு (02) எண்ணிக்கையிலான நெட்வொர்க் சேமிப்பக நிலைமாற்றிகளை (NETWORK STORAGE SWITCHES) வழங்குதல் நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 8.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

விலைமனுக்கோரல்

11 எண்ணிக்கையிலான IBM சர்வர்களை வருடாந்திர சர்வர் பராமரிப்பு செய்வதற்கான ஒப்பந்த கொள்முதல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் 11 எண்ணிக்கையிலான IBM சர்வர்களை வருடாந்திர சர்வர் பராமரிப்பு செய்வதற்கான ஒப்பந்த கொள்முதலுக்கான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2021.12.30** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப. 09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2021.12.31 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"11 எண்ணிக்கையிலான IBM சர்வர்களை வருடாந்திர சர்வர் பராமரிப்பு செய்வதற்கான ஒப்பந்த கொள்முதல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 8.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

விலைமனுக்கோரல்

Dell EMC 300 சேமிப்பகத்திற்கான சேவை நிலை ஒப்பந்தத்தின் கொள்முதல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் Dell EMC 300 சேமிப்பகத்திற்கான சேவை நிலை ஒப்பந்தத்த கொள்முதலுக்கான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2021.12.30** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப. 09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2021.12.31 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"Dell EMC 300 சேமிப்பகத்திற்கான சேவை நிலை ஒப்பந்த கொள்முதல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 8

கமி நவீகரண வியாபாரிய
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

விவசாயதுறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -

கமத்தொழில் அமைச்சு – IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

வட மத்திய மாகாண பொலன்னறுவையிலுள்ள காளான் செய்கை நிலையத்திற்கான அணுகுவழியை நிர்மாணித்தல்

Contract No.: LK-MOA-PMU-145823-CW-RFB

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயதுறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான பல்வகையான நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. கீழேயுள்ள அம்சத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயதுறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட மாகாண பெறுகைக்குழுத் தலைவர் தனித்தனியாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

ஒப்பந்த இலக்கம்	வேலையின் விளக்கம்	பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில்.ரூபாவில்)	ஒப்பந்தக் காலப் பகுதி	தேவைப்படும் தரம்	விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்)	விலமனுப் பிணை செல்லுபடி யாகும் காலப்பகுதி	மீளளிக்கப் படாத ரொக்கப்பண வைப்பு (ரூபாவில்)
LK-MOA-PMU-145823-CW-RFB	பொலன்னறுவ மாவட்டத்தின் காளான் செய்கை நிலையத்திற்கான அணுகுவழியை நிர்மாணித்தல்	12.77	3 மாதங்கள்	வீதி மற்றும் பாலங்கள் - சி-6 அல்லது மேற்பட்டது	127,700.00	2022 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையும்	3,500.00

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை விவசாயதுறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM இடப்பரப்பில் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தில் 2021 டிசம்பர் 24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

6. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் செயற்றிட்ட மாகாண நிதி முகாமையாளரிடம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7. 2022 சனவரி 10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 2022 சனவரி 10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியாக மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக சேர்க்கப்பட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். பின்னர், இவ்விரண்டு தபாலுறைகளும் தனியானதொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

தலைவர்,
மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
NIPHM இடப்பரப்பு, ஜயந்தி மாவத்தை,
அநுராதபுரம்.

தொலைபேசி: 025-2227890/071 6902 271/077 618 9143/071 807 2078
திகதி: 08.12.2021.

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

பெறுகைக்கான அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட பாணந்துறை, அம்பலாங்கொடை மற்றும் வாழைச்சேனை துறைமுகங்களின் தாழ்நிலங்களில் (Harbour Basin) மற்றும் துறைமுக வாயில்பகுதிகளில் (Harbour Mouth) மணல் அகழ்வதற்காக, துறைமுக வளாகத்திற்குள் சிலாபம் முகத்துவாரத்தில் நியமிக்கப்பட்ட இடத்தில் மணல் அகழ்வதற்கான விலைமனுக்கோரல்

CFHC/PD/SAND /HAR (PAN/ABM/VAL/CHI) 2021/41-I-II-III-IV

வரையறுக்கப்பட்ட பாணந்துறை, அம்பலாங்கொடை மற்றும் வாழைச்சேனை துறைமுகங்களின் தாழ்நிலங்களில் (Harbour Basin) மற்றும் துறைமுக வாயில்பகுதிகளில் (Harbour Mouth) மணல் அகழ்வதற்காக, துறைமுக வளாகத்திற்குள் சிலாபம் முகத்துவாரத்தில் நியமிக்கப்பட்ட இடத்தில் மணல் அகழ்வதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து **2021.12.28** ஆம் திகதி **மு.ப.10.00** மணி வரை முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. இந்த பணிக்கான அகழ்வு ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு மட்டுமே ஏலம் வழங்கப்படும். அதன்படி, அகழ்ந்தெடுக்கப்பட்டு குவிக்கப்படும் ஒரு கனசதுர மணலுக்கான விலையை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

குறித்த முன்மொழிவினை சமர்ப்பிபதற்காக முதலில் எழுத்துப்பூர்வ விண்ணப்பமொன்றினை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் **ரூ.5,000/-** கட்டணத்தினை கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் காசாளர்களுக்கு அல்லது வரையறுக்கப்பட்ட பாணந்துறை/அம்பலாங்கொடை/வாழைச்சேனை/சிலாபம் மீன்பிடி துறைமுகங்களின் காசாளர்களிடம் **2021.12.13 ஆம் திகதி முதல் 2021.12.27 ஆம் திகதி மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணி வரை (அலுவலக நேரத்தில்) செலுத்தி தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவில் அல்லது சம்பந்தப்பட்ட துறைமுகத்தில் மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். முன்மொழிவுள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பிணையாக **ரூ.200,000.00** இனை செலுத்தவேண்டியது கட்டாயமாகும்.

அவ் விலைமனுக்கோரல் **வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் கொழும்பு 15** எனும் முகவரியில் மனுக்கள் சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது **2021.12.28** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு முன்னதாக பதவுத்தபால் மூலமாக அனுக்குதல் வேண்டும். **2021.12.28** ஆம் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடலோரப் பாதுகாப்புத் துறையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் உரிமங்களின்படி அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

மணல் அகழ்வுக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் பற்றிய தெளிவான அறிக்கை தேவைப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தின் பொறியியளாலர்களால் அவ் இயந்திரங்கள் நேரடியாக ஆய்வு செய்யப்படும்.

கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட நீர்நிலை ஆய்வு அறிக்கையின்படி அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அகழ்வு மேற்கொள்ளப்படும் இடத்தில் காணப்படும் தன்மைக்கு ஏற்ப அகழ்வுக்காகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களை வைத்திருப்பதும் கட்டாயமாகும்.

இது குறித்தான நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பத்தினை எமது கூட்டுத்தாபனத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் (www.cfhc.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கோரல் உள்ளடங்கிய கடித உறையின் மேல் **இடது பக்க மூலையில் துறைமுகத்தின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். (..... வரையறுக்கப்பட்ட துறைமுகத்தின் மணல் அகவினை குவிப்பதற்கான விலைமனுக்கோரல்)**

முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது. மனுக்கள் **2021.12.28** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு தலைமை அலுவலகத்தில் கொள்முதல் பிரிவில் திறக்கப்படுவதுடன் மனுக்கள் திறக்கப்படும் அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முகாமையாளர் (வே.ப.) (கொள்முதல்), தொலைப்பேசி இல : 011-2525063 அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

தலைவர்
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் நிலை மாற்றும்போதான பெயர் மாற்றத்தின் முறையே 2007 இன் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 11 (5) பிரிவின் விதிகள் தொடர்பில் இத்தால் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

நிறுவனத்தின் முந்தைய பெயர்	:	**Ex-Pack Corrugated Cartons Limited**
பதிவு இல.	:	**PV 3294 PB**
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி	:	**இல. 11ஏ, மைல்போஸ்ட் ஒழுங்கை, கொழும்பு 03**
நிறுவனத்தின் புதிய பெயர்	:	**Ex-Pack Corrugated Cartons PLC**

நிலை மாற்றும்போதான பெயர்மாற்ற தீர்மானத்தின் திகதி: 2021 நவம்பர் 10

மேலுள்ள நிறுவனத்தின் சார்பில்
பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் (பிறைவட்) லிமிடெட் - செயலாளர்கள்
இல. 08, டிக்கெல் வீதி, கொழும்பு 08.

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2021ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொழில் திணைக்களம்,
கொழும்பு -05.
2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07ஆம் திகதி

பி,கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
தொழில் ஆணையாளர் அதிபதி.

கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில்	}	வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா 976.24

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின்படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

வழங்குநர்களைப் பதிவு செய்தல்

ஜெயா கொள்கலன் டேர்மினல்ஸ் லிமிட்டட்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு

2022ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்படும் வகையிலான பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக தாமாக பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் நம்பகமான வழங்குநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
- நிர்மாணப் பொருட்கள் மற்றும் இயந்திராதி உருப்படிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
- ஏனைய சேவைகள்

ஒவ்வோர் பொருட்களின் உருப்படி அல்லது சேவைகளுக்கும் ஓர் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக ரூபா 2500/- (8% வெட் உள்ளடங்கலாக) பதிவு செய்வதற்கு ஆர்வமுள்ள வழங்குநர்கள் செலுத்துமாறு கேட்கப்படுகின்றனர். பதிவுக் கட்டணத்தை ஜயா கொள்கலன் டேர்மினல்ஸ் லிமிட்டட் இன் கணக்கு இலக்கம் 9482528 (இலங்கை வங்கி) இற்கு வைப்பிலிடலாம் அத்துடன் காசுகொடுப்பனவுகள் ஜ.கொ. லிமிட்டட் இன் நிதிப் பிரிவினாலும் ஏற்கப்படும் விண்ணப்பப்படிவத்துடன் பதிவு செய்தல் சிட்டையை பெக்ஸ் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பலாம் 2021 டிசம்பர் 31ம் திகதி அல்லது அதற்கு முன் கொழும்பு-15, வோல்ஸ் லேன், இல. 69, ஜயா கொள்கலன் டேர்மினல்ஸ் லிமிட்டட் தலைவரை அடையுமாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022' என்று தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

பெக்ஸ் - 011-2540042
இணையதளம் - jctfinance@gmail.com

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை ஜ.கொ. லிமிட்டட்இன் இணையதளம் www.jctltd.lk அல்லது வார நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 வரை ஜ. கொ. லிமிட்டட் இன் நிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வழமையாக பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும் எனினும், முறையே ஏனைய வழங்குநர்களிடம் இருந்தும் கொள்வனவிற்கான விலைமனுக்களை அழைக்கும் உரிமையை கம்பனி கொண்டிருக்கும்.

எந்த மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கும் 0701327048/ 0112540040-5 இன் மூலம் ஜ.கொ. லிமிட்டட் - கொள்வனவு நிறைவேற்றுதர அலுவரை நீங்கள் கொள்வனவு செய்யலாம்.

தலைவர்
ஜயா கொள்கலன் டேர்மினல்ஸ் லிமிட்டட்
இல. 69, வோல்ஸ்லேன்,
கொழும்பு 15.

கலன்பிந்துனுவெவ பிரதேச சபை

2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தில் கலன்பிந்துனுவெவ பிரதேச சபைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கு விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்துடன் விபரப் படிவமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக சகல விண்ணப்பப் படிவத்தின் பொருட்டும் 100.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி கலன்பிந்துனுவெவ பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உருப்படி இல.	வழங்க வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகள்	தொகை (ரூபா)
01	அலுவலக உபகரணங்களை வழங்குதல்	500.00
02	அலுவலக பாவனைப் பொருட்களை வழங்குதல்	500.00
03	அலுவலக சேவைகளை வழங்குதல்	500.00
04	பாடசாலை உபகரணங்களை வழங்குதல்	500.00
05	வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் கிரந்தங்களை வழங்குதல்	500.00
06	உணவுப் பொருட்கள் வழங்குதல்	500.00
07	உற்சவப் பொருட்கள் வழங்குதல்	500.00
08	வாகன திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல்	500.00
09	போக்குவரத்துச் சேவைகள் வழங்குதல்	500.00
10	கட்டிடப் பொருட்கள் வழங்குதல்	500.00
11	கணனி மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்	500.00
12	நீர்க் குழாய் துணைப்பாகங்கள் வழங்குதல்	500.00
13	மின்சார துணைப்பாகங்கள் வழங்குதல்	500.00
14	கனரக இயந்திரங்கள் மற்றும் நிர்மாண இயந்திரங்கள் வழங்குதல்	500.00
15	வாகன சேர்விஸ்கள் வழங்குதல்	500.00
16	அலுமினியம் மற்றும் இரும்பு உருக்கியொட்டும் வேலைகள் வழங்குதல்	500.00
17	தங்குமிட வசதிகள் வழங்குதல்	500.00

விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும் இறுதி நாள் - 2021-12-24
விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் - 2021-12-30

ஒவ்வொரு பொருள் மற்றும் சேவைகளுக்காக எதிரில் காட்டப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை ''தலைவர், பிரதேச சபை, கலென்பிந்துனுவெவ'' என எழுதப்பட்ட காசோலையொன்றின் மூலம் அல்லது காசுக் கட்டளையொன்றின் மூலம் செலுத்தலாம். ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் வாரத்தின் வேலை நாட்களில் கலென்பிந்துனுவெவ பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகைதந்து மு.ப. 8.30 - பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

ஜே.எம். ரத்நாயக்க,
தலைவர்,
கலென்பிந்துனுவெவ பிரதேச சபை.
தொலைபேசி: 025-2258232

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2021 ஜுன் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2021 டிசம்பர் 23ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

கிளை/ சேவைக்கருமபீடம்	மீட்கப்பட வேண்டிய கால எல்லை	ஏலவிற்பனை நடைபெறும் இடம்
கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை , யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புள்ளை	2021 ஜுன் 30ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள்	சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல.36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல. 46/12, சயுறு செவன,
நவம் மாவத்தை, கொழும்பு-02.

பதிவு இலக்கம்: PB 917PQ

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

மன்னார் நகரசபையினால் பண்டிகைக்கால தற்காலிக நடைபாதை வியாபாரத்திற்காக வழங்கப்படும் இடங்களுக்கான கேள்வி அறிவித்தல்

03.12.2021ஆந் திகதிய மன்னார் நகரசபையில் இடம்பெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு அமைய இறுக்கமான சுகாதார நடைமுறைகளின் கீழ் பின்வருமாறு பண்டிகைக்கால தற்காலிக நடைபாதை வியாபாரத்திற்கான இடம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கேள்விப்படிவம் விநியோகித்தல்	- 16.12.2021 வியாழக்கிழமை மு.ப 08.00 பி.ப 17..30
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்	- 17.12.2021 வெள்ளிக்கிழமை மு.ப 09.00 வரை
கேள்வி திறத்தல்	- 17.12.2021 வெள்ளிக்கிழமை மு.ப 09.30
வியாபார செயற்பாடு	- 18.12.2021 - 31.12.2021

- ❖ கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ள வருவோர் கொரோனாவிற்கான இரண்டு தடுப்பூசியினைப் பெற்றிருக்க வேண்டும்.
- ❖ மன்னார் நகரசபையினால் பண்டிகைக்கால தற்காலிக நடைபாதை வியாபாரத்திற்காக வழங்கப்படும் இடங்களுக்கான கேள்விப்படிவங்கள் வழங்கப்பட்டு கேள்வி கோரல் மூலம் சித்தி பெறும் கேள்விதாரர்களுக்கு கடைகளுக்கான இடங்கள் வழங்கப்படும்.
- ❖ கேள்விப்படிவம் ஒன்றின் விலை ரூபா 100.00 (ஒருவர் சபையால் கோரப்பட்ட எந்த கடைகளுக்கும் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் சித்தி பெற்ற ஒருவருக்கு இரு கடைக்கு மேல் வழங்கப்படமாட்டாது). அவ்வாறு சபையின் சட்ட நடைமுறைக்கு மாறாக இரண்டு கடைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் வியாபாரிகளிடமிருந்து மேலதிகமாக பெறப்பட்ட கடைகள் பறிமுதல் செய்யப்பட்டு வேறு ஒருவருக்கு கேள்வி கோரல் மூலம் வழங்கப்படுவதோடு கடைக்காக செலுத்தப்பட்ட கேள்வித் தொகையானது சபையால் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
- ❖ சித்தி பெற்ற ஒருவர் கடையினை மற்றொருவருக்கு கைமாற்றுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கைமாற்றப்படும் சந்தர்ப்பத்தில் உரிமையாளரிடமிருந்து கடை பறிமுதல் செய்யப்பட்டு மீள்கேள்வி கோரல் மூலம் வழங்கப்படும்.
- ❖ அதிகூடிய கேள்வித் தொகை கோருபவரே சித்தி பெற்ற கேள்விதாரர் ஆவார்.
- ❖ குறித்த தற்காலிகக்கடைகளிற்கான சித்தி பெற்ற கேள்விதாரர் அவரால் கோரப்பட்ட சித்தி பெற்ற கேள்வித்தொகையினை உடனடியாக மன்னார் நகரசபையில் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு சித்தி பெற்ற கேள்விதாரர் சித்தி பெற்ற கேள்வித் தொகையினை செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்து வரும் கேள்விதாரருக்கு வழங்கப்படும்.
- ❖ குறித்த கேள்வி தொடர்பில் ஒரு கடைக்கு ஒரே தொகையான கேள்வித் தொகையானது பலரால் கோரப்படும் பட்சத்தில் குலுக்கல் முறையின் மூலம் கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டு சித்திபெற்ற கேள்விதாரருக்கு தற்காலிக கடைக்கான இடமானது வழங்கப்படும்.
- ❖ ஒப்பந்த நடைமுறைக்கு முரணாக செயற்படும் வியாபாரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- ❖ தேநீர்சாலை, உணவகம், குளிர்பானம் மற்றும் அபாயகரமான பொருட்கள் போன்ற வியாபாரங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.
- ❖ இனிப்புப் பண்டங்களை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அனுமதி பெற்ற பின்னர் வியாபாரம் செய்ய முடியும்,
- ❖ மக்களை ஏமாற்றும் வகையில் நடைபெறும் சூது விளையாட்டுக்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
- ❖ தற்காலிகக் கடைகளிற்கான மின்விநியோகம் சபையினால் வழங்கப்படமாட்டாது என்பதுடன் மின்சாரம் அது தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் சபை பொறுப்பேற்கமாட்டாது.
- ❖ தங்கள் வியாபார செயற்பாட்டிலான திண்மக்கழிவுகளை கழிவகற்றல் பைகளிலிட்டு வேறுபடுத்தி (பொலித்தீன் & பிளாஸ்டிக், காட்போட் அட்டைகள் மற்றும் உணவுப்பொருட்கள்) நகரசபையின் கழிவு சேகரிக்கும் பிரிவினருக்கு வழங்குதல் வேண்டும்.
- ❖ சித்திபெற்ற கேள்விதாரர்கள் மன்னார் சுகாதார அதிகாரியின் அன்ரியன் மற்றும் மருத்துவ சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும். மேலும் தங்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டமைக்கான அட்டை தேசிய அடையாள அட்டையின் புகைப்பட பிரதி மற்றும் தற்காலிக வியாபார உரிமத்தின் பொருட்டு புகைப்படம் (Passpon Size) என்பனவற்றை நகரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ குறித்த கடையில் வியாபாரம் செய்யும் உரிமையாளர் மற்றும் 2 தொழிலாளிகளின் பெயர், அடையாள அட்டை பிரதிகள், கொவிட் தடுப்பூசி அட்டைப் பிரதி ஆகியவற்றை ஒப்பந்தம் செய்யும் தினத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் இவர்களில் யாராயினும் ஒருவர் கடையில் கடமையில் இருத்தல் வேண்டும்.
- ❖ தற்காலிகக் கடைகளிற்கான இடம் வழங்கல் தொடர்பான இறுதித் தீர்மானத்தினை, சபையின் தலைவரே மேற்கொள்வார்.
- ❖ மேற்கூறப்பட்ட நிபந்தனைகளில் யாதாயினும் ஒன்றை மீறுவோரது ஒப்பந்தத்தினை இரத்து செய்யும் உரிமை சபைக்கு உண்டு.

தலைவர்,
மன்னார் நகரசபை.
13.12.2021

பெறுகை அறிவித்தல்

மெத்சிரிசெவன கொவிட் 19 சிகிச்சைப் பிரிவில் நோயாளிகள் மற்றும் ஊழியர் குழாமிற்கு சமைத்த உணவுப் பார்சல் வழங்குவதற்கு விலைமனுக்கோரல் - 2022

போதனா வைத்தியசாலை, அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையுடன் இணைந்த மெத்சிரிசெவன கொவிட் 19 சிகிச்சைப் பிரிவில் தங்கியுள்ள நோயாளிகள் மற்றும் ஊழியர் குழாமிற்கு சமைத்த உணவுப் பார்சல் வழங்குதல் சார்பாக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல்
02. அநுராதபுரம் நகர எல்லைக்குள் உணவு தயாரித்தல் மற்றும் விநியோகிக்கும் விடயங்களை மேற்கொள்ளும் நிறுவனமாக இருத்தல்
03. அநுராதபுரம் மாநகர சபையின் சமைத்த உணவு வழங்கும் வியாபாரமாக பதிவு செய்திருத்தல்

மேற்படி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள், வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு, மீளளிக்கப்படாத ரூ. 3,000.00 தொகையைச் செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2021.12.13 முதல் 2022.01.03 வரை வார நாட்களில் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தவிர்ந்த) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டுதல் கடிதம் மற்றும் உணவு வழங்குவதற்காக வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியை, பணிப்பாளர், போதனா வைத்தியசாலைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

சரியாக மற்றும் தெளிவாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளுடன் தயாரித்து அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு தலைவர், பிரதேச பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு 2022.01.04 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் பெட்டியில் உள்ளிடலாம் விலைமனுக்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மெத்சிரி செவன கொவிட் 19 சிகிச்சை நிலையத்திற்கு சமைத்த உணவு வழங்குவதற்கு விலைமனுக்கோரல் - 2022, போதனா வைத்தியசாலை, அநுராதபுரம்' என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அன்றைய தினம் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரால் எழுத்துமூல அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

இப் பெறுகை சம்பந்தமாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
போதனா வைத்தியாசலை,
அநுராதபுரம்.
தொ.பே. இல. 025-2222261, 0252222262, 0252222263

விலைமனு அறிவித்தல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
சுத்திகரிப்பு பணிமனை
Repairing of Fixed Roof Type Oil Storage Tank No. 11 at Sapugaskanda Terminal
Tender No.: REF-PL/105/2021

சப்புகஸ்கந்தயிலுள்ள சப்புகஸ்கந்த டெர்மினலின் 11 ஆம் இலக்க fixed roof type எண்ணெய் களஞ்சியயடுத்தும் தாங்கியின் பழுதுபார்த்தலுக்காக திணைக்கள பெறுகைக் குழுவானது விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றது.

பின்வரும் தகைமைகளையுடைய விலைமனுதாரர்கள் மாத்திரமே விலைமனுக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெறுவதுடன் பின்வரும் தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவண சான்றை முன்வைக்கும் விலைமனுதாரர்களுக்கே வழங்கப்படும்.

- உள்ளூர் விலைமனுதாரர்கள் கடந்த 5 வருடங்களில் உருக்கு தாங்கி நிர்மாணம் / பராமரிப்பு வேலையை API Standard 650/653 (இறுதிப் பதிப்பு) இற்கமைவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இலங்கை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஈஎம்-3 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல்,

  அல்லது

  உள்ளூர் விலைமனுதாரர்கள் கடந்த 5 வருடங்களில் CPC/CPSTL அல்லது வேறேதாவது அரசாங்க அமைப்புக்களில் API Standard 650/653 (இறுதிப் பதிப்பு) இற்கமைவாக 30 மில்லியன் ரூபாவிற்கு குறையாத பெறுமதியில் உருக்கு தாங்கி நிர்மாணம் / பராமரிப்பு வேலையை API Standard 650/653 (இறுதிப் பதிப்பு) இற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட அனுபவம்.
- வெளிநாட்டு விலைமனுதாரர்கள் கடந்த 10 வருடங்களில் API Standard 650/653 (இறுதிப் பதிப்பு) இற்கமைவாக உருக்கு தாங்கி/ பராமரிப்பு வேலையை மேற்கொண்டிருந்ததிற்கான அனுபவம் அத்துடன் கடந்த 5 வருடங்களில் 150,000 அஜடொ இற்கு குறையாத பெறுமதியையுடைய ஆகக் குறைந்தது ஒரு உருக்கு தாங்கி நிர்மாணம் / பராமரிப்பு வேலையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தாங்கி நிர்மாணம்/பழுதுபார்த்தல் வேலையை CPC/CPSTL இனால் வழங்கப்பட்டும் தற்போது குறைந்த முன்னேற்றம் மற்றும் பூர்த்தி செய்வதில் தாமதத்தை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு விலைமனு ஆவணங்கள் வழங்கப்பட மாட்டாது. அத்துடன், முன்னர் தாங்கி நிர்மாணம் அல்லது பழுது பார்த்தல் வேலைகளை CPC/CPSTL இல் மேற்கொண்டு ஆகக்கூடிய தாமத தண்டப்பணத்தை சுமத்தப்பட்ட அல்லது ஒப்பந்தத்தை முடிவுறுத்தி செயற்பாட்டு உத்தரவாதத்தை வேலைத்தளத்தை கைவிட்டதால் கையகப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு விலைமனு ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.

விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் சுத்திகரிப்பு நிதி திணைக்களத்திற்கு அனைத்து வரிகள் அடங்கலாக 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத விலைமனு வைப்புத் தொகையாக செலுத்துதல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரமானது 2022 சனவரி 4 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு என்பதுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்ளும் இறுதி திகதி மற்றும் நேரமானது 2022 சனவரி 19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு என்பதுடன் விலைமனுக்கள் அவைகளை முடிய பின்னர் உடனடியாகவே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமை அலுவலக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பிரிவு, பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்களுக்கான பிரதி சுத்திகரிப்பு முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். www.ceypetco.gov.lk என்ற இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பார்வையிடலாம்.

தொலைபேசி – 0094-11-5668564/0094-11-2401359
தொலைநகல் – 0094-111-2401359/0094-11-2400431

தலைவர்(திணைக்கள பெறுகைக் குழு – கீழ் மட்டம்)
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,
சுத்திகரிப்பு பணிமனை,
சப்புகஸ்கந்த.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2021 டிசம்பர் 13 திங்கட்கிழமை

43ஆவது ஒப்சேர்வர் SLT Mobitel பாடசாலை கிரிக்கெட் விருது விழா

நாளை கொழும்பில்

பிரதம அதிதியாக அர்ஜுன ரணதுங்க பங்கேற்பு

எஸ்எல்ரி மொபிடெல் மற்றும் சண்டே ஒப்சேர்வரின் சூப்பர் பவர்ஸ் இந்த வாரம் நாட்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கு வெகுமதி அளிப்பதற்காக மீண்டும் ஒரு சூப்பர் அரங்கை உருவாக்க முடிந்தது.இவ்வாறாக, 43ஆவது ஒப்சர்வர் எஸ்எல்ரி மொபிடெல் பாடசாலைகளுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் இறுதிப் போட்டி கொழும்பு BMICH இல் நாளை செவ்வாய்க்கிழமை (14) மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்பவர் வேறு யாருமல்ல, இலங்கையை அதன் மிகவும் நேசத்துக்குரிய தருணத்திற்கு வழிநடத்தியவர் கிரிக்கெட், அர்ஜுன ரணதுங்க. 1996 மார்ச் 17, 1996 அன்று பாகிஸ்தானின் லாகூரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி அவுஸ்திரேலியாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இவரது தலைமையில்தான்.

1980 ஆம் ஆண்டில் ரஞ்சன் மடுகல்ல மற்றும் இரண்டு முறை கிரேண்ட் பட்டத்தை வென்ற முதல் பாடசாலை மாணவனுக்குப் பிறகு 1980 ஆம் ஆண்டில் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டரின் இரண்டாவது வெற்றியாளர் ரணதுங்க ஆவார்.

சுவாரஸ்யமாக, 1996 உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியானது ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் பட்டத்தை வென்றவர்கள் ரணதுங்க (1980 மற்றும் 1982), ரோஷான் மஹமாமா (1983 மற்றும் 1984), அசங்க குருசின்ஹா (1985), குமார் தர்மசேன (1989), மார்வன் அத்தப்பத்து (1990) மற்றும் முத்தையா முரளிதரன் (1991), 1996 உலகக் கிண்ண போட்டியில் தொடரின் நாயகன் சனத் ஜயசூர்ய, 1988 ஆம் ஆண்டில் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் வெளிமாவட்டத்துக்கான பட்டத்தை வென்றிருந்தார்.

ரணதுங்க மற்றும் அவரது உலகத்தை வீழ்த்திய அணிக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, 1996 உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் சிறப்பம்சங்கள் செவ்வாய்க்கிழமை BMICH இல் கிட்டத்தட்ட 450 பார்வையாளர்களுக்கு சூப்பர் ஜெயண்ட் திரையில் காண்பிக்கப்படும், அங்கு மெகா ஷோ கடுமையான ஆரோக்கியத்திற்கு ஏற்ப நடத்தப்படும். திறனில் 25% மட்டுமே வழிகாட்டுதல்கள்.

43 ஆண்டுகால மெகா ஷோ வரலாற்றில் முதல்முறையாக, ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒரே ஆண்டில் இருமுறை நடத்தப்படும். இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தான், கோவிட்19 தொற்றுநோய் காரணமாக 2020 ஆம் ஆண்டிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட 42வது ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் விருது வழங்கும் விழா நடைபெற்றது. அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களின் படி அதை நடத்துவதற்கு நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்.

202021 பருவத்தின் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் நடவடிக்கைகள் 1, 11 மற்றும் 111 போட்டிகள் மற்றும் சில பாரம்பரிய இரண்டு நாள் போட்டிகள் மற்றும் ரோயல் தோமியன் மூன்று நாள் போட்டிகள் ஆகிய மூன்று பிரிவுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், பாலைவனமாக இருப்பது நியாயமில்லை என்று நாங்கள் நினைத்தோம். பள்ளி துடுப்பாட்ட வீரர்களுக்கு ஊக்கம் மிகவும் தேவைப்படும் போது.

எனவே, இது எஸ்எல்ரி மொபிடெல் இன் பாராட்டுக்குரிய செயலாகும், மேலும் முழு கடன் அதன் குழுமத் தலைவர் ரொஹான் பெர்னாண்டோ, இலங்கை தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் (NOC) முன்னாள் துணைத் தலைவர் மற்றும் ரோயிங்கின் முன்னாள் தலைவர் தலைமையிலான அதன் தாய் நிறுவனமான ஸ்ரீலங்கா டெலிகொமுக்குச் செல்ல வேண்டும். இலங்கை சங்கம். எஸ். தோமஸில் இருந்த நாட்களில் ஒரு சிறந்த படகோட்டியான பெர்னாண்டோ, ஸ்ரீலங்கா டெலிகொம் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனவிரத்ன மற்றும் எஸ்எல்ரி மொபிடெல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சண்டிக விதாரண ஆகியோருடன் இணைந்து மெகா ஷோவுக்கான அனைத்து ஆதரவையும் வழங்கியுள்ளார்.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் மற்றும் இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் மற்றும் கோல் அடிப்பவர்கள் சங்கம் ஆகியவை சண்டே ஒப்சர்வர் மற்றும் எஸ்எல்ரி மொபிடெல் உடன் கைகோர்த்து எதையும் விட்டுவிடாமல் இருப்பதை உறுதிசெய்துள்ளன.

உண்மையில், சண்டே ஒப்சர்வர், 1970களில் பள்ளிக் கிரிக்கெட் தேசிய அமைப்பு பள்ளிப் போட்டிகளைப் பற்றி யோசிக்காத நிலையில், பள்ளிச் சிறு கிரிக்கெட் வீரர்களின் மூலத் திறமைகளை அங்கீகரிப்பதன் அவசியத்தைக் கண்டறிந்தது.

ஒப்சர்வர் ஸ்கூல்பாய் கிரிக்கெட்டர் ஆஃப் தி இயர்ன் வெற்றிக் கதையைப் பற்றி பேசும் போது, எஸ்எல்ரி மொபிடெல் 2008 ஆம் ஆண்டு முதல் ஆற்றிய ஆடம்பரமான பங்களிப்பை மறக்க முடியாது, குறிப்பாக கோவிட்19 தொற்றுநோய்களின் போது மெகா ஷோவை தடையின்றி நடத்த அதன் பங்கை மறக்க முடியாது. கடந்த இரண்டு வருடங்களில் மற்ற அனைத்து அனுசரணையாளர்களும் தங்கள் நிகழ்வுகளை கைவிட்டபோது, மெகா ஷோவை தொடர்ந்து நட த்த எஸ்எல்ரி மொபிடெல் சண்டே ஒப்சர்வருடன் உறுதியாக நின்றது.

கடந்த 1 5 வருடங்களாக Mega Show இன் பெருமைமிக்க அனுசரணையாளர் என்ற வகையில், எஸ்எல்ரி மொபிடெல் விளையாட்டின் தரம் மற்றும் தரத்தை மேம்படுத்த எங்களுக்கு பெரிதும் உதவியுள்ளது. பரிசுத் தொகையை கணிசமான அளவு அதிகரிக்கவும் உதவியிருக்கிறது. வீரர்களுக்கு மட்டுமன்றி அடுத்த தலைமுறை துடுப்பாட்ட வீரர்களின் திறமைகளை வடிவமைப்பதற்கும் கூர்மைப்படுத்துவதற்கும் தங்கள் முழு வாழ்க்கையையும் தியாகம் செய்யும் பயிற்சியாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதன் மூலம் எஸ்எல்ரி மொபிடெல் ஒரு மாபெரும் முன்னேற்றத்தை எடுத்துள்ளது.

மெகா ஷோவின் தரமானது 2008 ஆம் ஆண்டில் சிறந்த பள்ளி கிரிக்கெட் வீரர்களுக்கு ஆடம்பரமான பண ஊக்கத்தொகைகள் மற்றும் உயர்தர கோப்பைகளுடன் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைந்தது. திரைக்குப் பின்னால் ஒரு மௌனப் பணியைச் செய்த அவர்களது பயிற்சியாளர்கள் மற்றும் மாஸ்டர் இன் சேஞ்ச்களும் கூட மிகுந்த வெகுமதியைப் பெற்றுள்ளனர்.

இன்றைய பாடசாலை மற்றும் பாடசாலை மாணவிகள் கிரிக்கெட் வீரர்கள் ரணதுங்க போன்ற ஒரு புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரிடம் இருந்து சேகரிக்க நிறைய இருக்கிறது, அவர் சாதனை சாதனையை நிரூபிக்கிறார். அவர் நம்பகமான மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் ஆவார், அவர் நான்கு சதங்கள் மற்றும் 38 அரைசதங்கள் உட்பட 5,105 ஓட்டங்களை குவித்துள்ளார் மற்றும் 93 டெஸ்டில் 16 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

"நீங்கள் பல இடங்களுக்குச் சென்று பல உயர் மட்டங்களில் விருதுகளை வெல்லலாம், ஆனால் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் நிகழ்வில் பெற்ற விருது எந்த ஒரு கிரிக்கெட் வீரரின் வாழ்விலும் மறக்க முடியாததாக இருக்கும்" என்று ரணதுங்க கூறினார். .

ரணதுங்க தனது ஆரம்ப காலத்திலிருந்து ஜூனியர் பாடசாலை கிரிக்கெட் வீரராக இருந்து, உலக கிரிக்கெட்டில் ஒரு ஜாம்பவான் என்ற வகையில் தனது விளையாட்டு வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இடங்களுக்கு செல்ல நீண்ட தூரம் வந்துள்ளார். இலங்கை அணிக்காக 269 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள ரணதுங்க 4 சதங்கள் மற்றும் 49 அரைசதங்களுடன் 7,456 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் அதிகாரபூர்வமாக 1979 இல் தொடங்கப்பட்டாலும், சண்டே ஒப்சர்வர் விருதுகள் நிகழ்ச்சி முதலில் 1975 இல் தொடங்கியதாக பதிவுகள் உள்ளன. இலங்கையின் அறிமுக டெஸ்ட் அணியில் சர்ச்சைக்குரிய 12 வது வீரரான நாலந்த கிரிக்கெட் வீரர் அனுர ரணசிங்க, பாடசாலை கிரிக்கெட்டின் பார்வையாளர் ஆவார். 1975 ஆம் ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டு 1976 ஆம் ஆண்டு.

1977 இல் நிகழ்ச்சி நடைபெறாவிட்டாலும், 1978 இல் விருது வழங்கும் நிகழ்ச்சி மீண்டும் தொடங்கிய போது, ரஞ்சன் மடுகல்லே ஆண்டின் சிறந்த ஒப்சர்வர் பாடசாலை வீரர் கிரி க்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். போட்டியின் முதல் முறையான ஆண்டான 1979 இல் மடுகல்ல மீண்டும் ஒரு முறை பட்டத்தை வென்றார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரின் 11ஆவது லீக் போட்டி

திரில் வெற்றியினைப் பதிவு செய்த தம்புள்ளை ஜயன்ட்ஸ்

விறுவிறுப்புக்கு பஞ்சமின்றி நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரின் 11ஆவது லீக் போட்டியில், தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி கொழும்பு ஸ்டார்ஸ் வீரர்களை ஒரு ஓட்டத்தினால் வீழ்த்தியிருக்கின்றது.

மேலும் இந்த வெற்றியோடு தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி, எல்பிஎல் அணிகளுக்கான புள்ளிகள் தரவரிசையிலும் முதல் இடத்திற்கு முன்னேறியிருக்கின்றது.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் (11) ஆரம்பித்திருந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தசுன் ஷானக்க தலைமையிலான தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை தமக்காக பெற்றிருந்தது.

அதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணிக்கு ஆரம்பதுடுப்பாட்டவீரர்களில் ஒருவராகளம் வந்த நிரோஷன் டிக்வெல்ல அதிரடியான துவக்கம் ஒன்றினை வழங்கியிருந்தார். அதன்படி வெறும் 16 பந்துகளையே எதிர்கொண்ட நிரோஷன் டிக்வெல்ல 6 பௌண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்று, தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியின் முதல் விக்கெட்டாக சீக்குகே பிரசன்னவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்திருந்தார்.

நிரோஷன் டிக்வெல்லவின் அதிரடியினை அடுத்து கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் சுழல்பந்துவீச்சாளர்களான ஜெப்ரி வன்டர்சே, சீக்குகே பிரசன்ன ஆகியோரின் சுழலினை சமாளிப்பதில் தடுமாற்றம் கண்ட தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியின் முன்வரிசை துடுப்பாட்டவீரர்கள் சற்று மந்த கதியில் ஓட்டங்கள் குவிக்கத் தொடங்கினர். இதில் பில் சோல்ட் 21 ஓட்டங்களைப் பெற்றிருக்க, சொஹைப் மக்சூத் 24 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திருந்தார்.

பின்னர் தம்புள்ளை அணியின் மத்திய வரிசை வீரர்களும் ஏமாற்றமான துடுப்பாட்டத்தினையே தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணிக்காக வெளிப்படுத்தியிருந்தனர். இதில் அணித்தலைவர் தசுன் ஷானக்க பெற்ற 16 ஓட்டங்களே தம்புள்ளை ஜயன்ட்ஸ் தரப்பில் வீரர் ஒருவர் பெற்ற கூடுதல் ஓட்டங்களாக மாறியிருந்தது.

இதனையடுத்து தொடர்ந்து ரவி ராம்போலின் பந்துவீச்சினை எதிர்கொள்வதிலும் சரிவினைச் சந்திருந்த தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில் ரவி ராம்போல் மற்றும் ஜெப்ரி வென்டர்சே ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் சாய்க்க, சீக்குகே பிரசன்ன 2 விக்கெட்டுக்களை சுருட்டியிருந்தார்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 139 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி, வெற்றி இலக்கிற்கான பயணத்தில் தொடக்கத்தில் இருந்தே தடுமாற்றம் காட்டியிருந்தது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களில் ஒருவராக வந்திருந்த குசல் பெரேரா தரிந்து ரத்நாயக்கவின் சுழலில் வெறும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ஏனைய ஆரம்பவீரரான டொம் பன்டன் வெறும் 8 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து இம்ரான் தாஹிரின் சுழலிற்கு இரையாகினார். அதேநேரம், தாஹிரின் சுழலில் ஆட்டமிழந்த ஏனைய வீரரான அஷான் பிரியஞ்சன் வெறும் 3 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் களம் வந்த செர்பானே ரதர் போர்டும் 4 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதனால் கொழும்பு ஸ்டார்ஸ் அணி ஒரு கட்டத்தில் 38 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. எனினும், இந்த நேரத்தில் ஜோடி சேர்ந்த தினேஷ் சந்திமால் – தனஞ்சய டி சில்வா கொழும்பு ஸ்டார்ஸ் அணியினை கட்டியெழுப்பியிருந்ததுடன், தனன்ஞய டி சில்வா ஒரு சிக்ஸர் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 30 பந்துகளுக்கு 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

தனஞ்சய டி சில்வாவின் விக்கெட்டினை தொடர்ந்து கொழும்பு ஸ்டார்ஸ் அணி விக்கெட்டுக்களைக் தொடர்ச்சியாக பறிகொடுத்த போதும், தினேஷ் சந்திமால் தனது அதிரடியான ஆட்டம் மூலம் கொழும்பு ஸ்டார்ஸ் அணியினை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்ல முழு முயற்சியினையும் வழங்கியிருந்தார்.

தொடர்ந்து இந்த எல்பிஎல் தொடரில் பெற்ற முதல் அரைச்சதத்துடன் போட்டியினை இறுதி ஓவர் வரை கொண்டு சென்றிருந்த தினேஷ் சந்திமாலுக்கு, தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியினை வீழ்த்த சாமிக்க கருணாரட்ன வீசிய போட்டியின் இறுதிப்பந்தில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், சந்திமாலினால் போட்டியின் இறுதிப் பந்தில் நான்கு ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

இதனால் இறுதியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் வெறும் ஒரு ஓட்டத்தினால் துரதிஷ்ட தோல்வி ஒன்றினைத் தழுவியது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் இறுதிவரை ஆட்டமிழக்காது வெற்றிக்காக போராடியிருந்த தினேஷ் சந்திமால் 40 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்கள் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில் தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியின் பந்துவீச்சு சார்பில் தரிந்து ரத்நாயக்க 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும், இம்ரான் தாஹிர் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும் தமது தரப்பு வெற்றியினை உறுதி செய்திருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகன் விருது கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் தினேஷ் சந்திமாலுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 13ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.